24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


பக்கங்கள்: 40
விலை: 40

சுடர் 34 கதிர் 117 பங்குனி 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 24 மார்ச் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

➩ அனுசரணை வழங்கினால் தீர்மானங்களை ஏற்பதாக அர்த்தமில்லை
➩ இறையாண்மையை பாதிக்காதவற்றையே நடைமுறைப்படுத்துவோம்
➩ பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசெல்லவே முடியாது
➩ அரசமைப்பை மதித்து தமிழ்க் கூட்டமைப்பு நடக்கவேண்டும்
➩ பழைய சம்பவங்களை கிளறினால் மீண்டும் வன்முறை வெடிக்கும்

# யார் என்னதான் சொன்னாலும் கலப்பு நீதிமன்றத்தை ஏற்கோம்

## சுமந்திரனின் நாடாளுமன்ற உரைக்கு ரணில் நெத்தியடிப் பதில்



கொழும்பு, மார்ச் 24

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எமது அரசு இணை அனுசரணை வழங்கியதால் அந்தத் தீர்மானங்களில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் நாம் ஏற்பதாக எவரும் அர்த்தம்கொள்ளக் கூடாது. நாட்டின் இறையாண்மையைப் பாதிக்காத பரிந்துரைகளை மட்டுமே நாம் நடைமுறைப்படுத்துவோம். எந்தக் காரணம் கொண்டும் நாம் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்கமாட்டோம்.

» 37

### இலங்கையை மெச்சுகிறது அமெரிக்கா

கொழும்பு, மார்ச்.24
நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல்

» 37

### தமிழர்களைக் கொன்றொழித்தது ஐ.தே.கவே சு.க. ஒருபோதும் அப்படிச் செயற்படவில்லை

யாழ்ப்பாணத்தில் புதுக்கதை விட்டார் தயாசிறி

யாழ்ப்பாணம், மார்ச் 24
1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களை அழித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். தமிழ் மக்களின் இதயமாக விளங்கிய யாழ்ப்பாணம் பொது நூலகத்தை எரித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி அப்படியொரு

» 37

### வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இலங்கையில் இடமேயில்லை

அங்கஜன் எம்.பி. முன்னிலையில் யாழில் கூறினார் சு.க. செயலர்

யாழ்ப்பாணம், மார்ச் 24
எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு - நீதியைத் தேடிக் கொள்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகளை இங்கு கொண்டுவரவேண்டிய

» 37

### சாவு வீட்டில் கொள்ளை அளவெட்டியில் துணிகரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
அல்லைப்பிட்டியில் உயிரிழந்த இளம் குடும்பத் தலைவரின் வீட்டில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். சங்

» 37

### யாழ். மாநகர சபைக்கு கழிவறைகளைக் கூட பராமரிக்கத் தெரியாதாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகளைக்கூட பராமரிக்கத் தெரியாத சபையாகத்தான் யாழ்ப்பாணம் மாநகர சபை உள்ளது. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
'யாழ்ப்பாணம்

» 37

### படையினரின் குற்றங்களுக்கு என்னிடம் ஆதாரம் உள்ளது

பொன்சேகா மிரட்டல்

கொழும்பு, மார்ச் 24
சில இராணுவ அதிகாரிகள் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கான சாட்சியங்கள் தன்னிடம் இருக்கின்றன என்று ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரி

» 37

### வடமராட்சி கிழக்கில் போலி உறுதி முடித்து மணல் அகழ முயன்றவர்களை முறையாகக் கவனித்த மக்கள்

முன்னாள் அமைச்சர் தலையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 24
வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதிப் பகுதியில் அரச காணியைப் போலி உறுதி முடித்து மணல் அகழ்வில் ஈடுபட முற்பட்டவர்களை மக்கள் மடக்கிப்பி

» 37

### அழுகிய நிலையில் சடலம் நேற்று மீட்பு

பருத்தித்துறை, மார்ச் 24
பருத்தித்துறை மாதனைப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீட்டிலிருந்து

» 37

### வவுனியாவில் தொன்மையான புத்தர் சிலை புதையல் தோண்டியோரிடமிருந்து மீட்பாம்

வவுனியா, மார்ச் 24
வவுனியாவில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நான்கு பேரிடமிருந்து தொன்மையான புத்தர் சிலையை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டத்தின் காஞ்சிரமோட்டை காட்டுப் பகுதியில் பெக்கோ இயந்திரம் மூலம் புதையல் தோண்டி

» 37

SDB பரிசு சக்கரம்

வைப்புகளிற்காக இப் புதுவருடத்தில் SDB பரிசு சக்கரத்தில், SDB பண வவுச்சர், SINGER வவுச்சர் அல்லது வெளிநாட்டு சவாரியை பெற்றுக்கொள்ளுங்கள்.
» 37
ரூ.10,000/- இற்கு மேற்பட்ட சகல நிலையான வைப்புகளுக்கும்
13.13% அதிவிசேட வட்டி
13 மாதங்களுக்கான வ.தே.வ 13.06%



011 5 411 411

SDBவங்கி

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

# நன்னீர் எடுக்கப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள பெரியவிளான் கிராமத்தில் தண்ணீர் வழங்கல் என்ற பெயரில் தினமும் அதிகளவான நன்னீர் உறிஞ்சி எடுக்கப்படுகின்றது.

அதைத் தடுத்து நிறுத்தக் கோரி இன்று காலை 7.30 மணிக்கு பெரியவிளான் சந்தியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது. பெரியவிளான் சமூக மட்ட அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட பெரியவிளான் கிராமத்தில் இருந்து காரைநகர் பிரதேசத்துக்கு குடி தண்ணீர் வழங்கும் போர்வையில் அளவுக்கதிகமான குடி தண்ணீர் உறிஞ்சப்பட்டு தினமும் கொண்டு செல்லப்படுகிறது. விவசாயத்தை பிரதானமாகவும் ஏனைய சிறு தொழில்களையும் வாழ்வாதாரமாகவும் கொண்ட இந்தக் கிராமத்தில் உள்ள நிலத்தடி நீர் கிராமத்தவர்களின் பாவனைக்கே போதுமானதாக உள்ளது. இவ்வாறிருக்க பெரியவிளானைச் சேர்ந்த ஒருசில குடும்பத்தாலும் காரைநகரைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களாலும் வியாபார நோக்கில் குடிநீர் தண்ணீர் அளவுக்கதிகமாக உறிஞ்சப்படுவதால் கிராமத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதி மக்களின் முறைப்பாட்டின் பொருட்டு வலி தென்மேற்கு பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரு பிரதேச சபைகளின் அதிகாரிகள் நடைமுறைப்படுத்தாதது கவலையையும் பிரதேச சபையின் அசமந்த போக்கையும் வெளிக்காட்டுகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.(எ)

## கடற்புறா சிக்கிய பின்னரும்

# மன்னார் கடலில் அகப்பட்டது 1,937 கிலோ போதைப்பொருள்

## அதிகாலை வேளையே கடத்தல்; மன்னாரைச் சேர்ந்த ஐவர் கைது

*மன்னார், மார்ச் 24*

*இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 937 கிலோ கிராமுக்கும் அதிகமான போதைப் பொருள்கள் மன்னார் கடற்பரப்பில் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. போதைப் பொருள் கடத்தல் மன்னன் என்று தேடப்பட்ட மன்னார் கடல்புறா என்பவர் போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் இந்தியாவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கூட அதிகளவான போதைப் பொருள்கள் கடத்தப்படுவது கடற்படை, பொலிஸாரிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.*

கடந்த 20,21ஆம் திகதிகள், மற்றும் நேற்றுமுன்தினம் என இந்தப் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்கிறது கடற்படை.

தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 41 உரப்பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்ட ஆயிரத்து 547 கிலோ 68 கிராம் பீடி இலைகள் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளன. கடற்படை நடத்திய சோதனையின்போதே அந்தப் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள்களைக் கடத்தி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் தலைமன்னார், ஊருமலைப் பகுதியைச் சேர்ந்த 28, 30, 35வயதுகளையுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு டிங்கிப் படகு மூலம் இந்தப் பீடி இலைகள் கொண்டு வரப்பட்டிருக்கலாமென கடற்படை சந்தேகம் வெளியிட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட பீடி இலைகளுடன் சந்தேக நபர்களும் யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்தினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

தலைமன்னார் கலங்கரை விளக்கில் இருந்து சுமார் ஐந்து கடல்மைல்கள் தூரத்தில் உள்ள கடல் பகுதியில் மேற்கொன்டுள்ள சோதைனை நடவடிக்கையின் போது 27 பொதிகளில் அடைக்கப்பட்ட 912 கிலோ 460 கிராம் பீடி இலைகளுடன் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அந்தப் பீடி இலைகளும் டிங்கி படகொன்றுமூலம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்திருந்தது. மன்னார், பேசாலைப் பகுதியில் வசிக்கும் 32 மற்றும் 38 வயதானவர்கள் சந்துகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். பீடி இலைகளும் பாரப்படுத்தப்பட்டிருந்தன. அன்றைய தினமே 327 கிலோ பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டிருந்தன. கடந்த 20ஆம் திகதி புதன்கிழமையும் மன்னார் ஊருமலைப் பகுதியில் வைத்து 150 கிலோ 540 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது என்று கடற்படை தெரிவித்திருந்தது. அந்தக் கஞ்சா மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அண்மைக்காலமாக தலைமன்னார் கடற்கரைக்கு பீடி இலைகள் கடத்தி வரப்படுகின்றன என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்தே இந்த பீடி இலைகள் இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்றன என்ற குற்றச்சாட்டையும் கடற்படை முன்வைத்துள்ளது. நேற்றுமுன்தினம் சிக்கிய பீடி இலைகள் தவிர்த்து அண்மைக் காலத்தில் 2 ஆயிரத்து 787.3 கிலோகிராம் பீடி இலைகள் மன்னார் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கடற்படை அறிவித்துள்ளது.

போதைப் பொருள் தடுப்பதற்கான முழுவீச்சில் இலங்கைக் கடற்படை செயற்படுகிறது என்று கடற்படைத் தளபதி கச்சதீவுத் திருவிழாவின் போது தெரிவித்திருந்தார். போதைப் போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கு இந்தியக் கடற்படையுடன் சேர்ந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்றும்அவர் தெரிவித்திருந்தார்.

முன்னதாக இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்களால் தேடப்பட்டு வந்த மன்னாரைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் தனுஸ்கோடிக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் இந்திய - இலங்கைக் கடற்படையினரின் கண்களில் மண்ணைத்தூவிப் போதைப் பொருள்களைக் கடத்துவதில் கைதேர்ந்தவர் என்றும் இதனால் போதைப்பொருள் வட்டாரங்களில் அவருக்கு கடல்புறா என்று பெயர் உண்டு என்றும் இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. (எ-21)



இலங்கை மோட்டார் ரேசிங் சங்கம், யாழ்ப்பாணம் மோட்டார் விளையாட்டு கழகம், மற்றும் இராணுவ மோட்டார் விளையாட்டு கழகம் என்பன இணைந்து வடக்கு மாகாணத்தில் கார் பந்தய போட்டிகள் மற்றும் உந்துருளி பந்தய போட்டிகளை நடத்தின. கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் குறித்த போட்டிகள் நேற்றைய தினம் இடம்பெற்றன. (ஜ-37)

## பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்

# ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தலைக்கவசத்துடன் வாருங்கள்

## ஆலய நிர்வாகத்தினர் அறிவுரை

சாவகச்சேரி மார்ச் 24

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு உந்துருளியில் வருகின்ற அடியார்கள் அவசியம் தலைக்கவசம் அணிந்து வருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

வாகனப்பாதுகாப்புநிலையங்களில் தலைக்கவசம் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தலைக்கவசமின்றி ஆலயத்துக்கு வருகைதரவேண்டாமென உந்துருளிகளில் வருவோருக்கு ஆலயத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் தலைக்கவசமின்றி வந்த பெண் வீதி விபத்தில் சிக்கிச் சாவடைந்தார். இந்நிலையில் உயிர்ச்சேதத்தைத் தடுக்கும் முன்னேற்பாடு நடவடிக்கையாக பாதுகாப்புநிலையங்களில் தலைக்கவச பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் ஆலயத்துக்கு வரும் வாகனங்களை வீதியோரம் விடாதவாறு அருகில் உள்ள வித்தியாலய மைதானத்தில் தரிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அருகே உள்ள சாலையூடாக வாகனங்களைக் கொண்டு சென்று தரிப்பிடத்தில் விடுமாறும் அறிவித்துள்ளனர்.

ஆலயத்துக்கு வருவோர் தமது உடைமைகளைப் பாதுகாக்கும் வகையில் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் கேட்டுள்ளனர். (ஜ-9)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 24

வீதி விபத்தில் காயமடைந்த ஆலய பூசகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரிப்பகுதியில் நேற்று இடம்பெற்றது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெகதீஸ்வர சர்மா (வயது-45) என்பவரே காயமடைந்தார். சுசலையில் இருந்து உந்துருளியில் சென்றவேளையில் முந்திச் செல்ல முயன்ற உழவு இயந்திரத்தின் பெட்டி உந்துருளியில் தாக்கியதில் மோதி விபத்து ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## அபிவிருத்தி சங்க கூட்டம்

மாங்குளம்,மார்ச் 24

மாங்குளம் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க மற்றும் முகாமைத்துவத்தீர்மானத்துக்கு அமைவாகப் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணியளவில் பாடசாலை பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட உள்ளமையால் அனைத்துப் பழைய மாணவர்களும், தங்கள் பதிவுகளை மேற்கொள்வதோடு பொதுக்கூட்டத்தில் பங்குபற்றுவதுடன் பாடசாலையின் வளர்ச்சியில் பங்கேற்குமாறும் அதிபர் கேட்டுள்ளார்.

(க-222)

## பங்குனி திங்கள் வழிபாடு

வவுனியா,மார்ச்.24

வவுனியா சிறிநகர் சிறி துர்கை அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் நாளின் இரண்டாவது கிழமை வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. சோமசிறிஸ்கந்தராய குருக்கள் தலைமையில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற இருப்பதனால் அனைவரையும் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலயப் பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

(ஜ-110)


அபான்ஸ் பரம்பரை இல்லத்தின்
சித்திரைப் புத்தாண்டு சலுகைகள்
50% வரை தள்ளுபடி
60 மாதங்கள் வரை வட்டியில்லை
எந்தவொரு பொருளும் | ஒரே கூரையின் கீழ் | சலுகை விலையில்
LG
Life's Good
செவிகளுக்கு விருந்தளிக்கும்
புத்தாண்டு சலுகைகள்!
LG ஓடியோ மற்றும் ஹோம் தியெட்டர் சிஸ்டம்
PMPO 20,000w
Bluetooth
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
OJ98
பார்டி திரஸ்டர்
ஸ்மார்ட் மற்றும் ஓட்டோ DJ
போர்டபல் இன்
USB பிலெபெக்
ரூ.69,999
விசேட விலை
ரூ.63,999
11,000W PMPO
Bluetooth
DH6631T
• 5.1 செனல் சரவுண்ட் சவுன்ட்
• HDMI மற்றும் ஒப்டிகல் இன்
• DVD, VCD, MP3 மற்றும் USB ப்லெபெக்
• ஃபுல் HD அப்-ஸ்கெலிங்
• FM ரேடியோ
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
ரூ.42,999
விசேட விலை
ரூ.36,999
20,000W PMPO
LHD457
• 3CD/DVD மற்றும் USB ப்லெபெக்
• பேஸ் பிளாஸ்ட்
• FM ரேடியோ
• போர்டபல் இன்
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு
ரூ.36,999
விசேட விலை
ரூ.29,999
4,400W PMPO
Bluetooth
LHD627
• 5.1 செனல் சரவுண்டிங் சவுண்ட்
• போர்டபல் இன்
• DVD, CD/VCD மற்றும் MP3 ப்லெபெக்
• USB ப்லெபெக்
• HDMI மற்றும் HD அப்-ஸ்கெலிங்
விசேட விலை
ரூ.24,999
60
Sampath Cards
HSBC
NDB bank
UNION BANK
Cargills Bank
PAN ASIA BANK
HNB
Abans
011 5 999 000
Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்


Hero
ஹீரோ - அபான்ஸ்
பொன்விழா சலுகைகள்
5
WARRANTY
ஆண்டுகளாக
அபான்ஸ் 50ஆவது ஆண்டுவிழா நிமித்தம்
ஹீரோ மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ. 15,000/- வரை தள்ளுபடி
MAESTRO
EDGE
கவர்ச்சிகரமான அலோய் வீல்
இன்டகிரேடட் பிரேக்கிங் சிஸ்டம்
பின்புற புதிய LED லைட்
டிஜிட்டல் மீட்டர்
கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
110cc
ரூ 267,000/-
சிறப்பு விலை
ரூ 252,000/-
ரூ. 15,000/- தள்ளுபடி
011 5 777 000
நாடளாவிய அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans AUTO

## வாடகைத் தாய் தேவை

கருணை உள்ளம் கொண்ட 30 வயதுக்கு குறைவான பெண் ஒருவர் IVF ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. இரகசியம் பேணப்படும். சன்மானம் வழங்கப்படும்.

**075 441 2764**

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் Phone கடைக்கு வேலையாள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

**077 115 3412**

(CS 24228) (04.17)

## தேவை

யாழ்ப்பாணத்தில் நகைக்கடைக்கு வேலைக்கு ஆள் தேவை.

**077 500 7960**

(CS 24231) (04.17)

## நிலம் வாடகைக்கு

யாழ்.துண்டிச் சந்தி கொழும்புத்துறையில் மின்சாரம், நீர் மற்றும் சுகாதார வசதிகளுடன் கூடிய நிலம் வாடகைக்கு உண்டு. (வாகன சுத்திகரிப்பு நிலையம், இரும்பு ஒட்டு நிலையத்திற்கு ஏற்றது)

**077 440 0610**

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள். இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

**011 2504281/071 2991256**

## வேலைக்கு ஆள்தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கூல்பாருக்கு சகல வகை சமையல் செய்யக்கூடியவர், கேக் வகை, இனிப்புவகை தயாரிப்பாளர்கள் தேவை.

**லவ்லி கூல்பார்**
A-9 வீதி, சாவகச்சேரி.
**077 863 0268**

## சொத்து விற்பனை

01. பொதுவில் ஊரணி (விஸ்கி பொயின்ட் வீதி) அருகன் எஸ்டேட் எனும் ஊரணிக்காட்டில் அமைந்துள்ள 16 ஏக்கர், 2 ரூட், 5 பேர்ச் வெற்றுக் காணி.

02. மல்லாகம் வோட் இல. 12, வெல்லாயி வீதி இல. 84/A எனும் முகவரியில் அமைந்துள்ள 2924 சதுர அடி பரப்பிலான இரண்டு மாடி வீட்டுடனான 12.44 பேர்ச் காணி.

03. மஹர கந்தலியத்தபளுவ பகுதியில் அமைந்துள்ள "மில்லகஹா வத்த எனும் மஹாவத்தை" எனும் 10 பேர்ச் காணி

04. இல. 10/2, மஹஜன மாவத்தை, கடலான மொரட்டுவ எனும் முகவரியில் அமைந்துள்ள 2155 சதுர அடி பரப்பளவிலான வீட்டுடன் கூடிய 20.5 பேர்ச் காணி

05. இல. 377/2, திப்பிட்டிகொட, களனி என்னும் முகவரியில் அமைந்துள்ள 670 சதுர அடி வணிகக் கட்டிடம் மற்றும் 1500 சதுர அடி வீடு அடங்கலான 35.60 பேர்ச் காணி.

விலை மனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், கடித உறையின் இடது மேல் மூலையில் **"சொத்துக்கள் விற்பனைக்கான விலைமனு"** என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2019 ஏப்ரல் 10.

தொடர்பு:
முகாமையாளர் - கடன் மீட்புக்கள் திணைக்களம்,
யூனியன் வங்கி, இல.64, காலி வீதி, கொழும்பு 03.
தொ: 011-2374100 (நீடிப்பு 2351/2352/2353)

**UNION BANK**

## வேலையாள்கள் தேவை

மரதளபாட நிலையத்துக்கு வேலையாள்கள் **(Labour)** தேவை. தங்குமிட வசதி உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**
1169,K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
**077 721 1763**

## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி கடற்கரை வீதியில் 43 பரப்பு வெறும் காணி பாதையுடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

**077 546 5660, 077 546 2482**

## வேலையாள்கள் தேவை

அச்சகத்தில் பணியாற்றுவதற்கு கணினி சம்பந்தமான பூரண அறிவுள்ள பெண் ஊழியர் தேவை அத்துடன் புத்தகங்கள் கட்டுவதில் அனுபவமுள்ளவரும், பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம். திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் நேரில் சமூகம் தரவும்.
**இடம்:** மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்
**தொடர்பு - 077 392 0797**






# தீவகத்தின் பொக்கிசத்தை காப்பாற்ற யார் வருவார்?

யாழ்ப்பாணம், மார்ச் 24

தற்காலத்தில் கற்றாளையின் பயன்பாடு மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. கடந்த காலங்களில் முக அழகுபடுத்தல் கலைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட கற்றாளை, தற்காலத்தில் சுவையூட்டப்பட்ட குளிர்பானங்களாகவும், மருத்துவத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் மன்னார் மாவட்டத்திலும், யாழ்ப்பாணம் தீவகத்திலும் கற்றாளைகள் அதிகம் காணப்படுகின்றன. அதனால் அங்குள்ள கற்றாளைக்குத் திடீரெனக் கிராக்கி ஏற்பட்டுள்ள நிலையில், அவற்றைச் சட்டவிரோதமாக அபகரித்துச் செல்லும் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

**கற்றாளைத் திருட்டு**

மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் தீவகத்துக்கு தென்னிலங்கையில் இருந்து வாகனங்களில் வருவோர் கற்றாளைகளைத் திருட்டுத்தனமாகக் கொண்டு செல்கின்றனர். அவர்கள் அவற்றைத் தென்னி கற்றாளைகளை வகை தொகையின்றி வேருடன் பிடுங்கிச் செல்கின்றனர். அதானால் கற்றாளைகள் அடியோடு அழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மன்னார், யாழ்ப்பாணம் தீவகம் ஆகிய இடங்களில் கற்றாளைகளைத் திருடியவர்கள் பிடிப்பட்ட பல சம்பவங்கள் நடந்துள்ளன. அந்தந்தப் பிரதேச செயலகங்கள் கற்றாளை பிடுங்குவதற்குத் தடை விதித்துள்ளபோதும், அவற்றையும் மீறி அவை கொண்டு செல்லப்படுகின்றன. கற்றாளை பிடுங்கிச் செல்லப்படுவதற்குஎதிர்ப்புத் தெரிவிக்கும் அந்தப் பிரதேச மக்களே பெரும்பாலும் திருடர்களை பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

**பொலிஸார் தடுமாற்றம்**

இந்தத் திருட்டுக்களைத் தடுக்கக் கோரிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தபோதும் திருட்டுக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தீவகத்தில் பொலிஸாரிடம் இது தொடர்பாக முறையிட்டபோது, கற்றாளைகளைத் தொகையாகப் பிடுங்கிச் செல்வதைத் தடை செய்கின்றோம் என்று பிரதேச செயலரால் உத்தியோகபூர்வக் கடிதம் தரப்பட்டால்தான் தாம் அவர்களைக் கைது செய்ய முடியும்என்று பொலிஸார் கூறினார்கள் என்று சமூக ஆர்வலர் ஒருவர் கூறினார்.

பிரதேச செயலத்தினருக்கு எழுத்துமூலம் இது தொடர்பான முறைப்பாடு வழங்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

அண்மையில் வடமேல் மாகாணத்தின் (புத்தளம்-குருணாகல்) பதிவுக்குட்பட்ட வாகனம் ஒன்றில் பெருந்தொகையான கற்றாளைகள் கடத்திச் செல்லப்பட்டபோது புங்குடுதீவைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு அமைப்பைச் சேர்ந்தவர்கள் மடக்கிப் பிடித்தனர். மண்டைதீவு பொலிஸ் சோதனைச் சாவடியில் அந்த வாகனம் மறித்துச் சோதனையிட்டபோதும், அந்த நபர்களைப் பொலிஸாரால் கைது செய்ய முடியவில்லை. அப்போதும் பொலிஸாரும் மேற்குறித்த காரணத்தையே கூறியுள்ளனர்.





**ஏன் அசமந்தம்?**

இந்த விடயத்தில் கருத்துத் தெரிவித்த புங்குடுதீவு உலக மையத்தின் செயலர் க.குணாளன், வேலணைப் பிரதேச செயலகமோ, பிரதேச சபையோ கற்றாளைச் செடிகள் பெருந்தொகையாகப் பிடுங்கிச் செல்வதைத் தடை செய்யும் எந்த அறிவித்தலையும் உத்தியோகபூர்வமாக விடுக்கவில்லை. அதனால் பொலிஸாரும் இந்த விடயத்தில் மேலதிக நடவடிக்கை எதையும் எடுக்கின்றார்கள் இல்லை என்று கூறுகின்றார்.

தீவகத்தில் காணப்படும் கற்றாளைகள் திருடப்படுவதைத் தடுக்கவேண்டும் என்று வேலணைப் பிரதேச சபையில் பல தடவைகள் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பாகத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அந்தத் தீர்மானங்கள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருடன் கலந்துரையாடி திருட்டைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாதுள்ளமையே அதற்குக் காரணம்.



**தீவகத்தின் சொத்து**

தீவகத்தின் கடற்கரைப் பிரதேசங்களைப் பாது காப்பதில் கற்றாளைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்தப் பகுதிகளின் பொக்கிசம் என்றுகூட அவற்றைக் குறிப்பிடலாம். அவற்றைத் தொகையாக அள்ளிச் செல்வதால் கடற்கரைப் பிரதேசம் பெரும்பாதிப்பைஎதிர்கொள்ளும்என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். இந்த நிலமை தொடர்ந்தால் குறுகியகாலத்தி லேயே தீவகத்தில் கற்றாளைகளைக் காண முடியாத நிலமை காணப்படும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தீவகத்தின் பொக்கிசத்தைக் காக்க விரைந்து செயற்பட வேண்டும் என்பதே அங்குள்ள மக்களின் பெரும் எதிர்பார்ப்பு. மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும் மக்கள் விடுக்கும் கோரிக்கை இதுவே. (எ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம் ,மார்ச் 24

தென்மராட்சிக் கலை மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கலைமன்றத்தின் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலகர் கே.ரஜீவன் தலைமையில் நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

தலைவராக க.மோகனராஜ் லிங்கம், செயலராக வ.ஸ்ரீபிரகாஸ், பொருளாளராக எஸ்.தயாபரன், உபதலைவராக அ.அருண்தாஸ், உபசெயலராக க.நடேஸ்வரன் ஆகியோருடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-159)

★ ★ ★

கொடிகாமம், மார்ச் 24

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் அ.அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஈ.எம்.எஸ்.எதிரிசிங்க, வணிகர் மன்ற அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

நிர்வாகத் தெரிவில் தலைவராக அ.அருணாசலம், உபதலைவராக செ.சிவராசா, செயலராக க.புஸ்பகாந்தன், உபசெயலராக ம.திவாகர் செயற்றிட்ட செயலராக க.சந்திரகுமார், பொருளாளராக மு.உதயகுமார், நிர்வாக உறுப்பினர்களாக சு.அருட்பிரகாசம், பொ.சற்குணசீலன், த.ஸ்ரீஸ்கந்த ராஜா, அ.கலைச்செல்வன், இ.பிரசன்னா, ச.சந்திரதீபன், க.குணரத்தினம், போசகர்களாக சி.அருளம்பலம், ம.சின்னதுரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-159)

## வர்த்தக நிலையங்கள் ஞாயிறு திறக்க அனுமதி

நெல்லியடி,மார்ச் 24

நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் எதிர்வரும் 31, 7, 14ஆம் திகதிகளில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டே. இந்த வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நெல்லியடி வணிகர் கழகச் செயலர் ரஞ்சன் தெரிவித் துள்ளார். (ஜ-422)

## சாரதிகளுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, மார்ச் 24

அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிய இரு சாரதிகளுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டமும் மேலும் ஒரு சாரதிக்கு விளக்கமறியலும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றினார்களென தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

ஒரு சாரதிக்கு 75 ஆயிரம் ரூபாவும் மற்றச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்து மேலும் ஒரு சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (க-9)

## பௌத்தர்கள் இல்லாத வலி.மேற்கில் திரிபீடகாபிவந்தனா வாரம் இல்லை

### சபை உறுப்பினர்களின் தீர்மானம் நடைமுறை

திரிபீடகாபிவந்தனா வாரம் வலி.மேற்குப் பிரதேச சபையில் கடைப்பிடிப்பதில்லை என எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த வாரத்தில் சபையில் அது தொடர்பான எந்தவொரு நிகழ்வுகளும் நடைபெறவில்லை. நாடுமுழுவதும் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை திரிபீடகாபிவந்தனா வாரமாகக் கடைப்பிடிக்குமாறும் அறிவிக்கப்பட்டது. வலி.மேற்குப் பிரதேச சபையின் அமர்வு கடந்த 15ஆம் திகதி தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது, மேற்படி சுற்றுநிருபம் செயலரால் சபைக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. இதன்போது, வலி.மேற்குப் பிரதேச சபை தமிழர் பிரதேசத்தில் அமைந்திருப்பதால், இங்கு பௌத்தர்கள் எவரும் பணியாற்றாத நிலையில், இங்கு பௌத்த நிகழ்வுகளை நடத்துவதற்கும் சபை அலுவலகத்தைப் பௌத்த கொடிகளால் அலங்கரிப்பதற்கும் முடியாது என உறுப்பினர் ந.பொன்ராசா கருத்து முன்வைத்தார். அவரைத் தொடர்ந்து மேலும் பல உறுப்பினர்கள் இதே கருத்தை முன்வைத்தனர். இதனைத் தொடர்ந்து இங்கு திரிபீடகாபிவந்தனா வாரத்தை வலி.மேற்கு பிரதேச சபையில் கடைப்பிடிப்பதில்லை என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ஜ)

# காய்ச்சல் என்றால் உடனேயே மருத்துவமனை செல்லுங்கள்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார், 65 வயதுக்கு மேற்பட்டோர், காச நோயுடையவர்கள் ஆகியோர் காய்ச்சல் ஏற்பட்டால் முதல்நாளே மருத்துவமனைகளை நாடிச் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



நாட்டில் தற்போது உயிர்கொல்லி நோயான டெங்கு, மற்றும் இன்புளுவன்சா நோய்களின் தொற்று காணப்படுவதால் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியம் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இன்புளுவன்சா காய்ச்சல் இலகுவில் பரவக்கூடியது. கடந்த ஆண்டு தென்மாகாணத்தில் இந்த நோய்க்கு இலக்காகிப் பலர் உயிரிழந்திருந்தனர். நடப்பாண்டிலும் சில பகுதிகளில் இந்த நோயின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று தேவையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (ஐ-21)

# கலைஞர்களின் விவரங்கள் சேகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் தொடர்பான விவரங்களை கலை கலாசார பண்பாட்டுத்திணைக்களம் கோரியுள்ளது.
எனவே பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்கள் தென்மராட்சிப் பிரதேச கலாசார அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விவரங்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. (ஐ-131)

# கற்றல் உபகரண கண்காட்சி

கொடிகாமம், மார்ச் 24

வரணி வடக்கு அ.த.க பாடசாலையின் கற்றல் உபகரணக் கண்காட்சி வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில்முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்விவலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்என்.திருவாசகன் கலந்துகொண்டார்.
மதிப்புறு விருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலர் சி.நவநாயகம், பழைய மாணவர்களான இ.கஜன் செ.ஈஸ்வரநாதன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர்களால் ஆக்கப்பட்ட ஆக்கப் பொருள்களும், கற்றல் கற்பித்தல் உபகரணங்களும் காட்சிப் படுத்தப்பட்டன. (ஐ-159)

# கொளுத்தும் வெயிலால் நோய் பரவும் அபாயம்!

சாவகச்சேரி, மார்ச் 24


குடாநாட்டில் தற்போது அதிக அளவு வெப்பம் நிலவுவதால் இந்தக் காலத்தில் ஏற்படக்கூடிய அம்மை மற்றும் கண்நோய் போன்றவை மக்களிடையே பரவி வருகிறது. இவ்வாறான நோய்கள் காணப்படின் பாதிக்கப்பட்டவரை சுத்தமான இடத்தில் தனிமையில் வைத்து பராமரிக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
இந்த நோய்களுக்கு இலக்கானவர்களுக்கு அதிக அளவு தண்ணீர் அருந்தக் கொடுக்குமாறும், இலகுவில் சமிபாடடையக்கூடிய உணவு வகைகளை வழங்குமாறும் அறிவித்துள்ளனர்.
இவ்வாறான நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகள் மருத்துவமனைகளில் உள்ளதால் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ஐ-9)


# வெயிலில் வைத்துப் பானங்கள் விற்பனை செய்தால் குற்றம்

## வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 24

வெயில் உள்ள இடங்களில் குளிர்பானங்கள் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்கள், இளநீர் போன்றவற்றை வைக்க வேண்டாமென வியாபாரிகளுக்குச் சாவகச்சேரிச் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
வெயில் உள்ள இடங்களில் மென்பான மற்றும் குடி தண்ணீர்ப் போத்தல், இளநீர் வைத்திருப்பதையும் திறந்த வாகனங்களில் வெயிலில் அவற்றைக் கொண்டு செல்வதும் கண்டு பிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அறிவித்துள்ளனர்.
மென்பானம் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்களில் வெயில் படுவதால் அதனுள் உள்ள இரசாயனப் பொருள்கள் பழுதடையும் அபாயம் காணப்படுகின்றது. வர்த்தக நிலையங்களில் வாங்கும்போது பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளில் மென்பானப் போத்தல்கள், இளநீர் மற்றும் குடிநீர்ப் போத்தல்கள் வெயில் படும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
அவ்வாறான வர்த்தகர்கள் அவற்றைச் சுகாதாரம் பேணும் நிலையில் பாதுகாப்பாக வைத்து வியாபாரம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-9)





வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்குகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர். கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லும் நேரம் ஆங்காங்கே ஓரிரு ஆமைகள் இறந்த நிலையிலும், சில ஆமைகள் குற்றுயிராகவும் காணப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்தனர். ஆமைகள் இறப்பதற்கான காரணம் என்னவென்பது இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

## தவக்கால தியானங்கள்

# இறைவனோடு இணைவோம்!


அநீதிக்குத் துணை நிற்பவர்கள் ஊழலோடு ஒத்துப் போகிறவர்கள். அடக்குமுறைக்கு ஆதரவு தருபவர்கள் உண்மைக்கு சாவுமணி அடிப்பவர்கள் பிறரை வஞ்சித்து ஓரங்கட்டி வாழ்பவர்கள் இயேசுவோடு இருக்கமுடியாது.
அவ்வாறானவர்கள் இறையரசின் மதிப்பீடுகளுக்கு எதிராக இருப்பதால் பிளவை ஏற்படுத்துகிறார்கள். இதனையே "என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்; என்னோடு இணைந்து மக்களைக் கூட்டுச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார்" (லூக் 11:23) என்கிறார் இயேசு. உண்மையாக நல்ல மனம் படைத்தவர்களே இறைவனது செயற்பாடுகளை அறிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் ஒற்றுமையை நிலை நாட்டவும் முடியும். என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே (யோவா 14:10) என்று தந்தையின் பணியை முழுமையாக நிறைவேற்றுவதுதான் இயேசுவின் பணியாக இருந்தது. சமூகத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியில் உலகம் ஒன்றுபட்டு வருகிறது. உலகுக்கும் திருச்சபைக்கும் ஒற்றுமை என்பது இன்றைய அவசிய தேவையாக காணப்படுகிறது.
தீயோனின் ஆதிக்கத்தை உதறித்தள்ளிவிட்டு இறைவனைச் சார்ந்தவர்களாக பிளவுபடா உள்ளத்துடன் அனைவரையும் அரவணைத்து ஒற்றுமை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் மனநிலையை வளர்த்துக் கொள்வோம். நலம்தரும் கனிகள் மிகுந்துள்ள நேரான வாழ்க்கைப் பாதையை நாம் தேர்ந்தெடுப்போம்.

எஸ்.யேசுதாஸ், கொ...

# விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம் மார்ச் 24

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.
முன்பள்ளி ஆசிரியர் திருமதி இரவீந்திரன் மகேஸ்வரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினராக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் நா.கருணாகரன், மதிப்புறு விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம அலுவலர் செல்வி விஜயசிறி நியூறிசா, பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் ர.அனுராகரன், கைதடி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம், விநாயகர் ... கழக செயலர் க.தமிழ்ச்செல்வன் ...





# வீதியில் கொட்டிக் காய விடப்படும் மன்னார் விசாயிகளின் வியர்வை

## போதுமான தளங்கள் இன்மையால் இந்த நிலை

மன்னார், மார்ச் 24

வியர்வை சிந்திப், பாடுபட்டு அறுவடைசெய்யும் நெல்மணிகளை வீதிகளில் காயவிடும் அவலத்தை மன்னார் மாவட்ட விவசாயிகளும் எதிர்கொண்டுள்ளனர். நெல் காயவிடும் தளங்கள் போதியளவில் இல்லாததால் விவசாயிகள் இவ்வாறனதொரு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்மணிகளை காய விடுவதற்கான தளங்களை அமைத்துத்தரும்படி நீண்ட காலமாகவே கோரிவருகின்றனர். விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய மாவட்டத்தில் நெல்காயவிடும் தளங்கள் சில கடந்த வருடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும் அவற்றின் அளவு போதாது என்றும், மேலதிகமாகவும் நெல்காயவிடும் தளம் தேவை என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் சில பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தளங்கள் அளவில் சிறியனவாகவே காணப்படுகின்றன.

இருந்தும் அதில் காயவிடுவதற்கு ஏற்றி இறக்கும் வாகனக் கூலி அதிகமாக உள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

மன்னாரில் காலபோகங்களின் போது சுமார் 24 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக நெல் பயிரிடப்படுகிறது.

எனவே அவ்வளவு நெல்லையும் காயவைப்பதற்கு ஏற்கனவே உள்ள சிறு சிறு தளங்களின் இடவசதி போதாது, இனியும் இவ்வாறு சிறுசிறு தளங்கள் அமைக்கப்படுவதை விடுத்து அரச காணிகள்- மக்கள் பயன்பாடில்லாத அரச காணிகள், புலவுக் காணிகளில் பெரிய தளங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மன்னார், மடு, மாந்தை, முசலி, நானாட்டான் என அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் நெல்காய விடுவதற்குத் தேவையான போதியளவு தளங்கள் இல்லாததால் அவர்கள் அனைவரும் இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு 3 நெல்காயவிடும் தளங்களும், 2018ஆம் ஆண்டு நான்கு தளங்களும் மாவட்ட கமநல சேவைகள்திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மேலும் சில தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பொது இடங்களிலேயே நெல்காயவிடும் தளங்களை அமைக்க முடியும். அப்படி அமைக்கப்படும்போது அந்த இடத்தின் பொது அமைப்புகளிடம் அதனுடைய பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. சிறந்த முறையில் பராமரிப்பதற்கு சம்மதித்தே அந்தத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட இடங்களில் தளங்களை அமைக்கமுடியாது. நடப்பாண்டிலும், நான்கு நெல் காயவிடும் தளங்கள் அமைப்பதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன. வேறு சில அமைப்புகளிடம் இருந்து நெல்காயவிடும் தளங்கள் 10 அமைப்பதற்கு கோரியுள்ளோம். அந்த அனுமதியும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவையும் அமைக்கப்பட்டால் இந்தப் பிரச்சினைகள் மாவட்டத்தில் இருக்காது என்று நம்புகிறோம் என மன்னார் மாவட்ட கமநலசேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (க-21;213)

# போதா நினைவாலயம் ஊடாகப் பயிற்சி புத்தகம் கையளிப்பு



முல்லைத்தீவு, மார்ச் 24

அமரர் செந்தூரன் போதநாயகியின் நினைவாக உருவாக்கப்பட்ட "போதா நினைவாலயத்தின்" ஊடாக நேற்றுமுன்தினம் முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

ஆசிரியர் ந.தர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராஜா.மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-222)



# உந்துருளிக்குள் மறைத்து கசிப்பு விற்ற பெண் கைது

முல்லைத்தீவு, மார்ச் 24

புதுக்குடியிருப்புப் பத்தாம் வட்டாரப் பகுதியில் உந்துருளியில் பயணித்த பெண் ஒருவரை மறித்துச் சோதனை செய்தபோது, விற்பனைக்குத் தயாரான நிலையில் பொலித்தின் பையால் கட்டப்பட்ட நூறு ரூபா கசிப்புப் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். புதியதாக எடுக்கப்பட்ட உந்துருளிக்குள் மறைத்துக் கொண்டு செல்ல முற்பட்டபோது பெண்ணைக் கைது செய்த பொலிஸார் அவர் சென்று திரும்பிய வீட்டுக்குச் சென்று சோதனை செய்தவேளை அதிகளவான கசிப்புக் கான்களில் வைத்திருந்தமை தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து வீட்டில் இருந்து கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண்ணையும் கைதுசெய்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டாரப் பகுதியில் தொடச்சியாக கசிப்பு வியாபாரம் நடைபெறுகின்றது என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர்கள் பத்தாம் வட்டாரப் பகுதிக்குச் சென்று சோதனையில் ஈடுபட்டனர்.

விற்பனைக்குத் தயாரான நிலையில் பைக்கட்டில் கட்டப்பட்ட 180 பைகளும், கான்களில் இருந்து 72.4 லீற்றர் கசிப்பையும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மீட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டாரப்பகுதியில் உந்துருளியில் கசிப்பு வியாபாரத்தில் பெண்கள் ஈடுபட்டுவருகின்றமை புதிய சட்டவிரோத வியாபார உத்தியாகக் கையாள்வதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-ரி3)




# அமெ. உதவியைக் கோரி கையெழுத்துச் சேகரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 24

வவுனியா மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு முன்பாக கையெழுத்து பெறும் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வரலாற்று பொங்கல் நாளில் தமிழர்களுக்கு அமெரிக்க உதவி வேண்டி நான்காம் கட்டக் கையெழுத்து சேகரிப்பு எனத் தெரிவித்து மக்களிடம் கையெழுத்துக்களைச் சேகரித்தனர். (க-214)

# தேனீ வளர்ப்பில் ஈடுபடும் பயனாளிகளுக்குக் கூட்டம்

மன்னார், மார்ச் 24

மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகள், ஏனைய வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் தேனீ அமைப்பின் கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் இராதாமோகன் தலைமையில் நடைபெற்றது.

ஜப்பான் அரசால் "நியு வேர்ள்ட் ஓர்கனிசேஷன்" அமைப்பால் இந்த உதவிகள் யாவும் வழங்கப்படுகின்றன. இந்த உதவிகளை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் மன்னார் தேனீ அமைப்பின் பிரதிநிதிகளும் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (க-213)

# ஒஸ்மானியாக் கல்லூரிக்கு கணினித் தொகுதி கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்கு கணினித் தொகுதி அடங்கிய பொருள்களை மக்கள் பணிமனை தலைவரும் அமைச்சரின் யாழ் மாவட்ட மீள் குடியேற்ற இணைப்பாளர் சுபியான்மௌலவி பாடசாலை அதிபர் சேகு ராஜிதுவிடம் கையளித்துள்ளார். நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்குச்சென்ற சுபியான் மௌலவி பாடசாலை



வளாகத்தில் வைத்து குறித்த பொருள்களைக் கையளித்ததுடன் பாடசாலையின் பல்வேறு தேவைகளைக்கேட்டறிந்துகொண்டார். (க)

# விளைவுகளை எதிர்கொள்ள சிறப்பு அறிவு மிக அவசியம்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

தற்காலத்தில் இரு நேர உணவுகளை சிற்றுண்டிச் சாலைகளில் கொள்வனவு செய்யும் நிலைமை உருவாகியுள்ளது. இது நவீன பொருளாதாரத்தின் விளைவு. இவை தொடர்பில் எமது அவதானம் அதிகரிக்கும்போது சிறப்பு அறிவு அவசியமாகின்றது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பட்டம் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இருந்த குடும்ப அமைப்பை இன்று காண முடியாதுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் அங்கும் இங்குமாகச் சிதறிக்கிடக்கின்றனர். அப்படியிருக்க குடும்ப அமைப்பைப் பார்த்துக் கொள்பவர்கள் யார்? இன்று இவர்கள் அனைவருக்கும் முன்பாக தமது பிள்ளைகளைப் பராமரித்துக்கொள்ள வேண்டி இருக்கின்றது.

எப்படியாயினும், இன்று தமது இரு நேர உணவுகளைச் சிற்றுண்டிச் சாலைகளில் கொள்வனவு செய்யும் நிலைமையே உருவாகியுள்ளது. இது நவீன பொருளாதாரத்தின் விளைவு. இவை தொடர்பில் எமது அவதானம் அதிகரிக்கும்போது சிறப்பு அறிவு அவசியமாகின்றது.

நாம் அரசைப் பொறுப்பேற்ற பின்னர் இந்த வருடத்தில் மாத்திரம் 5ஆயிரத்து 900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

எமது வருமானத்தில் அதிகமான தொகையை கடனை செலுத்துவதற்காகவே செலவிட வேண்டியிருந்தது. வருமானத்தில் மற்றுமொரு பகுதியை அரச ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மிகுதியை சமூக பிரிவுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம். வயதானவர்களின் தொகை அதிகரிப்பதன் மூலம் நாட்டில் பல சமூக பிரச்சினைகள் தோன்றுகின்றன. பரீட்சைகளில் சித்தியடையாமையால் ஏற்படுகின்ற மனநிலைப் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து முகாமைத்துவம் செய்வதற்காக அறிவார்ந்தநபர்களின் தேவை எழுந்துள்ளது. அடுத்து வருகின்ற காலங்களில் இவைபற்றி அதிக கவனம் செலுத்தப்படும் - என்றார். (து)

# கடற்றொழில், விவசாய அபிவிருத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு உதவும்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

நாட்டை முன்னேற்றுவதாக இருந்தால் கடற்றொழில் மற்றும் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யவேண்டும்.

வேறு எந்தத் துறையையும் நம்பி செயற்பட முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது;

விவசாயத்துறையையும், கடற்றொழில் துறையையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கு அதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த இரண்டு துறைகளையும் அபிவிருத்தி செய்யாமல் வேறு எந்த துறைகளை அபிவிருத்தி செய்தாலும் நாங்கள் எதிர்பார்க்கும் நன்மையை அடையமுடியாது.



அத்துடன் விவசாயத்துறைக்குதேசியகொள்கை அமைக்கப்படவேண்டும். நான் விவசாய அமைச்சராக இருக்கும் போது இதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தேன். அதே போன்று கடற்றொழிலுக்கும் தேசிய கொள்கை அமைக்கும்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக அறிகின்றேன். தற்போது இந்த இரண்டு துறைகளுக்குமான தேசிய கொள்கை அமைக்கும் அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் நிலைக்கு வந்திருக்கின்றது.

நாங்கள் அன்று ஆரம்பித்த வேலைத் திட்டங்கள் அனைத்தையும் தற்போதைய அரசில் விவசாய அமைச்சர் பீ.ஹரிசன் முன்கொண்டு செல்கின்றார்.

அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அரசுகள் மாறுவதன் மூலம் வேலைத்திட்டங்கள் கைவிடப்படும் நிலைமைகளே கடந்த காலங்களில் இருந்து வந்தன. அதனால்தான் நெல் விளைச்சல் கடந்த காலங்களில் குறைவாக இருந்தது. கடந்த போகத்தில் நாங்கள் 49 ஆயிரம் ஹெக்டேயர் நெல் விளைச்சல் மேற்கொள்ளாத வயல்களில் விளைச்சலை மேற்கொண்டோம்.

அதன் பெறுபேறாக இம்முறை போகத்தில் வரலாற்றில் ஒருபோது இல்லாத அளவு நெல் விளைச்சலை எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (க-31)



# பொயிஸ்டன் தோட்டத்தின் தொழிலாளர் போராட்டம்

பொகவந்தவாவ, மார்ச் 24

பொயிஸ்டன் தோட்ட தொழிலாளர்களால் பறிக்கபட்ட தேயிலைக் கொழுந்தை தொழிற்சாலையில் இருந்து திருப்பி அனுப்பியமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 8 மணியில் இருந்து 9.30 மணி வரை 150 கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

டிக்கோயா பொயிஸ்டன் தோட்டத் தொழிலாளர்களால் 22 ஆம் திகதி பறிக்கப்பட்ட ஆயிரம் கிலோ நிறை கொண்ட தேயிலைக் கொழுந்தை டிக்கோயா வனராஜா தோட்டத்தில் உள்ள தொழிற்சாலையினர் திருப்பி அனுப்பியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

எதிர்வரும் மாதம் அதிகமான கொழுந்து வளர்ந்து காணப்படும். தொழிற்சாலைகள் இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொண்டால், கொழுந்து அதிகமாகக் காணப்படும் காலப்பகுதியில் எவ்வாறு நாங்கள் கொழுந்து பறிப்பது எனத் தொழிலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க)

# சமூக மாற்றத்தை ஏற்படுத்த இளையோர் கைகொடுங்கள்

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

இளையோர் சமூகமாற்றத்துக்கான பயணத்தில் இணையவேண்டும். அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகள், மக்கள் ஆகிய மூன்று தரப்பும் இணைந்து பயணித்தால் இலக்கை இலகுவில் அடைந்துவிடலாம். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் அறை கூவல் விடுத்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அபிவிருத்தி அரசியலுக்கு அப்பால் மலையகத்தில் மீண்டும் உரிமை அரசியலுக்கு உயிர்கொடுத்து உரமூட்டி எழுச்சிக்கான களத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி தற்போது அமைத்துக் கொடுத்துள்ளது. சமூக மாற்றத்துக்கான பயணத்தில் பெண்களும் கரம்கோர்க்க வேண்டும். பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பெண்களும் இன்று விழித்தெழுந்து மாற்றத்தை நோக்கிப் பயணிக்க ஆசைப்படுகின்றனர். அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கவேண்டும். கூடை சுமந்து கூன் விழுந்து செத்துமடியும் வரை சாதாரண தொழிலாளியாகத்தான் வாழ வேண்டும் என்ற நிலை பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பெரும்பாலான பெண்களுக்கு இருக்கின்றது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும்- என்றுள்ளது. (து)


வெள்ளிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 756
வர்ணம் : நீலம்
திகதி : 2019.03.22
வெற்றி இலக்கங்கள் 26 40 60 64
ஆங்கில எழுத்து S
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 23,844,732/-
தொலைபேசி : 0112 333 546 - 47 web : www.dlb.lk


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3164 திகதி: 2019.03.23
சனிக்கிழமை
SATURDAY FORTUNE
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 14 18 34 49 K
போனஸ் இலக்கம் 05
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 35,674,380/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 563
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.03.23
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,351,500/-
வெற்றி இலக்கங்கள் 05 09 64 66
ஆங்கில எழுத்து G
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 232
சீட்டிழுப்பு திகதி 23.03.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 40 41 56
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14, 804, 548/=
2019.03.27ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


### மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை பத்மநாதன்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் நேற்று (23.03.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் தம்பிஜயா அழகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்பு கணவரும் இரதாயிஜினி, பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றொஜனின் அன்பு மாமாவும் அகீஸ், அகானா, ஆகியோரின்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மாணிக்க கல் அகழ்ந்த 10 பேர் கைது



கொழும்பு, மார்ச் 24

சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 10பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொகவந்தலாவப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து கடந்த வியாழக்கிழமை மாணிக்கக் கல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உபகரணங்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவித்தனர். (து)

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
24.03.2019



கட்டுரை

வி.அருணாசலம்

# இனப் படுகொலையும் எதிர் வினைகளும்






2 ஆம் உலகப் போர்க் காலத்தில் 19.3 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பல்வேறு வழிகளில் ஹிட்லரின் நாசிப் படையினரால் கொல்லப்பட்டனர். இதில் 2மில்லியன் மக்கள் யூதர்கள் அல்லாதவர்கள். இவ்வாறு யூதர்கள் அழிக்கப்பட்டதுபோல உலகில் வேறெந்த இனமும் அழிக்கப்படவில்லை. இதன் பின்னான எதிர்வினைகள் முழு உலகுக்கும் படிப்பினையாக அமைந்தன. ஜேர்மனியர்கள் தாம் செய்த யூதப் படுகொலைக்காக வெட்கப்பட்டார்கள். ஒஸ்ரியாவில் பிறந்த ஹிட்லர் ஜேர்மனிக்குக் களங்கத்தை ஏற்படுத்தியதை உணர்ந்தார்கள். இனிமேல் இவற்றிலிருந்து விடுபட்டுத் தாம் எப்படி முன்னுதாரணமாக வாழ வேண்டும் என முடிவெடுத்த ஜேர்மனியர்கள் தமது சட்டங்களை மிக இறுக்கமாக்கினர்.

இன்றுள்ள ஜேர்மனியர்கள் ஒருவர் இன்னொருவருக்குக் கைநீட்டி அடிக்க முடியாது. பெரும் வாக்குவாதம் இருவருக்கிடையில் ஏற்படும்போது தமது கைகளைப் பின்னால் கட்டியவாறு சத்தம் போட்டுச் சண்டைபிடிப்பர். சண்டை அதி உச்சத்தை அடைந்தால் இருவரும் தமது மூக்குகளை முட்டிக் கொள்வர். அதையும் மீறினால் சட்டத்தின் முன் இருவரும் தண்டிக்கப்படுவர். இது ஜேர்மனியர்களிடம் ஏற்பட்ட எதிர்வினை.

ஜேர்மனியர்களால் கொல்லப்பட்ட யூதர்களின் பக்கம் எத்தகைய எதிர்வினை ஏற்பட்டது என்று பார்த்தால் தமது இனம் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த அடோல்வ் எச்மன் என்ற நாசி இராணுவத் தளபதி உட்பட, நாசிப் படையில் பாதுகாப்பு ஊழியர்களாகக் கடமையாற்றியவர்கள் வரை தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு இஸ்ரேலிலும் ஜேர்மனியிலும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொலைசெய்த ஜேர்மன் இனமும் கொலையுண்ட யூதர்களும் தம்மிடையே இருந்த இன ஒற்றுமை காரணமாகவே இந்த மாற்றங்களுக்கு வந்தார்கள். இத்தகைய இன ஒற்றுமை தமிழ் மக்களிடம் இல்லை. யூதர்களிடம் காணப்பட்ட சமூக அக்கறை தமிழரிடம் இல்லை. யூதர்களிடம் ஓர் அரசு உண்டு. தமிழர்களிடம் அவ்வாறு இல்லை. அதேவேளை தமிழரைக் கொன்றதற்காகச் சிங்கள இனம் வெட்கப்பட்டதாகவோ, தாம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற உணர்வுள்ளவர்களாகவோ இன்னமும் மாறவில்லை.



> நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதில் ஒற்றுமைப்படுகின்றனர்.
> இவற்றை அவர்கள் வெளிப்படையாகவே தெரிவிக்கின்றனர். உலகில் மிகச் சிறிய இனக்குழுவான சிங்களவர்களின் கையில் அரசு இருப்பதுவரை அவர்கள் பலமானவர்களே. இதே ஒற்றுமை தழிழர்களிடம் ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லாதவரை தீர்வு விடயத்தில் தமிழரே தமிழருக்கு இடையூறாக இருப்பர்.

**சாதிப் பிரிவுகளும் காரணம்**

தமிழர்களிடம் நல்லிணக்கம் ஏற்படாததற்குக் காரணம் அவர்களிடம் காணப்படுகின்ற சாதிப் பிரிவுகளே என அரச தலைவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் சாதிப் பிரச்சினைதான் தமிழரின் ஒற்றுமையின்மைக்குக் காரணம். இதைவிட வர்க்க நலனும் இதில் மேலொங்கியுள்ளது. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்கின்ற வர்க்கத்தினரைக்கூட இந்த அடிப்படையில் தனித்து இனங்காண முடியும். அத்தோடு அவர்கள் தமது நலன்களைமட்டுமேபெற முயற்சிக்கின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதை விடுத்து இந்தத் தலைவர்களின் சொந்தப் பிரச்சினைகைளைக் கையாள்வதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களும் வெற்றி பெறுகின்றனர். இந்த வர்க்க நலனைக் கொண்ட உயர் சாதியினர் நீட்சி இன்று - நேற்றுத் தொடர்வது அல்ல. போர்த்துக்கயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் அரசுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு அதிக சொத்துக்களையும் உயர் பதவிகளையும் அடைந்தவர்களும் இவ்வகையினரே. 'அரசுக்கு விசுவாசம்' என்று இவர்கள் மத்தியில் அன்றிருந்த விடயம் தமிழ்த் தலைவர்களிடம் இன்று வரை நீடிக்கிறது.

**ஒற்றுமையில்லை**

பாதிக்கப்பட்ட தமிழர் தொடர்பில் குரல் கொடுக்கின்ற நாடுகடந்த தமிழீழத்தினர், பல நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்கள், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, இன்னுமிருக்கின்ற தமிழ்க் கட்சிகள், பாதிக்கப்பட்ட மக்கள் என்று தமிழர்களுக்குள் பல தரப்புகள் இருந்தபோதிலும் ஆளை ஆள் குற்றம் சாட்டுவதன் மூலமும், தலைமைக்கு அடிபடுவதன் மூலமும் பிரிந்தே நிற்கிறார்கள். தமிழர் தரப்பில் ஐ.நா மனித உரிமைக் குழுவுக்கு ஒரு பிரதிநியைத் தெரிவு செய்து, ஒருமித்த கருத்துடன் சபைக்குள் எடுத்து இலங்கை அரசுக்கு வழங்கிய காலக்கெடுவின் பிரகாரம் அவற்றைக் கண்காணிக்க முடியும் என்கிற நிலை வந்தால், யார் அந்த ஒருவர் என்பதைத் தெரிவு செய்வதில் தமிழர்களுக்கிடையே பெரிய முரண்பாடுகள் ஏற்படும். இத்தகைய ஒரு சூழல்யூதர்களிடம்இருக்கவில்லை.
ஆனால், பல தமிழ் ஆய்வாளர்கள் யூதர்களுடன் தமிழர்களை ஒப்பிட்டுப்பேசுவது நடைமுறையிலுள்ளது. அண்மையில் நடந்த ஐ.நா.விவகாரம் பற்றிக்கூடத் தமிழர்கள் என்ற ஒற்றுமையுணர்வுடன் இவர்களில் எவரும் செயற்பட்டிருக்கவில்லை. அத்தகைய நல்ல மனநிலை ஏற்பட்டிருந்தால், ஐ.நா.விவகாரத்தை எதிர் கொள்வதற்கு முதலில் எங்காவது ஓர் இடத்தில் அல்லது மண்டபத்தில் அனைவரும் ஒன்றுகூடி தாம் அதை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் என்று கலந்து பேசியாவது இருப்பர். இத்தகைய விடயத்துக்கும் தமிழர் தரப்புக்கும் எப்போதும் எட்டாப் பொருத்தம் நிலவி வருவதே இங்கு வெளிப்படை.

**தெளிவற்ற தன்மை**

பன்னாட்டு நீதி விசாரணை வேண்டும் என்று கோருகின்ற தமிழர் தரப்பில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப் பலர் இருக்கின்றனர். ஆனபோதிலும் இந்த விடயத்தைச் சட்ட பூர்வமாக எவ்வாறு அணுகுவது என்பதில் இவர்கள் அனைவரும் தெளிவற்றவர்களாகவே உள்ளனர்.
அதற்கு முன்வருவதில் தயக்கமும் நிலவுகிறது. இவற்றை விடுத்துக் குறைந்த பட்சம் தமது பலவீனம் என்ன என்பதையாவது தெரிந்து கொண்டால் அதற்கான பலத்தைத் தேட முடியும். ஆனால் அதுவும் தமிழரிடம் இல்லை. காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் தமிழர் கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை உயர்நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கவேண்டும். உயர்வான வாதாட்டம் அல்லது நியாயத்தைத் தமிழ்ச் சட்டத்தரணிகள் குழாம் இந்த வழக்கில் மேற்கொண்டிருக்க வேண்டும்.
இலங்கை உயர் நீதிமன்றத்தில் தமிழருக்குப் பாதகமான தீர்ப்பு அறிக்கையைப் பெற்றிருக்கவேண்டும். தமிழருக்குப் பாதகமான அந்தச் சட்டபூர்வ ஆவணத்தை வைத்துப் பன்னாட்டு நீதி நெறிமுறைகளைப் பெற முயற்சித்திருக்க வேண்டும். அதற்கு வெளிநாட்டில் வாழ்கின்ற சட்டத்தரணிகளும் முயற்சி எடுத்திருக்க வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் மேற்கூறப்பட்ட எவையும் சட்டப்படி நடக்கவில்லை. ஆனால், பத்தாண்டுகளாகத் தமிழர்கள் ஐ.நா.மனித உரிமைக் கூட்டத் தொடருக்குப் போய் வருகிறார்கள். சிறந்த ஆடைகளை உடுத்தியவர்களாக, வெள்ளைக்காரர்களுடன் ஐ.நாவின் சின்னத்தைப் பின்னணியில் வைத்துப் படம் பிடித்து மகிழ்கிறார்கள். இதுவே தமிழரின் பலவீனமாகும்.

**சிங்களவர்களின் முன்னேற்றம்**

அண்மையில் நடந்த 40ஆவது மனித உரிமைக் கூட்டத்தொடருக்கு இலங்கை சார்பாக முன்னாள் சட்டமா அதிபரும், தற்போதைய அயலுறவு அமைச்சருமான திலக் மாரப்பன தலைமை தாங்கியிருந்தார். அவர் கூட்டத் தொடரில் இரண்டு விடயங்களை முன்வைத்தார். பன்னாட்டு நீதி விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கான சட்ட அங்கீகாரம் இலங்கை அரசமைப்பில் இதுவரையில்லை என்றவர் அதைக் கொண்டு வருவதாக இருந்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுவரவேண்டியிருக்கும் என்றார். இலங்கை சிறிய நாடாக இருப்பினும் ஓர் இறைமையுள்ள நாடு என்ற வகையிலும், ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடு என்ற வகையிலும் மிகவும் துணிவாகத் தனது கருத்தைக் கூட்டத்தொடரில் கலந்து கொண்ட உலகப் பிரதிநிதிகள் முன்னிலையில் மாரப்பன முன்வைத்தார்.
இறுதிப்போர்க்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளே குற்றத்தை விசாரிப்பதா? என்கிற தமிழர் தரப்பின் கோசங்களை மறுவளமாகப் புரட்டிப்போட்டிருக்கிறார் அவர். உள்நாட்டு நீதிபதிகள் தேவையில்லை, அவர்களில் நம்பிக்கையில்லை என்று வாதிட்டு வரும் தமிழர் தரப்பினரை முடக்குவதற்குரிய அவருடைய சதுரங்க ஆட்டம் அது. குற்றம் சாட்டப்பட்ட தரப்பினரின் (பெரும்பான்மையினர்) அங்கீகாரம் (மூன்றில் இரண்டு பெரும்பான்மை) பன்னாட்டு விசாரணைக்கு வேண்டும் என்கிறார் அவர். தமிழர் தரப்புகள் பிறிதொரு நடு நிலையாளரை வேண்டி நிற்கும் நிலையில், அதைத் தீர்மானிப்பதும் தாமே, இதனால், இந்த நகர்வால் குறித்த விடயத்தை நீர்த்துப் போகச் செய்வது அவருடைய அரசியல் சதுரங்கம். தமிழர்கள் இது விடயமாகப் பத்து ஆண்டுகளாகச் சிந்திக்கக்கூடவில்லை. அரசமைப்பில் அதற்கான மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ளாத சட்ட அறிவுதான் தமிழ்த் தலைமைகளிடம் உண்டு. அதாவது இந்த விடயத்தில் கரிசனையுள்ள தலைவர்களாக இருந்தால் தாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தேடியறிந்திருப்பர். இலங்கை அரசமைப்பில் அதற்கான மாற்றம் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதைத் தமது கோரிக்கைகளில் ஒன்றாகத் தமிழர் தரப்பால் ஐ.நா. மனித உரிமை அமைப்பிடம் முன்வைத்திருக்க முடியும்.







**அரசுக்கு வாய்ப்பளித்த தமிழர்கள்**

போர் முடிவடைந்த பின்னர் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவேன அரசியலுக்கு வந்த தமிழ்த் தலைவர்களும், அரசியலால் மாத்திரமே தீர்வைப் பெற வேண்டும் என்றுகூறி அரசியலைத் தொடர்ந்த தலைவர்களும் இந்த விடயத்தைக் கையாள்வதற்கு ஒரு சிந்தனையாளர் குழுவை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளவர்களை வைத்து அமைத்திருக்க வேண்டும். இதைச் செய்வதற்குத் தமிழ்த் தலைவர்களிடம்ஒருமித்தகருத்து இல்லை. கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகள், இலங்கை அரசுக்குச் சார்பாகவும் எதிராகவும் பிரிந்து செயற்பட்டமை போன்ற விடயங்களால் கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை அரசு வெல்வதற்கான கள நிலவரத்தைத் தமிழர்களே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.
இனப்படுகொலைக்கு எதிரான எதிர்வினையைச் சிங்கள மக்கள் ஒற்றுமையாகவே கையாள்கின்றனர். படுகொலையைச் செய்த ஓர் இராணுவச் சிப்பாய் கூடத் தண்டிக்கப்படக் கூடாது என்பதில் அவர்கள் குறியாகவுள்ளனர்.
நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதில் ஒற்றுமைப்படுகின்றனர். இவற்றை அவர்கள் வெளிப்படையாகவே தெரிவிக்கின்றனர். உலகில் மிகச் சிறிய இனக்குழுவான சிங்களவர்களின் கையில் அரசு இருப்பதுவரை அவர்கள் பலமானவர்களே.
அத்தோடு இதே ஒற்றுமை தழிழர்களிடம் ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லாதவரை தீர்வு விடயத்தில் தமிழரே தமிழருக்கு இடையூறாக இருப்பர். போர் முடிவடைந்த பின்பான ஆண்டுகள் இதையே ஒப்புவித்திருக்கின்றன. சிங்களவர்கள் ஜேர்மனியர்களைப்போலவோ, தமிழர்கள் யூதர்களைப்போலவோ இல்லை.

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்



# நீண்டு செல்லும் நீதி கோரும் போராட்டங்கள்

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புப் பேரவலத்துக்கு நீதி கோரியும், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30ஃ1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்தியும், இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கும் ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதாகக் கூறி இழுத்தடிக்கும் ஏமாற்று நடவடிக்கைகளுக்கும் கடிவாளம் போடும்படி கோரியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணி உணர்வுபூர்வமான உணர்ச்சிக் குரலாக ஒலித்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்படப் பல அரசியல் கட்சிகள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தமை சிறப்பாகும். ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி, அறிக்கைகளை விடுத்து, ஊடக சந்திப்புகளை நடத்தி வரும் இந்த அரசியல் கட்சிகள், அதாவது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதற்குப் பின்னடித்து வந்த தமிழ் அரசியல் கட்சிகள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்கது. ஆனால், கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகக் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களில் மக்கள் நடத்தி வரும் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, அரசியல் மயப்படுத்தி, அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும், இந்த விவகாரங்களைப் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு சேர்க்கவும், இந்த அரசியல் கட்சிகள் தவறிவிட்டன என்பதைக் கவனத்தில் எடுக்காமல் விடமுடியாது.

**மக்களின் உறுதியான போராட்டங்கள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் மைத்திரி அரசுடன் மென் போக்கைக் கடைப்பிடிக்கிறது. ஏனைய அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதிலே காலத்தைக் கடத்துகின்றன. ஆனாலும், இவற்றை உதறித்தள்ளிய மக்கள் தங்கள் போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுத்தனர். கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் அழைப்பை ஏற்று மக்கள் நடத்திய பேரணிகள், கடையடைப்புகள் இதற்கு முக்கிய உதாரணங்களாகும்.

**போலித் தேசியவாதிகள்?**

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த பேரணியில் கலந்துகொண்ட தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழ்ங்கிக் காலத்தை இழுத்தடிப்பதற்குப் பன்னாட்டுச் சமூகம் அனுமதிக்கக் கூடாதென வலியுறுத்தியதுடன் இந்த விடயம் தொடர்பாகத் தாங்கள் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் தொடர்பு கொண்டு பேசி வருவதாகவும் தெரிவித்தார். அதே வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 34ஃ1 தீர்மானத்தின்படி இலங்கைக்குக் கால அவகாசம் வழங்காவிடின் இலங்கை சம்பந்தமாக ஒரு விடயத்தையும் கையாள முடியாது. அவ்வாறு செய்வதால் அது பன்னாட்டு மேற்பார்வையை நீடிக்கிற ஒரு செயற்பாடாக அமையும் எனவும் இலங்கை ஐ.நாவுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றி யதா? இல்லையா? என்பதைக் கண்டறிவது கடினம் எனவும் இதை மறுப்பவர்கள் போலித் தேசியவாதிகள் எனவும் கருத்து வெளியிட்டார். அப்படியானால் நாம் அறிந்த காலத்திலிருந்து தமிழ் மக்களின் உரமைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்தவரும் தமிழ் அரசுக் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் 11முறை சிறை சென்றவருமான மாவை சேனாதிராசா போலித் தேசியவாதியா? கால அவகாசம் வழங்காமல் அடுத்த கட்டத்துக்குச் செல்லவேண்டும் என வலியுறுத்துவது ஐ.நாவின் கண்காணிப்பை இல்லாது செய்துவிடுமென்ற சுமந்திரனின் வாதத் திறமையைத் தமிழ் மக்கள் எவ்வாறு எடுத்துக் கொள்வர்?

**தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை**

2015ஆம் ஆண்டில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட 30/1, 34/1 தீர்மானங்களும், அவற்றை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட நான்கு ஆண்டுகள் கால அவகாசம் குறித்தும் தனது ஆய்வறிக்கையை வெளியிட்ட 'வெறைற்' நிறுவனம் 36தீர்மானங்களில் ஆறு மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தனது கண்டனத்தை வெளியிட்டது.

அந்த அறிக்கை தமிழ் மக்களின் மீள்குடியேற்றங்கள் திருப்திகரமாக இல்லை என்பதைப் புள்ளி விவரங்களுடன் காட்டியது. நிவாரண முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள தமிழர்களின் எண்ணிக்கையையும் வெளி யிட்டது.

மேலும் கேப்பப்புலவு, முள்ளிக்குளம் பகுதிகளில் இடம்பெறும் மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பான போராட்டங்களையும் சுட்டிக்காட்டியது. 2018ஆம் ஆண்டுக்கு முதல் தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டும் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகளை இராணுவம் விடுவிக்க மறுத்து வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

**பரிகாரங்களில் முன்னேற்றமில்லை**

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீடுகள் வழங்கும் அலுவலகம் என்பன உருவாக்கப்பட்டமை சாதனை எனச் சிலரால் போற்றப்படுகிறது. மகிந்த ராஜபக்சவால் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு பரிந்துரை செய்த காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீடு வழங்கல், இறப்புச் சான்றிதழ் வழங்கல், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் என்பவற்றுக்கு அப்பால் ஓர் அங்குலம் கூட அது முன் செல்லவில்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டுப் பயங்கரவாதம் தொடர்பான வேறு ஒரு சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கருத்து வெளியிடும்போது இது முன்னைய சட்டத்தைவிட மோசமானது என்றும் இது எப்போதும், எவரையும் கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு அதிக அதிகாரத்தை வழங்குகின்றது எனவும், இதனால், தொழிலாளர்கள், மாணவர்கள் உட்பட்ட மக்களின் போராட்டங்கள் கொடிய முறையில் ஒடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். இப்படியான நிலையில் தமிழ் மக்கள் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்.

**கால அவகசத்துக்குள் இலங்கை செயற்பட்ட விதம்**

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக எவ்வித வழக்கு விசாரணைகளும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் சிலர் மீது மேலும் குற்றங்கள் சுமத்தப்பட்டன. நூறு, இருநூறு வருடங்கள் என மீளாச் சிறைக்குள் அவர்கள் அனுப்பபட்டனர். இப்படித்தான் ஐ.நாவால் வழங்கப்பட்ட இந்த நான்கு வருட கால அவகாசத்தில் இலங்கை தனது செயற்பாட்டுத் திறமையை வெளிக்காட்டியிருந்தது. இப்படியான நிலையைத் தொடர்வதற்கா இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படுகிறது? என்ற கேள்வி எழுகிறது. மகிந்த ராஜபக்சவைப்போன்று மேற்கு நாடுகளுடன் முரண்பாடாகவோ, மைத்திரிபால சிறிசேனா போன்று ஐ.நாவுக்குச் சவால் விடுவது போன்றோ ரணில் விக்கிரம சிங்க செயற்படுவதில்லை. அவர் மேற்குலகின் தீர்மானங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அனுசரனையும் வழங்கி விடுவார். ஆனால், அவற்றை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பார். மேற்குலகம் தன் மீது கோபம் கொள்ளாமல் தவிர்ப்பது, உள்நாட்டு எதிர்ப்புகளைத் திசை திருப்புவது, அபிவிருத்தி நிதிகளை அவிழ்த்து விடுவது போன்ற வழிமுறைகளையும் அவர் நன்கறிவார். ஐ.நா மனித உரிமை பேரவையால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடையும் நிலையில் இலங்கை அனைத்துலக நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதை அறிந்த அவர், அதற்காகப் பிரிட்டனிடம் ஓடிப்போய்க் கருணை காட்டுங்கள் எனக் கோரவில்லை.

**ஒருமித்த குரலால் நீதியை வெல்லலாம்**

இலங்கைக் கைத்தொழில் பேட்டைகள், அவற்றைக் குத்தகைக்கு விடும் விடயம், ரணில் விக்கிரமசிங்க பன்னாடுகளுடன் முன்னெடுக்கும் வணிக, வர்த்தக, அரசியல் அணுகுமுறைகள் அனைத்தும் ஒன்றித்து மேற்குலக வல்லரசுகளை இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளின. இதனாலேயே பன்னாடுகள் இலங்கைக்கு மேலும் மேலும் கால அவகாசம் வழங்குகின்றன. இதனால் தமிழர்கள் பன்னாட்டுச் சமூகத்திடம் நீதியை எதிர்பார்ப்பதில் பயனில்லை என்பதும் வெளிச்சமாகிறது. ஆனால், பன்னாட்டுச் சமூகத்தை நீதியை நிலைநாட்ட வைப்பதில் பாதிக்கப்பட்ட மக்களாகிய தமிழ் மக்கள் காத்திரமான பங்கை வகிக்க வேண்டும். எமக்கு இழைக்கப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும், மனித உரிமை மீறல்களையும் அநீதிகளையும் முன்வைத்து எமது போராட்டத்தைத் தொடரும்போது அனைத்துலக ஆதரவு நிச்சயம் கிட்டும். தமிழர் உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்கின்ற தமிழ் மக்கள் மத்தியிலுள்ள கட்சிகள், எவையும் ஒன்றுக்கொன்று எதிரிகள் அல்ல என்பதும் எமது எதிரிகள் அடக்குமுறையாளர்களும், அவர்களின் அடிவருடிகளுமே என்பது உணரப்பட்டுத் தமிழ்த் தலைமைகளின் ஐக்கியம் உறுதிப்படுத்தப்பட்டுப் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராட்டங்களில் இறங்க வேண்டும். இவ்வாறு செய்தால் மாத்திரமே நீண்டு கொண்டிருக்கம் நீதிக்கான போராட்டத்தை வெற்றி கொள்ள முடியும்.



# உள்ளக நீதித்துறை சுயேச்சையாக இருக்காது

மூலம்: சண்டே ஒப்சேவர்
தமிழில்: எஸ்.பெருமாள்



இலங்கைப் போர்க்குற்ற விடயத்தில் பன்னாட்டுக் கலப்பு நீதிபதிகள் விசாரணையே அவசியம் என்பதற்குப் பொருத்தமான சான்றாகக் கரண கொடவின் விலக்களிப்புக் கோரும் மனுவைச் சுட்டிக் காட்டுகிறார் சுமந்திரன். அது குறித்து ஆங்கிலத்தில் வெளியாகிய சுமந்திர னின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

**போ**ர்க் காலத்தில் ஆயுதப் படையொன்றின் தளபதியாக ஒருவர் பதவிவகித்திருந்தால், கைது செய்யப்படுவதற்கு அவருக்கு விலக்களிக்கப்படும் என்கிற சலுகையை அவர் பெறுகிறாரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கேள்வியை எழுப்பினார். முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரண கொட, தாம் கைது செய்யப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் எனக் கோரி இலங்கை உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்திருந்தமை தொடர்பாகவே சுமந்திரன் இந்தக் கேள்வியை எழுப்பினார்.
இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டதாவது, கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவா தங்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு தரப்புகளில் இருந்தும் எமது உயர் நீதிமன்றம் சுயேச்சையாக இப்பொழுது செயற்படுகின்றது. கடந்த நவம்பர்-டிசெம்பர் மாதங்களில் அவர்கள் வழங்கியுள்ள தீர்ப்புக்களைப் பாருங்கள் என்று கூறியதுடன் பொறுப்புக்கூறல் விடயத்தில் நாம் பன்னாட்டு நீதிபதிகளை நாட வேண்டியதில்லை. எமது நீதிபதிகள் சுயேச்சையானவர்கள் என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. எனவே போர்க்காலக் கொடூரங்கள் தொடர்பாக எமது உள்ளக நீதித்துறை மூலமே விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று வலியுறுத்தினார்கள்.



> நாங்கள் வற்புறுத்துகின்றோம். அரசு, ஐ.நா. மனித உரிமை சபைக்கு வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றவேண்டும், செயற்படுத்தப்பட வேண்டும் என்று அனைத்துல நீதி பதிகளின் பங்களிப்போடு பொறுப்புக் கூறும் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படும் என்று அரசு வாக்களித் துள்ளது. அது செயற்படுத் தப்படவேண்டும். அரசு ஒத்துழைத்துச் செயற்படுவதுடன் அரசு வழங்கிய உறு திமொழி என்பதை உணர வேண்டும்.

**கட்சிகளுக்கு இடையிலான விடயமல்ல இது**

அந்த விவாதத்தில் தலையீடு செய்து நான் பேசியபோது, இது இந்த நாட்டிலுள்ள இரண்டு கட்சிகளுக்கிடையிலான விவகாரமொன்றால் உங்கள் கருத்துச் சரியாக இருக்கும். ஆனால் இலங்கை அரசுக்கும் ஆயுதம் தரித்த ஒரு குழுவுக்கு இடையிலான விவகாரம் என்று வரும் போது உள்ளக நீதித்துறை சுயேச்சையாக இருக்காது. இது கடந்த வாரங்களில் இடம்பெற்ற சில விசாரணைகளின் போது நிரூபிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்றிருப்பதால் அவை பற்றி இங்கு குறிப்பிடுவது நீதிமன்றச் செயற்பாடுகளில் தலையிடுவதாகாது. கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரண கொட தாம் கைது செய்யப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ததைக் குறிப்பிட விரும்புகின்றேன். நீதிவான் நீதிமன்றங்களில் பிணை மனு மீது தாம் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்புக் கோரி விண்ணப்பம் செய்யக் கூடிய வசதி இருக்கும் போது நபர்கள் உயர்நீதிமனுக்கு ஓடுவது ஒரு பகிடி போல ஆகிவிட்டது என்றார்.

**கொல்லப்பட்டவர்கள் 11 பேரும் தமிழ் இளைஞர்கள்**

இந்த விவகாரத்தைச் சுட்டிக்காட்டிச் சுமந்திரன் மேலும் கூறியதாவது, கொழும்பிலும் அதன் சூழலிலும் வாழ்ந்த தமிழ் பேசும் இளைஞர்கள் 11பேர் கடத்தப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கரண கொட அறிந்திருந்தார் என்பதாக அவர் நீதிவான் நீதிமன்றில் குற்றச்சாட்டப்பட்டிருந்தார். இந்த இளைஞர்கள் 11 பேருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்தவித சம்பந்தமும் இருந்ததில்லை. எனவேதான் நான் எழுப்புகின்ற கேள்வி என்னவென்றால் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட இளைஞர்கள் விடுதலைப்புலி உறுப்பினர்களாக இருக்கவில்லை. போரிலும் கூட எதுவிதத் தொடர்பும் அற்றவர்களாய் இருந்துள்ளனர். இதில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் இலங்கை ஆயுதப் படையின் உறுப்பினர்கள். ஆள்கடத்தல் மற்றும் அதன் மூலம் பணம் வசூல் செய்யும் ஊழல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையால் அவரைக் கைது செய்ய முடியவில்லை. இந்த ஆள் கடத்தல் மூலம் பணம் வசூல் செய்யும் ஊழல் விவகாரம் தொடர்பாக அப்போது பதவியில் இருந்த தளபதி அறிந்திருந்தார் என்பது நீதிமன்றில் வெளிப்படையானது. அவரே பொலிஸில் முறைப்பாடும் செய்திருந்தார். இதுபற்றிய முதல் முறைப்பாடு அவருடையதாகவே இருந்துள்ளது.
மேலும் அவர் போர்க் காலத் தளபதி. அதனால் அவர் கைது செய்யப்படலாகாது என்ற வகையில் உயர் நீதிமன்றத்தில் அவருடைய மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. போர்க் காலத்தில் ஒருவர் ஆயுதப் படை அணியொன்றின் தளபதியாக இருந்தார் என்பதற்காக அவருக்குக் கைது செய்யப்படுவதிலிருந்து விலக்களிப்பட முடியுமா? என்பதையே நான் கேட்க விரும்புகிறேன். முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடயத்தில் அப்படி நடந்ததாக எமக்கு தெரியவில்லை.

**நீதித்துறையின் பக்க சார்பு நிலை**


இதில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் தமிழ் பேசும் இளைஞர்கள். அவர்கள் திருகோணமலை 'கன்சைட்' கடற்படைத் தலைமையக இரகசியத் தடுப்பு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். இது பகிரங்கமான விடயம். இவ்வாறு அனேகர் அந்த முகாமில் கொலை செய்யப்பட்டார்கள் என்பதற்கு அளவுக்கு அதிகமாகவே ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவர்கள் ஒருவேளை விடுதலைப்புலி உறுப்பினர்களாக இருந்திருக்கலாம். அந்த விடயங்களில் எதுவித முன்னேற்றத்தையும் நாம் காணவில்லை. ஆனால் இவர்கள் மிக இளவயதினர். இவர்களின் பெற்றோர் நீதிகேட்டுக் க்ண்ணீர் விட்டு கதறிக்கொண்டிருந்த நிலையில் பத்து வருடங்களின் பின்னர் இந்த இயந்திரம் நகரத் தொடங்கியுள்ளது. இருந்தாலும் விசாரணைகள் ஒரு போர்க்காலத் தளபதியை நெருங்கிய சமயத்தில் முழு அரச இயந்திரங்களும் உயர் நீதிமன்றம் உட்பட... மறுபடியும் கூறு கின்றேன் உயர்நீதிமன்றம் உட்பட ஒரு தலைபட்சமாகவே நடந்து கொண்டுள்ளார்கள். அவர் கைது செய்யப்படுவதில் இருந்து தவிர்ப்பதற்காக நீதியற்ற முறையில் செயற்பட்டிருக்கிறார்கள்.
அந்த பொது மேடையான திறந்த நீதிமன்றத்தில் கரண கொடவின் சட்டத்தரணி கூறினார், சட்டமா அதிபரும் உதவிச் சட்டமா அதிபரும் (சொலிசிட்டர் ஜெனரல்) பதவி உயர்வு கேட்டுத் தினமும் அரச தலைவ்ரிடம் போகிறார்கள். எனவே அவர்களின் கருத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. சட்டமா அதிபருக்காக நீதிமன்றில் தோன்றிய மேலதிக உதவிச் சட்டமா அதிபரும் அதை மறுத்துரைக்கவில்லை. மேலதிக உதவிச் சட்டமா அதிபர், உண்மையில் சொல்லப் போனர்ல் முதல் நாள் கரண கொடவின் கைதை வலியுறுத்தியவர் அடுத்த நாளில் குத்துக்கரணம் அடித்திருந்தார். கரண கொட கைது செய்யப்பட வேண்டியதில்லை என்றார்.
இப்படியான விடயங்கள் வரும்போது நீதித்துறையும் சட்டமா அதிபர் திணைக்களம் முதலியவை பக்கச் சார்பாகச் செயற்படுகின்றன என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. விடுதலைப் புலிகளுடன் எதுவித சம்பந்தமும் இல்லாத தமிழ்ப் பேசும் இளைஞர்கள் விடயத்தில் இவ்வாறு நடந்து கொள்வார்கள், விடுதலைப்புலிகள் சம்பந்தமான விடயங்களாகவே இருக்குமானால் இன்னும் எவ்வளவு அதிகம் பக்கச் சார்பாக நடப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.
எனவேதான் நாங்கள் வற்புறுத்துகின்றோம். அரசு, ஐ.நா. மனித உரிமை சபைக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவேண்டும், செயற்படுத்தப்பட வேண்டும் என்று அனைத்துல நீதிபதிகளின் பங்களிப்போடு பொறுப்புக் கூறும் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படும் என்று அரசு வாக்களித்துள்ளது. அது செயற்படுத்தப்படவேண்டும். அரசு ஒத்துழைத்துச் செயற்படுவதுடன் அரசு வழங்கிய உறுதிமொர்ழி என்பதை உணர வேண்டும்.

**ஐ.நா.மனித உரிமை சபை கவனத்தில் கொள்ள வேண்டும்**

உயர் நீதிமன்றத்திலுள்ள கரண கொடவின் வழக்கானது இந்த மாதிரியான விடயங்களில் நீதி கிடைக்க மாட்டாது என்பதை உலகம் முழுவதற்கும் வெளிப்படுத்தியுள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் சபையானது இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். கரண கொடவின் சட்டத்தரணியானவர் திறந்த நீதிமன்றில் பட்டப்பகல் வேளையில் பின்வருமாறு கூறினார். "அது போர்க் காலமாக இருந்துள்ளது. அவர் ஏதும் கொலைகள் புரிந்திருக்கலாம். பொலிஸுக்கு அறிவிக்க வேண்டிய அவசிம் என்ன அவருக்கு" எந்தவொரு கொலையும் தண்டனை இன்றியே முடிவுக்கு வந்திருக்கும். இப்பொழுதும் கூட விலக்களிப்பு இருக்கும் மேலும் விலக்களிப்பு இருக்கும் நிலையிலேயே இவை இடம்பெற்றுள்ளன என்பதையே இவை காட்டி நிற்கின்றன.

# வீட்டில் குடியிருந்த 45 பாம்புகள்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் ஒரு வீட்டின் அடியில் கொடிய விசத் தன்மை வாய்ந்த 45 கட்டுவிரியன் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அப்புறப் படுத்தப்பட்டன.



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள அல்பேனி பகுதியில் ஒரு வீட்டின் உரிமையாளர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென கேபிள் சேவை பாதிக்கப்படவே, தற்செயலாக வீட்டிற்கு அடியில் வந்து பார்த்துள்ளார். அடியில் சில பாம்புகள் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து உடனடியாக அந்தப் பகுதியின் பாம்புகள் பிடிக்கும் குழுவினருக்கு தகவல் கொடுத்துள்ளார். பாம்புகளை பிடிப்பவர்கள் சிலர் அந்த வீட்டிற்கு விரைந்தனர். தொடக்கத்தில் சில பாம்புகளை கண்ட அவர்கள், பின்னர் உள்ளே சென்று பார்த்தபோது 45க்கும் மேற்பட்ட கொடிய விஷத்தன்மை வாய்ந்த விரியன் வகை பாம்புகள் இருப்பதை கண்டு திகைத்தனர். பின்னர் சாமர்த்தியமாக அனைத்து பாம்புகளையும் பிடித்துச் சென்றனர்.

**'ஒன்றல்ல இரண்டல்ல 45...'**



# ஐரோப்பியக் கூட்டமைப்பால் இங்கிலாந்துக்கு அவகாசம்!

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான காலக்கெடு நீட்டிக்க ப்பட்டுள்ளது. ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையின் காலக்கெடு வருகிற 29ஆம் திகதி முடிவடைகிறது. ஆனால் பிரெக்ஸிட்டுக்காக ஐரோப்பிய கூட்டமைப்புடன் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் திரேசா மே ஏற்படுத்திய ஒப்பந்தத்தை 2 முறை அந்த நாட்டு நாடாளுமன்றம் பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் நிராகரித்துவிட்டது. அத்துடன் ஒப்பந்தம் இல்லா 'பிரெக்ஸிட்' தீர்மானமும் 2 முறை நிராகரிக்கப்பட்ட நிலையில், பிரெக்ஸிட்டை தாமதப்படுத்துவதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. இதனால் பிரெக்ஸிட்டின் காலக்கெடுவை நீட்டிக்க வேண்டுமென தெரசா மே ஐரோப்பிய கூட்டமைப்பிடம் கோரிக்கை வைத்தார்.

இந்த நிலையில் பெல்ஜியம் நரட்டில் நடந்து வரும் ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ள தெரசா மே, மாநாட்டுக்கு மத்தியில், ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர் டொனால்டு டஸ்க்கை சந்தித்து பிரெக்ஸிட் விவகாரம் குறித்து பேச்சு நடத்தினார்.

அப்போது பிரெக்ஸிட்டின் காலக்கெடுவை நீட்டிக்க டொனால்டு டஸ்க் ஒப்புக்கொண்டார். இது குறித்து அவர் கூறுகையில், 'பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை இங்கிலாந்து நாடாளுமன்றம் ஆதரித்தால் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேற மே மாதம் 22ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்படுகிறது. மாறாக அந்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் அடுத்த மாதம் 12ஆம் திகதிக்குள் வெளியேறியாக வேண்டும்' என்றார்.

**'என்ன செய்யப்போகிறது இங்கிலாந்து'**



# பேருந்துகள் மோதல் உயிரிழப்பு அதிபகம்!

## கானாவில் சோகம்


மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவின் தென்பகுதியில் இன்று இரு பேருந்துகள் நேருக்குநேராக மோதிய விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர்.

கானா நாட்டின் தெற்குப் பகுதியில் சமீபத்தில் கிழக்கு போனோ என்னும் தனி மாகாணம் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணத்தின் வழியாக சென்ற இரு பேருந்துகள் நேருக்குநேராக மோதிய விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர் என்று கிழக்கு போனோ போலீஸ் உயரதிகாரி ஜோசப் அன்ட்வி கியாவு தெரிவித்துள்ளார்.

**'கானாவுக்கு துயரச் செய்தி'**

ரவுண்ட் தவேர்ல்ட்

தொகுப்பு
பிரகாஸ்



# வடகொரியா மீதான அமெரிக்காவினது தடைகள் நீங்கின

வடகொரியா மீது அமெரிக்கா விதித்த சமீபத்திய தடைகளை திரும்பப் பெற்றுக் கொள்ள நான் உத்தரவிட்டுள்ளேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறினார். ஏற்கனவே இருக்கும் தடைகளுடன் கூடுதலாக விதிக்கப்படும் பெரிய அளவிலான தடைகள் விலக்கப்படும் என அவர் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான இரண்டாவது சந்திப்பு வியட்நாமில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது தன் மீதான தடைகளை நீக்குமாறு வடகொரியா கோரியது. எனினும் ட்ரம்ப் மறுத்தார்.

இதையடுத்து பேச்சில் இருந்து விலகியது வடகொரியா. அந்த நாடு ஏவுகணைச் சோதனைகளை மீண்டும் நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் வடகொரியா மீது அமெரிக்கா தனியாக விதித்த கூடுதல் தடைகளை விலக்கிக்கொள்வதாக ட்ரம்ப் அறிவித்தார்.

**'வழிக்கு வந்ததா அமெரிக்கா...'**

# மகிழ்ச்சியானது பின்லாந்து

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் பின்லாந்துக்கு முதலிடம் கிடைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை உலகிலேயே மகிழ்ச்சியான 150 நாடுகளின் பட்டியலை புதன்கிழமை வெளியிட்டது. இந்தப் பட்டியல் வருமானம், சுதந்திரம், நம்பிக்கை, ஆரோக்கியமான வாழ்க்கை, சமூக ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சபை வெளியிட்ட இந்தப் பட்டியலில் முதல் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ள நாடுகளில் பின்லாந்து முதலிடத்தையும், பின்லாந்தைத் தொடர்ந்து டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, சுவீடன், நியூசிலாந்து, கனடா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் உள்ளன.

**'ஐரோப்பியாவுக்கே உரிய அடையாளம்...'**



கட்டுரை

வி. அருணாசலம்

# பட்டதாரிகள் எனும் 'புறோயிலர்கள்'



சிறந்த சோம்பேறி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான போட்டி ஒன்று நடந்தது. பல்வேறு வகையான போட்டி விதிமுறைகளையும் தாண்டிச் சிறந்த சோம்பேறியாக ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு விருது வழங்கும் வைபவம் நடந்தது. போட்டியில் வெற்றிபெற்றவரின் பெயரை ஒலிபெருக்கியில் உரத்துக் கூறி, மேடைக்கு வந்து அவருக்குரிய பரிசைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டது. ஆனால் பரிசுக்குரியவர் மேடைக்குச் செல்லவில்லை. மேடைக்கு அருகிலே அமர்ந்திருந்த அவர், "மேடையில் ஏறிப் பரிசு வாங்கப் பஞ்சியாயய் இருக்கு நீ போய் வாங்கிக் கொண்டு வா" என்று அருகில் இருந்தவரிடம் கேட்டு நின்றாராம். இந்தச் சோம்பேறியின் நிலையே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேலையற்றிருக்கிற ஒருதொகைப் பட்டதாரி இளைஞர், யுவதிகளின் நிலையாக அண்மையில் இனங்காணப்பட்டிருக்கிறது. வேலையற்றிருக்கிற இந்தப் பட்டதாரிகளுடைய நிலையாக மாத்திரமன்றி வேலையைப் பெற்றிருக்கிற பல பட்டதாரிகளின் நிலையும், அரச வேலையிலிருக்கின்ற ஊழியர்கள் பலரது நிலையும்கூட இவ்வாறு சோம்பேறித்தனங்கள் நிறைந்தவையாக இருப்பதே உண்மை.

**விவரம் திரட்டிய வடக்கு ஆளுநர்**

அண்மைக் காலத்தில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட்ட ஒரு தொகைப் பட்டதாரிகள் தமது நியமனத்தைப் பெற்றுக்கொள்ளாமல் விட்டமை பேசு பொருளாகியிருந்தது. வேலை கேட்டுப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் சூழலில், வேலை வாய்ப்புகள் அரிதாகக் கிடைக்கின்ற கால கட்டத்தில் குறித்த நியமனங்களுக்கு முகம் காட்டியிராத பட்டதாரிகள் குறித்த விவரங்களைத் திரட்டித் தருமாறு வடக்கு ஆளுநர் தெரிவித்திருந்தார். பெரும் பிரச்சினையாக வேலை வாய்ப்பற்ற நிலை நீடித்து வரும் நிலையில், வேலை கிடைத்தும் அதற்குச் சென்றிராத குறித்த பட்டதாரிகள் பற்றிய விவரங்களை ஆளுநர் கோரியிருந்தமைக்குப் பல்வேறு காரணங்களைப் பலரும் ஆளுடம் கூறியிருந்தனர். தூரப் பிரதேச நியமனமே இதற்கு முக்கிய காரணம் என்று பேச்செழுந்தது. குறித்த பட்டதாரிகளுக்குத் தற்போது நியமனம் வழங்கிய தூரப் பிரதேசங்களைக் குறித்து வைத்து, அவர்களுக்கு எப்போது, எந்த வகை அரச வேலை வழங்குவதாயினும் குறித்த நியமனப் பகுதியிலே வழங்குவதற்குரிய நடவடிக்கையை ஆளுநர் எடுத்திருப்பதற்கே அவர்களின் விவரங்கள் கோரப்பட்டன என்றும் பரவலாகப் பேசப்பட்டது. எது எப்படியிருப்பினும் தூரப் பிரதேசங்களுக்குச் சென்று பணியாற்றுவதற்குப் பின்னடிக்கும் தன்மை எம்மவர்களுக்குள் இருப்பது மறுக்க முடியாததே.

**தூரப் பிரதேசங்களைப் புறக்கணிக்கும் போக்கு**

வேலை வாய்ப்புகளின் பகிர்வு நியமனம் தொடர்பில் அரச நிர்வாகங்களுக்குள் ஒழுங்கற்ற தன்மை நிலவுவது மறுக்கப்பட முடியாதது. ஆனாலும் தூர மற்றும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் பணியாற்றுவதை விரும்பாத பட்டதாரிகள் பலரும்கூட இந்தச் சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இலவசக் கல்வி எனும் பெயரில் தமது கற்கையைப் பூர்த்தி செய்கின்ற ஆசிரியர்களாகட்டும், மருத்துவர்களாகட்டும் அந்த இலவசக் கல்வியின் முடிவில் தாங்கள் பெற்றுக் கொள்ளும் வேலைவாய்ப்பை மக்களுக்குப் பயன்படும் விதமாக முன்கொண்டு செல்வதற்கு முன்வருவதில்லை. ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு அற்று மக்களிடம் அறவிடும் அனைத்துவித வரிகள், கட்டணங்களூடாகவே அரசு இயங்குகிறது. அவ்வகை அரசு வழங்கும் இலவசக் கல்வி என்பது நேரடியாக அந்த மக்களிடம் இருந்து பெறப்படுவதன்றி வேறல்ல.

இதைப் பயனாளர்கள் ஏனோ உணர்வதில்லை. கற்கையின் பின்னர் வேலை வாய்ப்புக்குள் புகும்போது ஏழை மக்கள்(வறுமைப் பிரதேசம்), தூரப் பிரதேசங்கள் எனப் பாகுபாடு காட்டி நிற்கின்றனர். குறிப்பாக யாழ். மாவட்டத்தின் தீவகப் பகுதிகளில் பணியாற்றுவ தற்குப் பின்னடிக்கின்ற அரச ஊழியர்கள் குறிப்பி டத்தக்கவர்கள்.

**பட்டதாரிகள் மீதான விமர்சனங்கள்**

வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதில் அரசு காட்டிவரும் மந்த நிலை காரணமாகப் பட்டதாரிகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். அதன் பயனாகச் சிலருக்கு வேலை கிடைக்கவும் செய்தது. பட்டதாரிகளின் வேலைக்கான போராட்டம் உச்சம் பெற்றிருந்த காலத்தில் கூட அவர்களுடைய போராட்டத்தைப் பலரும் விமர்சித்திருந்தனர். 2012ஆம் ஆண்டிலிருந்து பட்டதாரிகளாகப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியவர்கள் தங்களுக்கு 'அரச உத்தியோகமே வேணும்' என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.

'அதைத் தவிர, எங்களால் வேறு எதையும் செய்ய முடியாது' என்பது அவர்தம் ஒற்றைக்கால் நிலைப்பாடு என்று சமூக வலைத்தளங்களிலும், பகிரங்கமாகப் பேசப்பட்டது. கோழி மேய்ப்பதானாலும் கொர்ணமெந்து உத்தியோகமே வேணும் என்ற கொள்கையுடன் அரசவேலையிலுள்ள சொகுசுத் தன்மை, அரச வேலை முடிவில் கிடைக்கின்ற ஓய்வூதியம் என உழைக்கும் வர்க்கத்துக்கு நேர் எதிர் நிலைப்பாட்டில் வேலைக்காகப் படித்த இந்தப் பட்டதாரிகள் சமுதாயம் தலைகாட்டி நிற்பது குறித்தும் பேசப்பட்டது. இந்த நிலைமையை உருவாக்கியதில் அரசின் பங்கும் குறிப்பி டத்தக்க அளவிலுள்ளது. சுயதொழில் முயற்சி ஒன்றைத் தொடங்குவதற்கோ, பிற முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கோ தேவையான திறனை இந்தப் பட்டதாரிகளுக்கு எந்தப் பல்கலைக்கழகங்களும் வழங்கவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளை - முறைமைகளை அரசு பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தவும் இல்லை. இதனால் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டதாரிகள் என்ற அடையாளத்தோடு வெளிவருவோர், புறொயிலர் கோழிகளைப் போல வெளிச்சூழலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாதவர்களாகவே உள்ளனர் என்கிற கருத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதே. அரசின் தயவை எதிர்பாராமல் தனியார் நிறுவனங்களில் கால் வைத்துவிட்ட, தனித்துத் தொழில் துறையில் வளர்ந்து நிற்கின்ற ஒரு சில பட்டதாரிகள் புரியும் பணிக்கும் அரச உத்தியோகம் பெற்றுக் கொண்ட பட்டதாரிகள் பலர் புரிகின்ற பணிக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியா சங்கள் இருப்பது உண்மையே. இந்த இரண்டு தரப்பினரும் நாளொன்றுக்கு ஆற்றுகின்ற வேலை மதிப்பீடு, இவ்விரு தரப்பினரும் சிந்துகின்ற வியர்வை மதிப்பீடு என்பனவும் மேற்கூறிய மலை - மடு விடயத்துக்கே இட்டுச் செல்லும். பிற்கால ஓய்வூதியம், பணிச் சுமையற்ற சொகுசு வேலை என்பனவற்றுக்காகவே பட்டதாரிகள் அரச வேலைக்காக மாத்திரம் காத்திருக்கின்றனர் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. இத்தகைய சொகுசு எதிர்பார்ப்பின் உச்சமே வீட்டுக்கு அருகில் வேலை என்கிற இன்றைய நிலைக்கு வித்திட்டது என்பதும் மறுக்கமுடியாதது.

**எந்தச் சூழ் நிலைக்கும் தாக்குப் பிடிக்கத் தயாரில்லை**

அண்மையில் குடாநாட்டில் நான்கு பிரதேச செயலகங்களுக்குச் சிங்கள இனத்தைச் சேர்ந்த சாரதிகளை நியமிப்பது பற்றித் தமிழ்த் தேசிய வாதிகள் குமுறியிருந்தனர். இன்று யாழ்ப்பாணத்துக்கு வேலைக்கமர்த்தப்பட்ட அந்தச் சிங்களவர்கள் அடுத்தடுத்த வருடங்களில் அனுராதபுரம், மாத்தறை, பதுளை என மாற்றப்படலாம். இந்த நடைமுறைக்குக்கு வீட்டுக்கு அருகில் வேலைகோரும் நிலைக்கு வந்துவிட்ட, நியமனத்தைப் புறக்கணிக்கின்ற குடாநாட்டுத் தமிழ்மகன் ஒருவர் தயாராக இருக்கிறாரா என்பது பற்றியும் சிந்தித்தாக வேண்டும்.

குறைந்த பட்சம் மன்னாருக்கு மாற்றி னாலாவது அதை இங்குள்ளவர் ஏற்றுக் கொள்வரா? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அதைவிடுத்து எடுக்கிற எடுப்பில் எல்லா விடயங்களிலும் சிங்களவன் - தமிழன் என்று தேசியம்பேசுவதில் பயனில்லை.

**அதிகாரங்களை இழக்கும் நிலை**

வடக்கில் பல பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்படவிருக்கின்றன. அதேவேளை மெறகாகந்த நீர் இரணைமடுவுக்குப் பாய்ச்சப்படுகின்றபோது இரணைமடுக்ககுளம் தேசிய நீர்ப்பாசனத்துக்குள் வந்துவிடும். வடக்கில் புதிய் பல்கலைக்கழகக் கட்டடங்கள் ஏனைய திணைக்களங்களின் விரிவாக்கம் என்பன மகாண சபையை முடக்கிவிட வாய்ப்புண்டு. தேசிய திணைக்களங்களை மாகாண நிர்வாகத்தால் கட்டுப்படுத்த முடியாது.

வடமாகாண சபையின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் அதன் ஆட்சிக்குட்பட்ட மாவட்டங்களில் பணியாற்றலாம் என மத்திய அரசால் முடக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கீழ் நியமிக்கப்பவர்களை நினைத்த நேரத்தில் இலங்கையின் எந்தப் பகுதிக்கும் மாற்ற முடியும். அந்த மாற்றத்துக்கு உடன்பட்டே நியமனத்தையும் பெற முடியும்.

அந்த மாற்றத்துக்கு வீட்டுக்கருகில் வேலை தேடுபவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது. தமிழ் இளைஞர், யுவதிகள் வீட்டுக்கருகில் வேலை கேட்பது கூட கொழும்பு அரசு இவ்வாறு முன்னெடுத்துவரம் மூலோ பாயத்துக்கே வலுச் சேர்க்கிறது. சிறுபான்மை இனம் தனது அதிகாரங்களை இழப்பதை இங்கு கவனித்தாக வேண்டும். இதற்கு இந்தச் சிறுபான்மை இனமே காரணமாக இருக்கிறது.

தமிழர்கள் தமக்குரிய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களாகப் பலதையும் இழக்கின்றனர். இது இலங்கை அரசுக்குச் சாதகமான விடயமே.

2009ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்துக்கு வெளியே வேலை செய்யும் வழமை அதுவும் வடக்குக் கிழக்குப் பகுதிக்கு வெளியே சென்று பணியாற்றும் வழமை இருந்தது. அன்று வெளி மாவட்டங்களில் பணியாற்றிய பலர் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழித்தேர்ச்சி மற்றும் சிறந்த ஆற்றலுடைய அதிகாரிகளின் கீழ் பணியாற்றிய அனுப்வம் என்பவற்றால் தேசிய ரீதியில் பணியாற்றும் துணிவைப் பெற்றார்கள்.

யாழ். குடா நாட்டிலுள்ளவர்களில் பலர் வடக்குக் கிழக்கு இணைந்த தனிநாடு தனி நிர்வாகத்தில் அக்கறையுள்ளவர்களாகப் பேசிக்கொண்டாலும் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கோ, தூரம் பயணித்துக் கிழக்கு மாகாண மக்களுக்கோ சேவை செய்ய விரும்புவதில்லை. பல்கலைக்கழகத்திலிருந்து மருத்துவர்களாக அல்லது பொறியியலாளராக வெளியேறுவோர் தமது மண்ணில் வேலை செய்ய முன்வருவதில்லை. சிங்கள இனத்துப் பட்டதாரிகள் பலர் இங்கு வந்து இடம் அவர்களின் இடங்களை நிரப்பி யிருப்பது பொய்யல்ல. இந்த நிலை நீடித்தால், 2019ஆம் ஆண்டில் வடக்கு அபிவிருத்திக்காகப் பொருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவற்றை நிறை வேற்றுவதற்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியே இருந்தே பணியாளர்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.



சிறுகதை

தையிட்டி அ.இராசதுரை

# கண்காட்சி



மோட்டார் பைக்கில் பயணிப்பவர்கள் தொடர்பான அக்சிடெண்டுகள் வரவரக் கூடிக் கொண்டு போகின்ற அந்த நேரமாகத் தான் அந்த அகோர வேளையாகத் தான் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரப் பெண்டுகளான நாச்சிமுத்துவும் சிந்தாமணியும் இருந்துவிட்டு எப்பவாலுமொரு நாளைக்கென்ற கணக்காய் ஒரு உதயன் பேப்பரை வைத்திருந்து பிணைந்து கொண்டிருக்கும்போது தான் ஒரு யதார்த்தமாகியேவிட்டதொரு மோட்டார் பைக். கோர அக்சிடெண்ட் செய்தியொன்றையும் கண்டுபிடித்தும் விடுகின்றார்களே! "எங்கடை வீட்டிலை அப்படியான அவமருந்தான மோட்டார் சைக்கிள் சாவுக்குரியதொண்டுமில்லைதானே" என்ற புளுகத்தோடு நாச்சிமுத்து மோட்டார் பைக்கில் ஜோடியாய் நித்தமும் வேலைக்குப் போய்வரும் சிந்தாமணியின் மருமகளையும் மகனையும் நினைத்துக் கொண்டே ஒரு லவுட்ஸ்பீக்கர் சத்தத்தில் அந்த இன்சிடன்ரை சிந்தாமணி பதறிப் பதகழிக்கக் கூடிய விதத்தில் வாசித்தும் காட்டியும்விட்டு சிரிக்கக் கூடாத சிரிப்பொன்றையும் சிரித்தும் விடுகின்றாளே பார்க்கலாம்...!

"என்னடியாத்தை முத்து இதுக்கும் மனிசர் சிரிக்கலாமோ?" இந்தப் பொல்லாத ஜற்றத்திலும் நாச்சிமுத்துவின் நாய்ச் சிரிப்புக் கண்டு எல்லா இடமும் பத்திக் கொண்டு வந்துவிட்ட கணக்காய் மருமகள், மகன் மோட்டார் பைக் ரவலிங்கை நினைத்த தியக்கடியில் சிந்தாமணி வெடுக்கெனக் கேட்டும்விட்டு "உந்தச் சாமானை... என்னுமொருக்கா பிளத்துப் படிச்சுக் காட்டுபாப்பம்?" என்று மன்றாடியும் விடுகின்றாள்.

"இல்லையக்காள் சத்தியமா நான் வேணுமெண்டு சிரிக்கேலை கவலை கூடித்தான் சிரிச்சனான்" என்றெல்லாம் தன்னுடைய அழுக்குப் படிந்த உள்ளத்துக்கு கலர் பெயின்றடித்தும்விட்ட நாச்சிமுத்து கூடியவரையில் சிரிப்பு வராதபடி பார்த்துக் கொண்டு அந்த அக்சிடெண்ட் நியூசை ஒரு அழுவாரைப் போல் வாசித்தும் காட்டித் தன்னை இன்னுமாய் மேக்கப் செய்து கொண்டவளாகியும் விடுகின்றாள்.

"நேற்றுக் காலை 9 மணியளவில் ய்ாழ்ப்பாண செயலகத்தில் கடமையாற்றும் தம்பதியிருவர் மோட்டார் பைக்கில் பயணித்த வேளையாய் யாழ்.நோக்கி பின்னால் கடுகதிவேகத்தில் வந்து கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து மோட்டார் பைக்கில் மோதி மோட்டார் பைக்கில் பயணிந்த அந்தத் தம்பதியிருவரும் சில யார் தூரத்துக்குத் தூக்கிவீசப்பட்டு குளப்பிட்டிச் சந்தியில் ஸ்தலத்திலேயே பலியானார்கள்!!"

இந்த மோட்டார் பைக் விபத்து பேப்பர் நியூசை பச்சப்படியவே மனப்பாடமாக்கியும் கொண்டவளாய் சிந்தாமணி எந்த எடுத்த பேச்சல் பறைச்சலுமின்றி இடிவிழுந்தவளாய் சமையல் அவசரத்தோடு வீட்டுக்கு விசை கட்டிப் போகின்றாள் "நாளைக்கு இதே ரஜடிதான் இஞ்சையும் நடந்து முடியப் போகுது ரெண்டு பேரும் உழைக்கினம். ரெண்டு பேருக்கும் பங்கை எக்கச் சக்கமாவரும்..."

நாச்சிமுத்து தனக்குள் இப்பவே சிந்தாமணி வீட்டு இறப்புச் சடங்கை முடித்தும் கொண்டவளாய் புழுகித் தெறித்து சந்தோசம் கொண்டா பொறுத்த கண்காட்சி பார்த்திடவும் அவதிப்படுகின்றாள். அவதிப்பட்டும் தொலைக்கின்றாள்.

மன அந்தத்தில் மீன்காறனைப் பார்க்கும் பறதியோடு மீண்டும் வெளிமேலே வந்தும்விட்ட சிந்தாமணி இன்றைக்கென்ன இந்த நடந்து முடியும் ஒரு நீக்குப் போக்கில்லாத இந்த மோட்டார் பைக் விபத்துக்களையும் படுபாதாள இறப்புக்களையும் பற்றியெல்லாம் நாச்சிமுத்தைக் கண்டும் விட்ட சலிப்பில் அலட்டித் தள்ளிக் கொண்டே ஓரிடத்தில் தரித்து நின்று கதைக்கவும் முடியாத மனவலிப்பில் மீண்டும் வீட்டுக்குள் ஓடியே போயும் விடுகின்றாள்.

இதென்னக்காள் உங்கடை என்னம்பொரு கதையும் கத்திரிக்காயும்... இந்தச் சனமெல்லாம் சோடி சோடியா இந்தென்னம் பொரு பொல்லாத மோட்டுச் சைக்கிளை ஓடுதுகள்... போகுதுகள்.... வருதுகள் தானே? அதுக்காக உங்களுக்கும் அப்படி வருமெண்டு நீங்கள் சும்மா கிடக்க முடியாமைக் கவலைப்பட உந்த வீதியிலை பக்கத்திலையிருக்கிற வண்டிக் கணபதி விடுவானோ?

நாச்சிமுத்தாளுக்கு மனப்புளுகம் இன்னும் இன்னுமாய்க் கூடி ரேய்ஸ் பண்ணி சுனாமியலையாக எழும்ப சிந்தாமணியாளுக்கு கலைத்துக் கலைத்து ஆறுதல் சொல்லியும் விடும். குணச்சித்திர வில்லி நடிப்பில் தனக்குத் தானே சபாஷ்.

போட்டுக் கொடுத்தும் விடுகிறாள். "பாவம் இந்த மனிசி" என்றும் தான் அந்தத் தொந்திக் கணபதியாரின் அப்பாவான இந்தப் பூலோகத்து ஜீவன்களின் பெரியப்பாவான பரமசிவனார் இந்தப் பெரிய டிங்கிரிமெனிக்காவான நாச்சிமுத்தாளை நினைத்துவிட்ட மகாவல்லமை எவருட்சியில் சிவலோகத்திலிருந்து இந்த பூமியில் வந்து விழுந்துகிழுத்தும் போய்விடாமலுக்கு ஒரு யதார்த்தபூர்வமான சிவச்சரிப்பொன்றைச் சிரித்துத் தள்ளியும் விடுகின்றார்.

இந்த நாச்சிமுத்துவின் அட்வைசோடு மோட்டார் சைக்கிள் பயத்திலிருந்து கொஞ்ச டிக்கிரி கீழிறங்கிவிட்ட சிந்தாமணி வீட்டு வாசலில் இருக்குமந்த சிவனார் புத்திரனையும் இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டும் விட்ட கதையாக மகனையும் மருமகளையும் காத்து வைக்கும் படியாய் வேண்டுதல் அர்ச்சனையில் மூழ்கியும் விடுகின்றாளே...!

நேரமும் காலை 11மணியையும் எட்டத் தொட ஆயத்தம். சமையல் அவசரமும் ஒருபாட்டால் சிந்தாமணியைக் கொண்டெழுப்ப "இண்டைக்கின்னுமிந்த மீன்கார முருகனைக் காணேலையே... பிள்ளை சொல்லிப் போட்டுப் போன மீனைத் தான் வேண்டிக் காச்சி வைக்கவும் வேணும்" என்றெல்லாம் பரபரத்தபடியே தெருவைப் பார்வையிடுகின்றாள். பெரும் இரைச்சலோடு நான்கைந்து மோட்டார் சைக்கிள்கள் தான் அவள் பயத்தைப் பேந்தும்தான் கிளறிவிட்டுக் கூத்துப் பார்ப்பதுபோல் கண்மண்தெரியாத வேகத்தில் பறந்து கொண்டுமிருந்தன.

"அச்சம் என்பது மடமையடா...
அஞ்சாமை திராவிடர் உரிமையடா..."
"ஆறிலும் சாவு நூறிலும் சாவு"

இந்தப் பாடலின் சத்தம் கேட்டு சிந்தாமணி கடவுளைக் கண்டும்விட்டாற்போல அலமலத்து உசாரடைய ஒரு வாத்தியார் பட இரசிகனான் மீன்கார முருகன் இந்தப் பாடலோடு வந்து சிந்தாமணி மகள் வழிக்கு வழி சொல்லிவிட்டுப் போன அந்த அதன் மீனைத்தான் மளமளவென்றெடுத்து "இது பொரிக்கவும் குழம்பு வைக்கவும் சொதிக்குள்ளை போடவும் தாராளமாகக் காணும்" என்று சந்தோசத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டே அவன் சொன்ன விலைக்கே அடுத்த கதையுமில்லாமல் வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் போகவும் தொடங்கியவள் மீன் வாங்கவென்று மான் பாய்ச்சலில் ஓடி வந்த நாச்சிமுத்துவைக் கண்டதும் அப்படியே நின்றும் விடுகின்றாள்.

"என்னடாப்பா முருகன் இந்த மோட்டார்சைக்கிள் கோதாரியாலை எந்தநாளுமிந்த அருமந்த சனமெல்லாம் வீணாய்ச் செத்துலைய நாங்கள் மாத்திரம் மீன்கறியோடை உருசிலைத் திண்டு குடிச்சு சுதி பண்ணவும் வேணுமோ?"ஈபு நனைகிறதென்ற ஓநாய் அழுதது பாணியில் சிந்தாமணி வீட்டை நினைத்துக் கொண்டே பெருமூச்சு மூச்சாய் விட்டுக் காட்டிக் கொண்டே மீன்பெட்டிக்குள் கையை வைத்துக் கிளறிக் கிளறி நல்ல மீன்தெரிவில் நாச்சிமுத்து பங்சன் பண்ணிக் கொண்டிருந்த அந்த வேளையாய் சிந்தாமணியின் கைபேசியில் சடின்கோலொன்று அடித்து வாங்கியும் கொண்டே வந்தும்விடுகின்றது.

நாச்சிமுத்துவின் முகமெல்லாம் மீன் மீனாய்த் துள்ளி விளையாடுவது போலிருக்க ஒரு சடின் affect அதிர்வாக சிந்தாமணி கோலையுமெடுக்கப் பயந்துகெடிக்கலங்கி அப்படியே வாங்கிய மீனோடு பாட்டத்தில் குந்தியேவிடுகின்றாள்.

மீன் மீனாய்த் திண்டு புளுத்துக் கொட்டியே விட்டது போன்ற ஒருவித புளுகத்தெறிப்பு வெறியோடு சிந்தாமணி வீட்டு அவமிருந்தொன்றை இந்தா இப்பவே சொல்லித் தான் விடவும் ரெடி என்ற கணக்காய் நாச்சிமுத்துதான் விழுந்து கட்டி அந்தக் கோலை கொல்லென்றும் எடுத்துவிடுகின்றான். காட்சிபார்த்திடும் அவதிப்பறப்போடு...

ஒவ்வீசிலிருந்து சிந்தாமணியின் மகள் லக்ஷி தான் மறுமுனையில் கோலை எடுத்தவளாகிவிட்டதும் என்னப்பா உன்ரை மேளல்லோ கதைக்கப் போறாள்" என்று இடிவிழுந்து போனவளாய் வெந்து வெடித்தபடியே தொலைபேசியை சிந்தாமணியிடம் நீட்டிவிட்டு வீட்டுப் பக்கமாய் பறந்தடிக்க சிந்தாமணி மகளென்ற உற்சாகத்தோடு கதைக்கத் தொடங்கிவிட்டதும் நாச்சிமுத்துவின் சங்கத்தில் மனேஜராய் வேலைபார்க்கும் கணவர் இராலிங்கத்துக்கு சங்கக்கடைக்குள் வைத்து நடந்து முடித்தும்விட்ட அந்த சீரியல் வாள்வெட்டு நியூஸ் கண்காட்சியும் வந்துவிட்டது.

"அட பாவமிந்த மனிசி" என்றுதான் மீண்டுமந்தப் பரமசிவனார் சிவலோகமும் பூமியும் குலுங்கித் தள்ளிட ஒரு யதார்த்த பூர்வமான மகாவல்லமைச் சிரிப்பொன்றையும் சிந்தியேவிடுகின்றார். அதன் மீன் குழம்புக்கறியின் வாழ்வியல் வாசனை அந்த வீடு முழுவதும் பூர்பூரென்று வீசிக் கொண்டுமிருந்தது.





# காதலின் நோய்


கவிதை

வேலணையூர்தாஸ்

கண்விழித்திருத்தலும் கனவினில் மிதத்தலும்
நிலவினில் அலைதலும் நீண்ட வான் வெறித்தலும்
காற்றொடும் மரத்தொடும் கவிதையில் கதைத்தலும்
அவன் அவள் பெயரினை அடிக்கடி கிறுக்கலும்
வைபரும் வட்ஸப்பும் வாழ்க்கையென்றிருத்தலும்
இசையை ரசித்தலும் இழைத்துடல் வாடலும்
அடிக்கடி சிரித்தலும் ஆடியே களித்தலும்
காத்திருந்தேங்கலும் கண் சிவந்திருத்தலும்
கனவில் கண்டுருகலும் கைவளை நெகிழ்தலும்
மறைவினில் அழுவதும்
மற்றவர் காண்பரேல் மறைத்திடச் சிரிப்பதும்
பசி மறந்திருத்தலும் பார்த்திடா நாள்களால் பயனிலை என்பதும்
அவன் அவள் இல்லையேல் வாழ்விலை என்பதும்
உறுதியாய் நிற்றலும் உயிர் விடத் துணிதலும்
காதலின் நோயெனக் கண்டனர் புலவோர்.



# சிறைக்கதவில் சித்தனை கம்பிகள்



40

தொடர்

தாஸ் மாஸ்ரர்

மாலை 5.30 மணிக்கு அனைவரும் சிறைக்குள் பூட்டப்பட்டபின் சிறைகளுக்குள் இருப்போர் மாறி மாறித் த்கர வாளிகளில் சிறுநீர் கழிப்பது இயல்பு. அந்தச் சிறுநீரின் வெட்கையும், மோசமான மணமும் இரவு முழுதும் சிறைக்குள் பரவியிருக்கும். அறையின் ஒரு மூலை எப்போதும் நாற்றமாக இருக்கும். குந்தியிருந்து கொண்டு தகர வாளியில் சிறுநீர் கழிப்பதால் சிறுநீரால் கடி மற்றும் தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

எமது அறையில் நான்கு பேர் இருந்தோம். நான்கு பேரும் ஒவ்வொரு வேலையைப் பொறுப்பெடுத்திருந்தோம். எனது வேலை காலையில் எழுந்தவுடன் அந்தச் சிறுநீர் வாளியையும், தகர வாளியையும் சவர்க்காரம் போட்டு ஈர்க்குமாறால் கழுவுவது. அந்த ஈர்க்குமாறு ஒவ்வொரு நாளும் காலையில் எல்லோருக்கும் தேவைப்படும் பொருள் என்பதால் அது களவுபோகும் வாய்ப்புக்கள் அதிகம் இருந்தது. தொலைத்தவர், மறுநாள் வரிசையாக நின்று கழுவுபவர்களைப் பார்த்துத் தனது ஈர்க்குமாறைக் கண்டு பிடித்துவிடுவார்கள். இதனால், விடியற்காலையில் ஈர்க்குமாறில் ஆரம்பித்த சண்டைகளும் உண்டு. சிறைக்குள் எல்லோரும் மனதளவில் நொந்துபோய் இருப்பதால் சிறிய விடயங்கள் கூட எரிச்சலை ஏற்படுத்தி விடுகிறது.

★★★★

சிறுநீர் வாளிகளைக் கழுவிச் சுத்தப்படுத்தவிட்டால் அன்றைய நாளில் என்றுடைய 50 வீதமான வேலை முடிந்துவிடும். பகல் பொழுதில் அதைக் கவிழ்த்துக் காய வைத்த பின்பு எடுத்து அறைக்குள் வைத்தவுடன் எனது முழுநாள் வேலையும் முடிந்துவிடும். ஒருவர் சிறை அறையைக் கூட்டிச் சுத்தப்படுத்துவார். மற்றொருவர் பாத்திரங்களைக் கழுவுவார். இன்னொருவர் குடிதண்ணீர் எடுப்பதற்காக வாளியைக் கொண்டுபோய் வரிசையில் வைப்பார். பாட்டிக்காரன் பெரிய தகர பரல்களிலும், வாளிகளிலும் குடிதண்ணீரைக் கொண்டு வந்து வைப்பார். வரிசையில் வாளிகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் வைத்த ஒழுங்கில் தண்ணீர் எடுக்க வேண்டும். சிறைச்சாலையில் எல்லா நாள்களும் ஒரே மாதிரியானவை. முற்றமில்லா நாள்கள். வெளியே இருப்பவர்களுக்கு இருப்பதுபோன்ற லீவு நாள், வேலை நாள் வேறுபாடு எமக்கில்லை. உண்மையில் நாம் ஒரு தனித்துவிட்ட சமூகம். கைதிகளும், சிறைச்சாலை ஊழியர்களும் மட்டும் பழகுகின்ற இடம் அது. அதுவும் ஆண்கள் மாத்திரமுடைய இடம். பூஸா சிறையில் பெண்கள் இல்லை. பூஸாவில் ஒரு பெண்ணைக் காண்பதாக இருந்தால் அது எப்போதாவது எம்மைப் பார்க்க வருகின்ற ஐ.சி. ஆர்.சி. பெண்ணாக மாத்திரம்தான் இருக்க முடியும்.

★★★★

சிறைக்குள் ஒரு நாளைக் கழிப்பது என்பது பெரும் துன்பமான விடயம். கழிப்பறையில் அரை மணி நேரம் வரையில் காவல் நிற்கவேண்டும், நீண்டநேரம் எடுத்து உடுப்பு தோய்ப்பது, குளிப்பது, இவற்றில் பல மணித்தியாலயங்களைக் கழிக்க வேண்டியிருக்கும். இது ஒரு கட்டாயப்படுத்தப்பட்ட வாழ்க்கை.

சிலருக்குச் சிறையே வாழ்க்கையாகிப் போய் நிர்வாகம் நடத்தப் பழகிவிடுவர். தான் விடுதலையான பின் இந்தச் சிறைச்சாலை என்னவாகுமோ? என அவர்கள் சிந்தித்தும் கொண்டிருப்பார்.

பூஸாவில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று சுவரில் பதிக்கப்பட்டிருந்தது. இங்குள்ள அனைவருக்கும் அது ஒன்றுதான். அதன் அளவு ஓர் அடி அகலமும் 2 அடி நீளமும் இருக்கும்.

ஓரங்களில் ரசம் கொட்டிப்போய்ப் புள்ளி விழுந்திருக்கும். தலையிழுப்பது, சவரம் செய்வது எல்லாம் அதில் தான். எல்லாவற்றையும் விட எங்கள் கோலங்கள் நாளுக்கு நாள் குறைந்து போவதை உறுதிப்படுத்துவது அது ஒன்று தான்.

சில இளம் கைதிகள் கண்ணாடிக்கு முன்னால் நின்று தமது உடலை அடிக்கடி பார்த்து ஏங்குவதைக் காண முடியும். சிலர் உடற்பயிற்சி செய்து விட்டு அதன் முன் நின்று பல தடவைகள் தம்மை இரசித்துப் பார்ப்பதுண்டு.

சில கைதிகள் எதிலும் பிடிப்பற்றிருப்பர். படிப்பதுமில்லை. விளையாட்டுக்களிலோ மற்றவர்களுடன் கலந்து பழகுவதே இல்லை. தம்மையும் தமது குடும்பச் சூழலையும் நினைத்து தமக்குள் வேதனைப்படுவார்கள். இதனால் மற்றவர்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போவர். மனநிலை பாதிப்புக்குள்ளாகி உயிர் மாய்க்கவும் முயற்சிப்பார். அல்லது மனநோயாளியாக மாறிவிடுவர்.

பொதுவாகச் சிறை அதிகாரிகள் தமிழ்க் கைதிகளுடன் உறவைப் பேணுவது என்பதைவிட முரண்பாடாமல் இருந்து கொள்வது என்பதிலேயே அதிகம் அக்கறையாக இருப்பர்.

(தொடரும்)

சிறைக்குள் ஒரு நாளைக் கழிப்பது என்பது பெரும் துன்பமான விடயம். கழிப்பறையில் அரை மணி நேரம் வரையில் காவல் நிற்கவேண்டும், நீண்டநேரம் எடுத்து உடுப்பு தோய்ப்பது, குளிப்பது, இவற்றில் பல மணித்தியாலயங்களைக் கழிக்க வேண்டியிருக்கும். இது ஒரு கட்டாயப்படுத்தப்பட்ட வாழ்க்கை.

கவிதை

பா.கனகேஸ்வரி

# உணர்வுகள்...!



அறமான அரசியல் இது எனக் கூறும்
தலைவர்களே....
அடிப்படை வசதிகள் இன்றி - எம் வாழ்க்கை
நகர்கின்றது என அறிந்தும்...
ஐ.நா. வரை சென்று அமைதியாகவே
வருகிறீர்கள்

இழந்தவை எம் செல்வங்களாய்...
பொருள்களாய்... ஆவணங்களாய்...
போனவை போகட்டும்
அவை உயிரற்றவை..

ஆனால் பெற்றெடுத்த தாயின் உணர்வுகள்
தேடுகின்றன... பிள்ளைகளின் முகங்களை
உடன்பிறந்த உறவுகளை
உடன் பிறப்புக்கள் தேடுகின்றன

கூடித்திரிந்த நட்புக்கூட்டம் தேடுகிறது
நண்பர்களோடு கழித்த தருணங்களை
உளமாற நேசித்த காதலி தேடுகிறாள்
காதலன் வடிவில் தன் காதலை
கைபிடித்த மனைவி தேடுகிறாள்
கட்டியணைத்த தன் தலைவனை

இவையெல்லாம் போகட்டும் - இன்று
வளர்ந்து வரும் மகள்களும் மகன்களும்
விழி வழியே கண்ணீரோடு தேடுகிறார்கள்
சுயநலவாதிகள் நிறைந்த இவ்வுலகில்
தம் பாதுகாப்புக்காய் கதாநாயகர்களான
தத்தம் தந்தைகளை

அறம் இருக்கின்றன என கூறும்
அரசியல்வாதிகளே
உங்களுக்கு எங்கள் வேதனை
புரிவது எப்போது?


தேடித் தேடித் தொடர்ந்து
ஏமாந்திருப்பவர்கள் பட்டியலிலுள்ள
இந்தக் குரலாவது உங்கள்
செவி சேருமா?

பயணக் கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

9

# சுவிஸ் எனும் அழகிய நாடு!




சுவிஸ் நாட்டின் முதன்மை ஏற்றுமதிகளில் ஒன்றாக இருக்கும் சொக்லெட்டை வருடத்தில் 11 கிலோவரையில்சுவிஸ்மக்கள்உண்கிறார்கள். 2015ஆம்ஆண்டில்எடுத்தஒருகணிப்பின்படி,1இலட்சத்து 15ஆயிரம்தொன் சொக்லெட் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் கிடைத்த புள்ளி விவரத்தின்படி, சொக்லெட் ஏற்றுமதியில் சுவிட்சர்லாந்துக்குப் பத்தாவது இடமே கிடைத்துள்ளது. முதலிடத்தில் நின்றது ஜேர்மனி. அது 4.8 பில்லியன்டொலர்பெறுமதியானசொக்லெட்டை2017ஆம் ஆண்டில்ஏற்றுமதிசெய்துள்ளது.இரண்டாவதுஇடத்தைப் பெல்ஜியமும், மூன்றாவது இடத்தை இத்தாலியும்பிடித்தன. சுவிஸில்தங்கியகாலத்தில்நானும் ஏராளமாகச் சொக்லெட்களைச் சுவைத்தி ருக்கிறேன். அவற்றின்சுவையேதனிச்சுவை. அதைச் சொல்லித் தெரியப்படுத்த வார்த்தைகளில்லை.

**வியப்பூட்டும் பொலிஸ் சேவை**

ஒருநாடுஎந்த அளவுக்குப்பாதுகாப்பானது என்று எப்பொழுதுஒருகுடிமகனால்உணரப்படுகிறதோ, அந்தக் கணமே அந்த நாட்டு வாழ்க்கை மனதுக்குப் பிடித்தும் விடுகின்றது. இங்கே நான் பாதுகாப்பாக வாழலாம் என்ற நம்பிக்கை தலைதூக்குகின்றது. சுவிஸ் நாட்டைச் சீராக வைத்திருக்கும் பொலிஸாரின் அற்புதச் சேவையைக் கண்டு எப்பொழுதுமே நான் வியப்பதுண்டு. இன்றும் வியந்து கொண்டேயிருக்கிறேன். எல்லைக் காவல்களாகஇருக்கட்டும்,அல்லதுவீதிவிபத்தாக இருக்கட்டும், அகதிகள் விடயங்களைக் கவனிப்பவர்களாக இருக்கட்டும் அல்லது கடவுச் சீட்டு விநியோகமாக இருக்கட்டும் சுவிஸ் பொலிஸாரின் சிறப்பான நிர்வாகம் நம்மை ஆச்சரியப்படுத்தும்.

நீதி விவகாரம், பொலிஸ் படைக்கென ஒரு கூட்டமைப்புத் திணைக்களம்சுவிஸில் இயங்குகின்றது. இந்தத்திணைக்களத்தின் கீழ்க் கூட்டமைப்புப் பொலிஸ் அலுவலகமொன்று செயற்படுகின்றது. பன்னாட்டுக் குற்றங்கள் சம்பந்தமான விடயங்களை இந்த அலுவலகமே கவனிக்கின்றது. இந்த அலுவலகத்தின் ஒருபிரிவுதான் கூட்டமைப்புக் குற்றவியல் பொலிஸ் பிரிவு. இந்த அலுவலகத்திலுள்ள கூட்டமைப்பு நீதித்திணைக்களம்சுவிஸ்எல்லைக்காவலுக்குப்பொறுப்பாக இருக்கின்றது.



கூட்டமைப்பு பாதுகாப்புத் திணக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ்இராணுவம்,பொதுப்பாதுகாப்பு,விளையாட்டுத்துறை, இராணுவப் பொலிஸ் என்பவற்றின் நிர்வா கங்கள் இருக்கின்றன. அவசியம் ஏற்படும்போது மாத்திரம் இராணுவச் சேவை'கன்டோன்'பொலிஸாருக்குவழங்கப்படுகின்றது. 'கன்டோன்' பொலிஸ் முகவர்கள்களும், பல நகரசபை பொலிஸ் முகவர்களும் இணைந்தே, நாட்டின் சட்டம்; ஒழுங்குக்கு முதுகெலும்பாக இயங்குகின்றன. இந்த கன்டோன் பொலிஸ் முகவர்களும் நகரசபை பொலிஸ் முகவர்களும் கூட்டமைப்பு அதிகாரிகளுக்குப் பதிலளிக்க வேண்டும்என்பதில்லை. அவரவர் உயர் அதிகாரியே இவர்களை இயக்குபவராக இருக்கிறார். இந்த நகரசபைப் பொலிஸார் பொதுவாக தமது கன்டோன்களில் சட்டம் ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டும்பணிகளோடு, வாகனங்கள்தரிப்பிடஒழுங்குகளையும்கவனிக்கிறார்கள். பெரிய நகரங்களில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும் மேற்கொள்கிறார்கள். சூரிச், வின்டர்தூர், லவுசான் ஆகிய நகரங்களில் கடமையாற்றும் பொலிஸாருக்கு முழுமையான பொலிஸ் பணி கொடுக்கப்படுகின்றது.

**கட்டுப்பாட்டில் இருக்கும் சீரான வீதிகள்**

சுவிஸ் வீதிகள் மிக அழகானவை என்பது மட்டுமல்ல, இந்தப் போக்குவரத்து வலை அமைப்பு சீராகப் பேணப்பட்டு வருகின்றது. இங்கேயும் போக்குவரத்துப் பொலிஸாரின் அற்புதமான சேவை வெளிப்படுகின்றது.

நாடுமுழுவதிலும்பயணிப்பவர்கள், வீதி அறிவிப்புகளின் மொழிகள் மாறுவதை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். உதாரணத்துக்குநீங்கள்ஜெனிவா கன்டோனுக்குள், சென்றுவிட்டால், நீங்கள் நன்கறிந்த ஜேர்மன் மொழி உங்களுக்குக் கைகொடுக்கப் போவதில்லை. அங்கு எல்லாமே பிரெஞ் மொழியில் தான் எழுதப்பட்டிருக்கும். லுகானா வுக்குச் சென்றால் பிரெஞ் அறிவு உதவப் போவதில்லை. அங்கே வீதிகளில் எல்லோமே இத்தாலி மொழி மயம்.

**மகிழுந்து வைத்திருந்தால்...**

சுவிஸில் மகிழுந்து வைத்திருப்பவர்கள் வருடா வருடம் 40சுவிஸ்பிராங்(சுமாராக6500ரூபா)செலுத்தி'வின்யற்' என்று அழைக்கப்படும் ஸ்டிக்கரை மகிழுந்து முன் கண்ணாடியில் ஒட்டி வைத்திருக்க வேண்டும். இதைத் தபால் கந்தோரிலோ, எரிபொருள் நிரப்பு நிலையங்களிலோ வாங்க முடியும்.

18 வயது வரும்வரை சுவிஸில் மகிழுந்து ஒட்டுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை. வீதி விதிகளின் கெடுபிடிகள் சுவிஸில் அதிகம். குற்றம் இழைத்த இடத்திலேயெ பொலிஸார் தண்டமிட்டுவிடுவார்கள். மகிழுந்தை ஒட்டும் போது, கூட இருந்து பயணிப்பவர்களும் இடுப்புப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

மதுபோதையில் மகிழுந்து ஓட்டுகிறார்களா என்பதை அறிவதற்காக மகிழுந்தை நிறுத்தி, அந்த இடததிலேயே பொலிஸார்சாரதியைப்பரிசோதனைக்குஉட்படுத்துவர். மாட்டிக் கொண்டால் உடனடியாகச் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பொலிஸார் பறித்து விடுவர். ஆகக் குறைந்தது அடுத்த 3 மாதகாலங்களுக்குச்சாரதிஅனுமதிப்பத்திரம்கிடைக்காத நிலை ஏற்படலாம்..

(தொடரும்)

# கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

தொகுப்பு


ந.சிதம்பரதாசன்

கலை இலக்கியப் படைப்பாளிகளின் எழுத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிப்பது இந்தப் பகுதி. அந்த வகையில் இது 'திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்' எனும் தலைப்பில் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை 47 1976ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில் இருந்து சில பகுதிகள்.



## திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை


திருக்கேதீச்சரம்
திருக்குடத்திருமஞ்சன மலர்

*

நள ஆண்டு ஆனி உக
(4.7.1976)

*

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை வெளியீடு

திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழமை சரித்திரத்துக்கோ, அகழ்வராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராண, இதிகாசங்களால் ஓரளவு ஊகிக்கற்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம், இந்திரனின் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது. மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அந்தச் சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ்செய்து, அதன் மத்தியில் ஒரு சிவத்தலத்தையும் அமைத்தான். நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைத்த சிவத்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் வேறு, இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உருவானவை. மூன்றாஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டியபோது நிலப்பரப்பாக அமைக்கப்பட்டது. கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும், மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்து விட்டன. மற்றொரு கற்பத்தில் இமாசால கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தக்ஷிணபூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருகோணமலை அது இலங்கையில்ல வீழ்ந்தது.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் எனும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. 'யாழ்ப்பாண சமய நிலை' என்ற துண்டுப் புத்தகத்தின் இறுதிப் பந்தி.

...சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவத்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோண மலைக்குச் சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கிறது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ், சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது.

திருக்கேதீச்சர நிலம் அரச சொத்தாய் வடக்கு மாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக்காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'றசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள்... றசலுக்குப் பின் வந்தவர் துவைனம். திருக்கேதீச்சர நிலத்தைத் துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடைமுறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாகியிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். பெரியோர்கள் நீதிக்குப் புறம்பானவர்களிடத்தே எதையும்பெற விரும்புவதில்லை.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி

க.அருமைநாயகம்

தமிழரசர் ஆட்சி மறைவுற்று அந்நியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சி நிலவிய காலத்தில் சைவ சமயம் அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கேயர் தமது ஆதிபத்தியத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில் ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் இருந்த சைவக் கோவில்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினர். இதனாலும் ஒல்லாந்தர் காலத்தில் விதிக்கப்பட்ட சட்டங்களின் கட்டுப்பாடுகளினாலும் பொது வழிபாடுகள் நடைபெறாதொழிந்தன. எனினும் ஒல்லாந்தர் தமது ஆட்சியின் கடைக்கூறாகிய பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமயச் சட்டங்களைக் கண்டிப்பான முறையில் செயற்படுத்தாது நெகிழ விட்டனர். இதை வாய்ப்பாகக் கொண்டு மீண்டும் சைவக் கோவில்கள் பல கட்டப்பட்டன. கோவில்களையும், பொதுவழிபாடுகளையும் அழித்துவிட்டால் சமயம் அழிந்துவிடும் என்ற கிறிஸ்தவ அரசுகளின் நம்பிக்கை வீண்போயிற்று...

...கீழைத்தேசங்களில் குறிப்பாக ஆங்கில அரசின் ஆதிபத்தியத்தின் கீழிருந்த நாடுகளில் தேசிய உணர்ச்சி முதலில் கலாசாரத் துறையிலேயே தோன்றியது. ஆங்கிலக் கல்வியும் தாரண்மைவாதமும் கீழைத்தேசத்தவர்கள் தம்மைத்தாம் அறிந்துகொள்ளத்தக்க தம் பழைய கலாசாரங்களின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய எதிர்மறை விளைவை ஏற்படுத்தின. அதன் விளைவாகத் தோன்றிய கல்வியக்கங்கள் பிற்காலத் தேசியக் கிளர்ச்சிகளுக்கு உறுதுணையாக அமைந்தன. ...கிறிஸ்தவ சமயத்தினர் மும்மூர்த்தி லட்சணம், குருட்டு வழிபோன்ற துண்டுப் பிரசுரங்கள் மூலம் அருவருப்பான மொழியில் சைவ சமயத்தைத் தாக்கினர். இவைகளுக்கு மறுப்பாக ஆறுமுக நாவலர் சைவ தூஷண பரிகாரம், சுப்பிரபேதம் போன்ற மறுப்புரைகளை வெளியிட்டார். 1854ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சைவ தூஷண பரிகாரம் கிறிஸ்தவ மத எதிர்ப்பியக்க முதற்கட்டத்தின் உச்ச நிலை எனலாம். சைவதூஷண பரிகாரத்தின் மூலம் இரு சமயங்களையும் ஒப்பிட்டாராய்ந்து சைவ சமயத்தில் பொதிந்துள்ள தெய்வாம்சம் கிறிஸ்தவ சமயத்திலும் பார்க்கக் குறைந்ததல்ல என்பதை நிலைநாட்ட முற்பட்டார். கிறிஸ்தவ சமயம் பற்றி நாவலருக்கிருந்த அறிவு பற்றிக் கிறிஸ்தவர்களே வியந்தனர். இந்த நடவடிக்கைகள் சைவ சமயத்துக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கிறிஸ்தவ சமயத்தைப் பாதித்தது என்பதை கிறிஸ்தவர்களது அறிக்கைகளே ஒப்புக் கொண்டுள்ளன...

ஆறுமுகநாவலர் காலத்திலே திருக்கேதீச்சரத்தைச் சைவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. சுபதார் வைத்திலிங்கம், கொழும்பு தம்பையா, கடித வண்டி ஆசைப்பிள்ளை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முகாமையாளர் ஆகியோர் கோவில் இருந்த பகுதிகளை வாங்குவதற்குச் செய்த மனுக்களை வடக்கு மாகாண மாவட்டச் செயலராக இருந்த துவைனம் நிராகரித்தார். அத்துடன் மன்னார் கத்தோலிக்கரும் அந்தப் பிரதேசத்தைக் கோரினர். இந்தக் காரணத்தாலும் ஏல விலை அதிகமாக இருந்ததினாலும் 1893ஆம் ஆண்டுவரை அவ்விடத்தைச் சைவர்களால் வாங்க முடியவில்லை.

ஈற்றில் 13.12.1893ஆம் ஆண்டில் திரு.ஆர்.ஏ.ஏ. பழனியப்ப செட்டியாரால் இவ்விடம் வாங்கப்பட்டது. அன்று தொடக்கம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரது வேண்டுகோளின்படி சி.த.மு. பசுபதிச் செட்டியாரவர்கள் அந்தப் பிரதேசத்தைச் சுத்தமாக்கிப் பழைய கோவிலையும் அதற்குரிய சின்னங்களையும் கண்டுபிடித்தார். 1903ஆம் ஆண்டு சிறிய கோவில் கட்டப்பட்டு மாதோட்ட நகரத்தாராலும், பின்னர் யாழ்ப்பாண நகரத்தாராலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

## திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்

சேர்.கந்தையா வைத்தியநாதன்




போர்த்துக்கேயர் இலங்கையின் வட கரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம். 'எமேர்சன் ரெனந்து' கூறுவதை இங்கு நோக்கலாம்,


"யாழ்ப்பாணத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரச பரம்பரை அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை 1617வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வாணிகப் பெருக்கத்துக்குத் துணை புரிந்த வளம் மிக்க தென் மாகாணங்களிலும் பார்க்க தமது குடியேற்றத்துக்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்ட காலமாக விரும்பி வந்தனர். ஆட்சிக்குப் பணியாத அந்தப் பகுதியில் தமது மதத்தையும் பரப்பப் பாடுபட்டனர். இந்தப் பகுதியைக் கைப்பற்ற 1544ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். போர்த்துக்கேயர் டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையடிக்கச் சென்றபோது இவ்வாறு முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனைக் கண்டு தமக்குக் கீழ் சிற்றரசனாகவிருந்து கப்பம் கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாதவிடத்து அவன் தம்மோடு போரிட வேண்டும் எனக் கூறினர். அந்தத் தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு 4ஆயிரம் டுக்கட்ஸ்க் கப்பம் கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப் பகுதி மக்கள் பலர் வண. பிரான்சிஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் மதமாற்றத்தை வேரறுக்க, மதம் மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன்? மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்துவிட்டான்!"

மன்னார்த்தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. அந்த ஆலயத்தை இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசன் சினங்கொண்டான். பழிக்குப் பழி வாங்க எண்ணினான்.

ஆனால், அவன் முயற்சி அடக்கியொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தன.

அதைத் தொடர்ந்து மேலும் நடந்த செயல்கள் அன்றைய சமய நிலையின் சீரழிவையும், ஒழுக்கத்தின் இழிவையும் காட்டுவன என்றே கூறலாம். ஆனால், இந்த நிலையில் நாம் ஒன்றைத் திடமாகக் குறிப்பிடலாம். திருக்கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத்தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாகினர்.

# அதியுயர் காண்டத்து மேடைகள்



மேடை - 22

தையிட்டி அ.இராசதுரை

மாதவியின் ஆமி பாக்கும் முட்டி வழிகின்றது... ஆமி பாக் முட்டி வழிந்தாலும், மாதவியின் மன பாக் ஆனது முட்டி வழியவில்லை... காணாது... காணாது... என்றும் கொண்டு வா... கொண்டு வாவென்ற... ஆலையாடிக் கொண்டுமிருந்தது...! அங்கலாய்த்துக் கொண்டுமிருந்தது!

"இந்தக் கிராமத்துப் பெண்டுகளுக்கு எந்தளவு அண்டந்தான் வந்து கொட்டுண்டாலும், ஆசையெண்ட சாமான் ஒருக்காலும் அடங்காதப்பா'' தன்னுடைய மனையாளின் நேச்சரைப் புரிந்து கொண்ட அர்ச்சுணா, வெளி வெளியாய் இப்படிச் சொல்லிக் காட்டினால், அவளுக்குச் சுறு சுறென்று ஏறிவிடுமென்று தனக்கள் இப்படிக் கறுவிக் கொண்டே... அந்த ஆமி பாக்கோடு அவளால், சுமக்க முடியாத அந்தளவு மாங்காய்களையும் புத்தியாக வீட்டுக்குள் காவிக் கொண்டு போய்விடுகிறான். எனியிந்த மாங்காய்களையும், புத்தியாக வீட்டுக்குள் காவிக்கொண்டு போய் விடுகின்றான். எனியிந்த மாங்காய் பொறுக்கலும் ஒரே சறுக்கல் தானென்ற ஓர் அங்கலாய்த்த மாங்காய்ப் பூதமாய்... மதாவியும் மனைக்குள் போய் விடு கின்றாள்...!

✪✪✪✪

மாங்காய் மரத்தடியில் மாங்காய்ச் சபை நடத்திக் கொண்டிருந்த அத்தனை மாடுகளும் திடீரட்டியனவாய், ஏதோ வெளிக் காணிகளில் கேட்கத் தொடங்கிய பத்தைகள், பறுகுகள், தடி தண்டுகள் முறியிற தறியிற சத்தங்களுக்கு எடுத்துப் பயந்தோடத் தொடங்கியும் விடுகின்றன. என்ன ஏதென்று இதோ... அதோ சிந்தனையில் அர்ச்சுணா ஒன்றுமே பிடிபடாமல் தன்னம்பாறிக் கொண்டு நின்றவேளை, ஒரு பசு மாட்டைப் பத்துப் பதினைந்து விடலை நாம்பன்கள் விட்டுத் துரத்திக் கொண்டோடும் மிருகவியல் 'செக்ஸ்' ஊர்வலக் காட்சி...!

இந்தக் கோமாதாக்களின் அதியுயர் காண்டத்து மேடையேறிய த்திறில்லான மனதையுருக்கும் சோகங்களைக் கண்டு கதறிய அர்ச்சுணா, இப்போது இந்த நேரம் அதே மேடையேறும் இந்தச் சிரிப்பியல் காட்சியையும் கண்டு பழகி விட்டவ னாய்... சிரித்துக் கொண்டே அழுகின்றான். அழுதும் கொண்டே சிரிக்கின்றான்.

90ஆம் ஆண்டுக்குப் பின்னான இடையிட்டும் வந்து முடிந்துவிட்ட இந்த இப்படியான யதார்த்தங்களைப் பழகியும் கொண்டு விட்ட, இந்த மாடுகள் ஓடிப்போன தங்கள் நிலைமையைச் சரிசெய்து கொண்டு, மீண்டும் மாமரத்தடிக்குப் பர பரவென்று வந்தும் விடுகின்றன.

காலதேவன் கடிகாரத்தின் ஓட்டத்தில் நேரமும் பின்னேரப் பொழுதை எட்டி விடுகிறது. அர்ச்சுணா கோகுலத்துக்குக் கோல் எடுக்க அவதிப்பட்டுச் செல்போனை எடுக்க அந்த நேரம் பார்த்து கோலொன்று பறந்து கட்டி வந்தும் விடுகிறது.

"நான் குருக்களம்மா பேசுறன் எங்கடை பிள்ளை பிரணவி... அடுத்த மாசம் இங்கிலீசுக்கு முதலாம் திகதி கோலாலம்பூரிலையிருந்து குடும்பத்தோடை பிளையிற்றெடுத்து யாழ்ப்பாணம் வாறாவாம்! கையோடை மலேசியா கூட்டிப்போற துக்கு... எங்களுக்கு ரிக்கெற் எல்லாம் றெடியாம்! இந்தத் தடவை வலும் ஸ்ரிக்காய்த்தான் நிக்கினம். ஐயாவும் என்னைக் கொல்லன் கழுத்தை முறியனெண்டு ஸ்ரிக்காய்த்தான் நிக்கிறார்... மோளோடையும் மருமகனோடையும்தான் கதைக்க மறுத்திட்டார். இந்தப் பிள்ளையாற்ற பக்தியிலை, இந்தத் தையிட்டி மண்ணின்ர பிடிப்பிலை... இந்த ஆக்களில்லாத டிபன்சிலையிருந்து நீங்களென்ன செய்யப்போறீங்கள்...?"

(தொடரும்)





# தேவதைகள்...!

தெரியாமல் செய்த தவறுக்கு
ஒவ்வொரு முறையும்
மன்னிப்புக்கோரும் குழந்தைகளின் முன்
கடவுளாய்
நாமும் சாத்தான்களாக அவர்களும்

குழந்தைகளுக்கு
அம்மாக்களை விட
பொம்மைகளையே பிடிக்கிறது
அம்மாக்கள் கொஞ்சினாலும்
கோபத்தில் அம்மாக்கள் அடிக்கும்போது
பொம்மைகளிடமே
தஞ்சமடைகின்றன......

அழுதால் கோபிக்கவும்...
மகிழ்ந்தால் முத்தமிடவும்....
பழக்கப்பட்ட குழந்தைகள்
பொம்மைகளிடம்
எப்போதுமே கோபிப்பதில்லை.....

காதலியிடம்
பெறுவதை விட
குழந்தையிடம்
முத்தம் பெறுவது கடினமாயிருக்கிறது.....
ஏனெனில்
பொய்களை
மிகச் சுலபமாக
கண்டுபிடித்து விடுகின்றன குழந்தைகள்.....

கேட்காமல் முத்தமிடும்
குழந்தைகளின் எச்சில்களில்
வழிந்தோடுகிறது பேரன்பு....

கவிதை

எஸ்.தர்சி

மழை வரும் நேரத்தில்
நனையும் குருவிகளுக்கு
காய்ச்சல் வராதா
எனக்கேட்கும் மகளுக்கு
எந்த வார்த்தையைச் சொல்லி
ஆறுதலடையச் செய்ய முடியும்?

அடம்பிடித்து அழும் குழந்தையை ஏமாற்ற
அத்தனை பொய்களை
உதிர்த்து விட்டு
பொய்யே பேசக்கூடாதென
போதிக்கும்
சராசரி தகப்பன்களில் நானும் ஒருவன்.....!


மழை வரும் தருணம் தவளைகள்
குரலிடுகின்றன
மழை வராத நாள்களில்
தவளைகளுக்குப் பேச்சு வராதா
எனக்கேட்கும் குழந்தையிடம்
பதில் தெரியாத குழந்தையாகிறேன்...

குழந்தைகளிடம் கற்றுக்கொள்ள
அன்றாடம்
ஆயிரம் விடயங்கள் இருக்கின்றன......
கற்க மறுக்கும்
நமது பாவனைகளைக்
கேலி செய்தவாறு
உறங்குகின்றன குழந்தைகள்....

# கல்வியெனும் பேரேடு!

கருத்து

செ.மகேஷ்




சிவபாதத்தார் எதை, எவ்வாறு, எங்கிருந்து சிந்தித்தாரோ தெரியவில்லை "கல்வி என்றால் என்ன?" என்றதொரு கேள்வியைச் செல்லத் தம்பியரின் முகத்தைப் பார்த்தே கேட்டார். 'கல்வி என்றால் என்ன?' என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே கல்வி சார்ந்த பல்வகைச் செயற்பாடுகளும் இங்கே நடைபெறுவதாக எண்ணியதாலேயே சிவபாதத்தாருக்குள் பிறந்த கேள்வி செல்லத்தம்பியரைச் சில பொழுது திக்குமுக்காடச் செய்தது.

செல்லத்தம்பியரைப் பார்த்து அன்றொருநாள்; "உங்களைப் பார்க்கப் படித்தவர் போலத் தெரிகிறது!" என்று சொன்ன அருணகிரியின் பார்வை அவரின் நினைவுக்கு வந்தது. படித்தவர்கள் என்றால் கல்வி கற்றவர்கள் என்பதே அர்த்தம் என்பதாக எண்ணியிருந்த செல்லத்தம்பியர் மகிழ்ந்து போனார். ஆனால் 'கல்வி என்றால் என்ன?' என்ற கேள்விக்கு விடை அதிலே இருப்பதாகச் செல்லத்தம்பியரால் பிரித்து அறிய முடியவில்லை.

கண்களை மூடிச் சற்றே சிந்தித்தார்.

+++

கல்வியைப் பலரும் கற்றுக் கொள்வதற்காகவே பாடசாலைகள் தோன்றி இருக்கின்றன. பலருக்கும் கல்வியைக் கற்பிப்பதற்காகவே கல்வியியலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் எண்ணினார். இருப்பினும் கல்வி என்றால் என்ன? என்ற கேள்வியோ, இன்னமும் அதற்கான விடையைக் காண்பதற்காகத் தத்தளிப்பதாகவே தெரிந்தது.

ஒருவன் கருவில் இருந்து கல்லறை வரைக்கும் கற்கிறான் என்று சொல்லப்படுவதில் கல்வி தோன்றா எழுவாயாகத் தோன்றி நிற்பது தெரிகிறது. எனினும் கல்வி என்பது யாது? என்ற கேள்விக்கான பதிலைக் கண்டறிதல் மிகவும் கடினமானதாகவே தெரிந்தது. கல்வியைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இனங்காட்டும் இடங்களிலெல்லாம் செல்லத்தம்பியர் உள்ளே நுழைந்து வெளியே வந்தார்.

அங்கெல்லாம் பாடங்களாகப் புகட்டப்படும் ஒவ்வொன்றையுமே பலரும் கல்வி என்று சுட்டி நின்றனர். வாழ்க்கைக்கு வழிகாட்டும் பலவிடயங்கள் கல்வி என்ற பெயரில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை உணர முடிகிறது. அவற்றை அறிந்து, நல்லவற்றைத் தேர்ந்து, அவற்றின்படி உயர்வாக ஒழுகுதலே கல்வி என்பதாய் விளங்கிக் கொண்டபோது ஒருவனின் நல்ல வாழ்வின் தோற்றமே கல்வி என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் அவர் பேசவில்லை.

+++

கல்வியைப் புகட்டும் பாடசாலைகள் கற்பவனிடத்தில் அத்தகைய கல்வித் தோற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் கற்பித்தலை மேற்கொள்கின்றனவா? அங்கே பெற்ற உயர்வான வாழ்க்கைப் பாடத்தைக் கற்றதன்படி ஒழுகும் வாய்ப்பை இந்தச் சமூகம் ஒருவனுக்கு வழங்குகிறதா? என்றெல்லாம் பல கேள்விகளை எழுப்பிச் சிந்தித்தவருக்கு ஏமாற்றமே விடையாகக் கிடைத்தது. 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்பார்கள். கல்வியை வழங்கும் ஓர் உயர்ந்த நிறுவனமாகப் பாடசாலைகளே முன்னிற்கின்றன. இவை தவிர ஒருவனைப் பெற்று வளர்க்கும் பெற்றோர், அவன் சார்ந்து வாழும் சமூகம் என்பவையும் ஒருவனுக்குக் கல்வி புகட்டும் மூலங்களாகவே இயங்குகின்றன. அவர்கள் தமது வாழ்க்கையின் மூலம் ஒவ்வொருவரிடத்திலும் நல்ல கல்வியைப் பெறும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றனரா?

கல்வியின் பரம்பல் செல்லத்தம்பியரைப் பல திசைகளுக்கும் இழுத்துச் சென்றாலும் பாடசாலைகள் மூலம் எல்லைப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களோடு புகட்டப்படும் பாடங்கள்தாம் கல்வி! என்பதான கருத்தே இப்பொழுதில் தன்னிடம் மாத்திரமல்ல இங்கு கற்கும் பலரிடமும் காணப்படுவதாக அவர் உணர்ந்தார்.

+++

நல்லொழுக்கத்துடன் ஒவ்வொருவரையும் வாழ வழிகாட்டி எம்மை வழிப்படுத்துவதும் கல்வி! ஒவ்வொருவரும் வாழ்வதற்குத் தேவையான உடல் ஆரோக்கியத்தையும் உளநலத்தையும் ஏற்படுத்தித் தொழில் வாய்ப்புக்களைப் பெறும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதும் கல்வியே! எனினும் இன்று அரச தனியார் நிறுவனங்களால் வழங்கப்பட்டுப் பரீட்சையின் முடிவுகளின்படி சான்றிதழ் வழங்கும் ஒரு செயற்றிட்டத்துக்குள் கட்டுப்பட்டுக் கல்வி நின்று விடுவதுதான் செல்லத்தம்பியரைக் குழம்ப வைக்கும் செயலாகத் தோன்றியது.

கல்வி சார்ந்த கேள்விகள் எல்லாமே மயக்கம் தந்து சுழல, நாம் ஏன் கற்கிறோம்? என்ற கேள்விக்கான விடைகளோ, சமூகத்தின் அன்பை, அமைதியை, ஒற்றுமையை, ஒழுக்கத்தைப் புறந்தள்ளி எழுத்துப் பரீட்சைக்குள் வினா விடையாக மூழ்கிக் கிடக்கிறது.

கல்வியை இலவசமாக வழங்குகிறோம் என்றும் எங்களின் மத்தியில் 90 சத வீதத்துக்கும் மேலானவர்கள் கற்றவர்களாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளோம் எனவும் பெருமைப்பட்டு வாழும் நிலையில் எம்மைச் சூழ்ந்து வருத்தும் பயங்கரங்கள் ஏன் குறைந்துவிடவில்லை? மக்கள் தொகையும் பரீட்சை முடிவுகளும் சதவீதக் கணிப்பீட்டில் எமக்கு என்ன விடயத்தைச் சொல்ல வருகின்றன? எல்லாமே கேள்விகளாக நீண்டன! செல்லத்தம்பியர் மனம் சலித்தார். கல்வியெனும்பேரேடு அர்த்தமற்றுச் சுருங்கிக் கிடப்பதாகவே அவருக்குத் தெரிந்தது. எமது வாழ்க்கைத் தேவைகளும், எமது வாழ்க்கை அனுபவங்களும் கணிப்பிடப்பட்டுப் புதிய கல்வித் திட்டம் உருவாக்கப்படுவதோடு கற்றதன்படி ஒழுகத் தூண்டும் ஒரு கல்விச் சூழல் உருவாக வேண்டும் என்று சிந்தித்தார். ஆனால் மௌனியானார்.

கல்வியைப் பலரும் கற்றுக் கொள்வதற்காகவே பாடசாலைகள் தோன்றி இருக்கின்றன. பலருக்கும் கல்வியைக் கற்பிப்பதற்காகவே கல்வியியலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் எண்ணினார். இருப்பினும் கல்வி என்றால் என்ன? என்ற கேள்வியோ, இன்னமும் அதற்கான விடையைக் காண்பதற்காகத் தத்தளிப்பதாகவே தெரிந்தது.





# மாறுவது எப்போது...?

ஆழவேரோடிச் சாரமெடுத்து
தளிருக்குப் பசுமை
முள்ளுக்குக் கூர்மை
மலருக்கு நிறம் கூடவே வாசம்
தவறாமல் வழங்கும் செடிகூட
தன் செயலொழுங்கில்
தவறெதுவும் செய்வதில்லை

மனிதனோ...?

உறவுகளில் செலுத்த வேண்டிய அன்பு போதைக்கு
சூதுக்குக் காட்ட வேண்டிய வெறுப்பு சமூகத்துக்கு
நல்லவரிடத்தே இருக்க வேண்டிய உறவு தீயோருக்கு
சேவைக்குச் செலுத்த வேண்டிய அர்ப்பணிப்பு
துரோகத்தக்கு

செடிக்கிருக்கும் 'மனம்'
உனக்கில்லையே...!

கவிதை

வேலணையூர் மயிலைக்கிளி

நான் எனும் பேய்க் குரங்கு
மனதை உலுக்கி
வதைக்கிறதே சமூகத்தை
உயர்ந்த சிந்தனைகள்
உத்தம நெறிகள்
அறக் கோட்பாடுகள்
உனது வாழ்வியலாக
மாறுவது எப்போது?
உணர்வுகளின் ஒருமைப்பாட்டில்
நான் என்பதுவும்
நாம் என்பதுவும்
சேர்வையாவது எப்போது...?




கட்டுரை

டினேசன் நெழுந்துப்பிள்ளை

# பொதியில் பார்க்கவேண்டிய ஆரோக்கிய சமிக்ஞை!

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையில் விற்பனையாகும் பிஸ்கட் உள்ளிட்ட தின்பண்டங்களுக்கு நிறக்குறியீட்டுப் பொறிமுறையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதன்படி, இனிப்பூட்டப்பட்ட பானங்களுக்கு ஏலவே நடைமுறையிலிருக்கும் வர்ண நடைமுறை போன்ற நடைமுறை, பொதி செய்யப்பட்ட திண்ம மற்றும் அரைத் திண்ம உணவுகளுக்கும் இனிமேல் கட்டாயமாக்கப்பட உள்ளது. இந்தப் புதிய நடைமுறையின் கீழ், அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகும் மனிதரின் ஆரோக்கிய எதிரிகளான சீனி, உப்பு, கொழுப்பின் அளவு என்பன குறித்துரைக்கப்பட்ட போக்குவரத்துச் சமிக்ஞைக் கட்டுப்பாட்டு நிற அடிப்படையுடன் பொதியிடப்பட்டு இனிவரும் காலங்களில் விற்பனையாகவிருக்கின்றன.

தொற்றா நோய்களைத் தோற்கடிப்பதற்காகவும் அந்த நிலைவரத்துக்குப் பலியாகுவோரை முன்னெச்சரிக்கை செய்வதற்காகவும், பொதிசெய்யப்பட்ட உணவுப்பொருள்களைச் சந்தையில் கொள்வனவு செய்கையிலேயே அலாரம் எழுப்பும் வகையில் இந்த தடுப்புத் திட்டம் நடைமுறைக் கிடப்படவிருக்கிறது.



**பானங்களைத் தொடர்ந்து ஆகாரங்களுக்கு அறிமுகம்**

2016ஆம் ஆண்டில் இலங்கை இந்த நிறக்குறியீட்டுத் திட்டத்தை சுவையூட்டப்பட்ட பானங்கள், பருகத்தயாரான பானங்கள், பழச்சாற்றுப் பானங்கள் போன்றவற்றுக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. வர்ணக் குறியீட்டுத்திட்டம் தொடர்பான 1965கீழ்18 இலக்க வர்த்தமானி அறிவுறுத்தல் 2016ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி வெளியிடப்பட்ட நிலையில், அது தொடர்பான சட்ட நடைமுறை அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக இப்போது திட உணவுகளுக்கும் குறைத் திட உணவுகளுக்கும் இந்த நிற நடைமுறை வரவிருக்கிறது.

கடந்;த ஞாயிற்றுக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகர்களின் சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார, ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, இந்த நிறக்குறியீடுகள் மற்றும் அதன் உள்ளடக்கத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

**சீனி அல்லது வெல்ல உள்ளடக்கம்**

பொதியிடப்பட்ட குறித்த ஓர் உணவின் 100 கிராமில் உள்ள சீனியின் அளவு 22 கிராம் அல்லது அதற்கு மேற்பட்டதெனில், அது சிவப்பு நிறத்தால் குறிக்கப்படும். 100 கிராம் உணவின் சீனி உள்ளடக்கம் 22 கிராமுக்குக் குறைவாகவும் 8 கிராமுக்கு அதிகமாகவும் இருப்பின் அது செம்மஞ்சள் நிறத்தால் குறிக்கப்படும். 100 கிராம் உணவின் சீனி உள்ளடக்கம் 8 கிராமிலும் குறைவு எனில் அது பச்சை நிறத்தால் குறிக்கப்படும்.

**உப்பின் அளவு**

சோடியம் குளோரைட் என்னும் சாதாரண உப்பின் அளவு வேறுபாட்டுக்கு ஏற்பவும் வர்ண வேறுபாடுகள் அமையும். பொதியிடப்பட்ட 100 கிராம் உணவில் 1.25 கிராமுக்கு மேற்பட்ட அளவில் உப்புக் காணப்படுமாயின் அது சிவப்பு நிறக் குறியீட்டைக் கொண்டிருக்கும். 100 கிராம் உணவில் உள்ள உப்பின் அளவு 0.25 கிராமுக்கும் 1.25 கிராமுக்கும் இடைப்பட்டதெனில், அது செம்மஞ்சள் நிறத்தால் காட்டப்படும். பச்சை நிறம் 100 கிராம் உணவில் உள்ள உப்பின் அளவு 0.25 கிராமிலும் குறைவானது எனில் பயன்படுத்தப்படும்.

**கொழுப்பு அல்லது இலிப்பிட்டின் அளவு**

100 கிராம் உணவுப்பொருளில் 17.5 கிராமுக்கும் மேற்பட்ட கொழுப்புக் காணப்படின், அது சிவப்பு நிறத்தால் அறிவுறுத்தப்படும். செம்மஞ்சள் நிறக் குறியீடு காணப்படின், அந்த உணவின் 100 கிராமில் 17.5 கிராமுக்குக் குறைவான மற்றும் 3 கிராமுக்கு மேற்பட்ட கொழுப்பு அடங்கியுள்ளது என அர்த்தப்படும். கொழுப்பின் அளவு 3 கிராம்ஃ100 கிராம் ஆக உள்ள போது அது பச்சைநிறத்தால் குறிக்கப்படும்.

**மனக் கணிதம் அல்லது கல்குலேற்றர் தேவை**

பொதியிடப்பட்ட உணவு வகைகள் மேற்படி உள்ளடக்கங்களுக்கு அமைவாக நிறக்குறியீடுகளைக் கொண்டிருக்கும். அதிக பட்சமாக 3 நிறக்குறியீடுகள் காணப்படும். பாவனையாளர் ஒருவர் குறித்த பிஸ்கட்டையோ தின்பண்டத்தையோ உட்கொள்ளும்போது, அதனது நிகர எடைக்கு அமைவாகவே அவரது சீனி, உப்பு மற்றும் கொழுப்பு உள்ளெடுப்பு என்பன அமையும். எனவே நுகர்வோர் வெறுமனே நிறக்குறியீட்டுடன் மாத்திரம் நின்றுவிடாது உணவுப்பொதியின் நிகர எடைப்பெறுமானத்தையும் கருத்திற்கொண்டு பெருக்கல் பிரித்தலை மேற்கொள்ள வேண்டும்.

**குறியீடுகளைக் கொண்டிருக்காத பொதி உணவுகள்**

இந்தக் குறியீட்டு முறை நடைமுறைக்கு வருகின்ற அதேவேளை சில உணவுப் பண்டங்கள் மேற்படி வர்ண வகைப்படுத்தலினுள் அமைய மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதனிலை விவசாயப்பொருள்கள் (தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பால், மீன், இறைச்சி, சீனி மற்றும் உப்பு ஆகியவை) தனியாகப் பொதியிட்டு விற்கப்படும். வாசனைத் திரவியங்கள் சுவையூட்டுப் பொருள்கள் மற்றும் கறிச்சரக்குப் பொருள்கள், தனியான ஒரு மூலப்பொருளைக் கொண்ட பொருள்கள் அதாவது, போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர், பொதியிடப்பட்ட தேநீர் மற்றும் கோப்பி, மருத்துவ ஆலோசனையின் கீழ் உள்ளெடுக்கப்படும் உணவுகள் என்பவற்றோடு குழந்தைகளுக்கான பால்மா போன்றவற்றுக்கும் இந்தவிதிவிலக்கு வழங்கப்பட்டிருக்கிறது.



**நுகர்வோரை அறிவூட்டவேண்டும்**

2016 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த மென்பானங்களுக்கான நிறக்குறியீட்டுப் பொறிமுறை தொடர்பில் கொள்வனவாளர்களுடைய விழிப்புணர்வைப் பரிசோதிப்பதற்காக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தால் கெக்கிராவ நகரப்பிரதேசத்தில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. 50 நுகர்வோர் பங்குபற்றிய அந்த ஆய்வின் முடிவில், நுகர்வோருக்கு மேற்படி சட்டநடைமுறை தொடர்பான அறிவிருந்தும் நிறக்குறியீடு களுக்குரிய அர்த்தம் புரியாத நிலை காணப்பட்டதாகவும், நுகர்வோ ருடைய மென்பானத் தெரிவில் மேற்படி நிறக்குறியீட்டு நடைமுறை பெருமளவில் செல்வாக்குச் செலுத்தவில்லை எனவும் கண்டறியப்பட்டிருந்தது. நுகர்வோரின் கொள்வனவுத் தெரிவில் மேற்படி நிறக்குறியீடு பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதற்குக் குறித்த எண்ணக்கருத் தொடர்பில் சந்தைப்படுத்தல் வேலைத்திட்டம் தேவைப்படுவதாகவும் அந்த ஆய்வில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

**வினைத்திறன் குறைவான நடைமுறைப்படுத்தல்**

நுகர்வோரை எச்சரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்த குறியீட்டுத்திட்டம் சிறப்பான ஒன்றாகத் தோன்றினாலும் அது நுகர்வோரைச் சென்றடைவது தொடர்பில் சில குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது. உதாரணமாகக் கண்ணாடிப் போத்தலில் அடைக்கப்பட்ட காபனீரொட்சைட் ஊட்டப்பட்ட குடிபானத்தின் நிறக்குறியீடு அதன் மூடியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேநீர்க்கடையிலோ அல்லது விருந்துபசாரத்திலோ மேற்படிக் குடிபானவகை நுகர்வோருக்கு வழங்கப்படும்போது, மூடி நீக்கப்பட்ட (திறக்கப்பட்ட) நிலையிலேயே குடிபானப் போத்தல் நுகர்வோரைச் சென்றடைகிறது. இறுதிப் பாவனையாளருக்குத் தகவல் வழங்குவதற்காகச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தகவல் கடைசியில் அந்த இலக்கை அடையாமலேயே குப்பைக்கூடைக்குள் எறியப்படுகிறது.

இதே போன்று குறித்த நிறக்குறியீடானது விற்பனைப்பொருளின் பல வர்ணம் கொண்ட சுட்டுத்துண்டின் ஒரு பாகமாக அமையும் பொழுது நுகர்வோரால் எச்சரிக்கைக் குறியீட்டைத் தெளிவாக வேறு பிரித்தறிய முடியாத நிலை வரமும் ஏற்படுகிறது. இதை விட ஆரோக்கியமான மனிதன் நாளொன்றுக்கு உள்ளெடுக்கக்கூடிய பரிந்துரைக்கப்பட்ட சீனி, உப்பு மற்றும் கொழுப்பு என்பவற்றின் அளவு நுகர்வோருக்குத் தெரிந்திருந்தால் மாத்திரமே இந்தச் திட்டம் உச்சபயனைத் தரும்.

**விழிப்புணர்வூட்டல் தொடரும்!**

2016 ஆம் ஆண்டில் இனிப்பூட்டப்பட்ட மென்பானங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிற வகைப்பிரிப்பு நடைமுறை அதிகளவில் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சர், இந்தப் புதிய நடைமுறையின் பின் பெரியளவிலான விழிப்புணர்வு பரப்புரையை மேற்கொள்ளவிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். பிஸ்கட் மற்றும் இனிப்பு உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் 80ஆயிரம் தொன்களுக்கு மேற்பட்ட உணவுப்பொருள்கள் நாடு முழுவதும் விற்பனையாகுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் இலங்கையின் பிஸ்கட் உற்பத்திகள் 55 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். பன்னாட்டு மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த நிற நடைமுறையைச் செயல் வடிவமாக்குவதற்குத் தமது அமைச்சு இந்தக் கைத்தொழில்துறையினருடன் கலந்துரையாடியிருப்பதாகவும் கிறார்.

தொற்றா நோய்களிலிருந்து குடிமக்களை அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தும் இந்தச் சங்கேத மொழி நடைமுறை வெற்றியளிக்கவேண்டுமெனில் சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதுடன் நின்றுவிடாது காவி வரப்படும் தகவல் செவ்வனே கொள்வனவாளரைச் சென்றடைவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் இந்த நடைமுறை புறக்குடத்தில் வார்த்த நீர் போலாகிவிடும்.

# இந்த வாரம்

**24.03.2019 முதல் 30.03.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

ராகு, புதன், குரு, அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சு, செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். வீட்டில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலைத்திருக்கும். பூர்வீகச் சொத்து பாதுகாப்பில் கண்காணிப்பு அவசியம். புத்திரரின் செயலில் குழப்பம் ஏற்படலாம். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் புதிய நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் உறவினர்களின் ஆதரவைப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

## இடபம்

குரு, சுக்கிரன், புதன், சூரியன் அனுகூல அமர்வில் தீபஸ்தம்ப யோக பலன் தருவர். குன்றின் மேல் ஏற்றி வைத்த விளக்கு போல வாழ்க்கைத்தரம் மேம்படும். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி உண்டு. புதிய வீடு, வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். புத்திரர் பெற்றோரின் சொல்லை ஏற்று செயல்படுவர். உங்களை அவமதித்து பேசியவர் தவறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சி ஏற்படும். சத்தான உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் குடும்பத்துக்கு நற்பெயர் தேடித்

## மிதுனம்

சூரியன் சுக்கிரன் குரு சந்திரன் அளப்பரிய நன்மை வழங்குவர். நண்பர்களிடம் பெற்ற நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். குடும்ப செலவுக்கான பணம் தாராளமாக கிடைக்கும். இளமைக் கால நண்பரை சந்திக்க வாய்ப்பு கிடைக்கும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் மேம்படுவர். வழக்கு, விவகாரங்களில் சமயோசித அணுகுமுறையால் நல்ல தீர்வு கிடைக்கும். மனைவி ஜாதகத்தின் யோகபலனால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரம் செழித்து வளர்ந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் திட்டமிட்ட பணியிலக்கை நிறைவேற்றுவர். மாணவர்களுக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். .

## கடகம்

கேது, சனீஸ்வரர், புதன், செவ்வாய் சந்திரனால் அனுகூலபலன் கிடைக்கும். புதிய உத்தி மூலம் திட்டமிட்ட பணிகளை முடிப்பீர்கள். சமூக நிகழ்வுகளால் இனிய அனுபவம் கிடைக்கும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர் உங்கள் வழிகாட்டுதல்களை அன்புடன் ஏற்றுக் கொள்வர். உறவினர்களின் உதவியால் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். நோய் தொந்தரவு குறையும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பீர்கள். தொழில் வியா பாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்..

## சிங்கம்

குரு, ராகு, சந்திரன் ஆதாயபலன் தருவர். பொதுவிஷயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்பில் முன்னேறுவர். ஆன்மிகத்திலும் ஆர்வம் கொள்வர். ஆரோக்கியம் பலம்பெறும்;. விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். உறவினர் வகையில் செலவு அதிகரிக்கும். மனைவியின் கருத்து குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் பணி இலக்கை கூடுதல் அவகாசத்தில் நிறைவேற்றுவர். சலுகை ஓரளவு கிடைக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பது அவசியம்.

## கன்னி

சுக்கிரன் புதன் சந்திரனால் நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை அக்கறையுடன் செயல்படுத்துவீர்கள். நற்பெயரும் புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அளவாக இருக்கும். புத்திரர் படிப்பு வேலையில் முன்னேற்றம் காண்பர். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம். மனைவி ஒற்றுமையுடன் குடும்பநலனில் அக்கறை கொள்வார். தொழிலில் உற்பத்தி விற்பனை புதியவர்களின் ஆதரவால் பெருகும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஆர்வமுடன் ஏற்பர். பெண்கள் தாய்வீட்டாரின் உதவியை கேட்டுப்பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர் உதவுவார்.

## துலாம்

குரு, சுக்கிரன், புதன் சுபபலன் வழங்குவர். உங்கள் பேச்சில் உண்மையும் நேர்மையும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர்கள் விரும்பி சொந்தம் பாராட்டுவர். வாகனத்தில் அபிவிருத்திப்பணி மேற்கொள்வீர்கள். புத்திரர் அறிவார்ந்த செயலால் பெற்றோர்க்கு பெருமை தேடித் தருவர். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவீர்கள். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

## விருச்சிகம்

கேது, சனீஸ்வரர், சுக்கிரன், சூரியன் வியத்தகு அளவில் நற்பலன் தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய வீடு வாகனம் வாங்க கடனுதவி கிடைக்கும். புத்திரர் பெற்றோரிடம் அன்பு பாசத்துடன் பழகுவர். சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்திடும். மனைவி உங்களின் நல்ல குணத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் மறைமுகப்போட்டி குறையும். சேமிக்கும் அளவில் பணவரவு இருக்கும். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். பெண்கள் தாராள செலவில் வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்குவர்.

## தனுசு

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். புத்திரரின் தேவையை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். எதிரியிடம் விலகுவதால் வீண் பிரச்னை வராமல் தவிர்க்கலாம். உறவினர்களின் அன்பும் பாசமும் நம்பிக்கையைத் தரும். மனைவியின் இணக்கமான செயல்பாடு குடும்ப வாழ்வை சிறப்பாக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்வது கூடாது. படிப்பர்.

## மகரம்

சூரியன், ராகு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டுப் பெறுவர். தாய்வழி உறவினர்கள் அதிக பாசத்துடன் பழகுவர். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். குல தெய்வ அருள்பலத்தால் நன்மை காண்பீர்கள். எதிரி சொந்த சிரமங்களால் இடம் மாறிச் செல்வர். சத்தான உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் பேச்சு, செயலில் நம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நன்மதிப்பு காண்பர். பெண்கள்; புத்தாடை நகை வாங்குவர்.

## கும்பம்

குரு, சனீஸ்வரர், கேது, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். உங்கள் பேச்சில் புதுமையான கருத்துக்கள் மிகுந்திருக்கும். இரக்க சிந்தனையால் மற்றவருக்கு உதவுவீர்கள். குடும்பத்திற்கான தேவைகளும் எளிதில் நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். புத்திரர் பெற்றோர் சொல்லை தயக்கமுடன் ஏற்றுக் கொள்வர். இஷ்ட தெய்வ அருளால் கடன் தொந்தரவு குறையும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து புதிய சாதனை உருவாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேறுவர்.

## மீனம்

சுக்கிரன் செவ்வாய் சந்திரன் அனுகூலபலன் தருவர். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகவும். குடும்ப செலவுக்கு அதிக பணம் தேவைப்படும். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் தமது விருப்பம் நிறைவேற்ற பிடிவாத குணத்துடன் செயல்படுவர். அளவான உழைப்பும், சீரான ஓய்வும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். பணவிஷயத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். மனைவியிடம் உறவினர்களின் குடும்ப விவகாரம் பற்றி பேசக் கூடாது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

கவிதைகள்

சிவரம்யா

# நம் வாழ்வு



நிம்மதியைத் தேடி
நித்தம் அலையும் மனிதம்
நினைவுகள் கவலை தர
நிச்சயமில்லா வாழ்வு இது

முகம் பார்த்து பேசும் நண்பர்கள்
முதுகில் தாக்கும் எதிரிகள்
முணறல்களுடன் படுக்கை
முன்னேற்றமில்லா வாழ்வு இது

படுக்கை நெருப்பாய் சுடுகிறது
பசியால் வயிறு அழுகிறது
பணம் தேடி அலைந்து
பரிதவிக்கும் வாழ்வு இது

தோள்கள் வலியைச் சுமக்க
தோல்விகள் கண்டு துவள
தோழமை துன்பம் தர
தோன்றுமா நல்வாழ்வு?



# எதிரி

நீ இல்லாத போதும்
உன் நினைவு மறையவில்லை

நீ கூறிய வார்த்தைகள்
சுடும் நெருப்பாய் எரிகிறது

நீ தந்த வலிகள்
முள்ளென மனதில் குத்துகிறது

நீயும் உன் நண்பர்களும்
என்றும் எனக்குப் பகைவர்கள் தான்

# இளைஞன்



சுட்டெரிக்கும் சூரியனாய்
நீ ஒளிர்வாய்

சிறுமைதனை கண்டு
நீ பொங்குவாய்


சுற்றங்களை வாழவைத்து
நீ வெல்வாய்

சுமைகளை தாங்கி
நீ நிலைப்பாய்

கல்வி தனை கசடறக
நீ கற்பாய்

கரும வீரனாய் கடமை புரிந்து
நீ உயர்வாய்

## சொற்சிலம்பம் போட்டி இல: 562



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ...........................

..........................................................

கையொப்பம்:...............................................

**இடமிருந்து வலம்**

1. இளம் பெண்
4. பண்
7. பேதிக்கு உகந்தது
9. தோழி
10. ஒன்று சேர்
11. நெருப்பு
12. காணப்படாதது
14. நீங்கல்
15. சந்திரன்
17. வலிமை
18. நெஞ்சு
19. வாய்த்தொகுதியில் அமைந்திருப்பது
20. அதிவேகம்
22. குளிசை
23. துணிச்சல்காரன்

**மேலிருந்து கீழ்**

1. நீண்ட கால அளவு
2. காயம்
3. பேச்சு தடக்குதல்
4. கனிக்கு முந்தியது
5. உணவு
6. பீதி
8. ஒரு நதி தென்னிந்தியாவில் உள்ளது
11. பாரம் மிக்கது
12. சொற்பயன் விளக்கும் நூல்
13. யுத்தம்
14. கூடியது
16. ஆம் என்பதல்ல
18. உதாரணத்துக்கு உரியது
19. ஊர்வன வகை சார்ந்தது
21. சின்னப்பிள்ளைகள் செவிமடுக்க விரும்புவது
22. பிற நாடுகளுக்குச் செல்ல வழங்கப்படும் அனுமதி

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 560 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) சகவாசம் (5)பாபா (7) மட்டும் (8) படகு (9) படை (10) பூதலம்(12) சரளம் (14) திருமணம் (16) தரு (17)சிதம்பரம் (19) புசி (21) துரும்பு (22) தராசு

**மேலிருந்து கீழ்**
(1) சமபந்தி (2) கட்டை (3) வாடு (4) சம்பூரணம் (5) பாடம் (6) பாகு (8) பலம் (11) தளம்பல் (12) சமதளம் (13)துரு (15) ருசி (16) தம்புரா (18) மாது (20)சிசு

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 560இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கா.பொ.இ.குலசிங்கம்,
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

**2 ஆம் பரிசு**
ச.துவானந்,
இல.1595, 3ஆம் குறுக்குவீதி,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
அ.ராதாமணி,
A.R.S. கண்டி வீதி,
சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
அ.அருள்ராசன்,
இல.16/1 மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
சி.பாலசுந்தரம்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

ந.ஜெயகணேசன்,
63 5/2 மயூராபிளேஸ்,
வெள்ளவத்தை.

செல்வி ஜெ.கோபிகா,
குப்ளான் தெற்கு,
ஏழாலை.

து.மாணிக்கவாசகர்,
ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**சொற்சிலம்பம் போட்டி இல.562**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (03.04.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.562 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 07.04.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 560 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

தொகுப்பு

அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...





## இழப்பே அதிகம்!

“உத்தேசிக்கப்பட்ட அரசமைப்பும், அதனூடான அதிகாரப் பகிர்வும் நடைமுறைக்கு வருமாயின் முஸ்லிம்கள் பல்வேறு வழிகளிலும் இழப்புக்களைச் சந்திக்கநேரிடும்" என்று சட்ட முதுமானியும் அரசியல் ஆய்வாளருமான வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்தார். அக்கரைப்பற்று மொங்கோ கார்டன் மண்டபத்தில் நடந்த 'உத்தேச அரசமைப்பும் வட கிழக்கு இணைப்பும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அதேநேரத்தில் பரவலாக அடக்கி ஆளப்படும் சமூகமாக முஸ்லிம்கள் மாற்றப்படுவ ரெனவும் அவர் கூறினார்.





## அம்பாறையிலும் ஆதரவு...!

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணா மலாக்கப்பட்ட குடும்பங்களின் அமைப்பால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணி மற்றும் கதவடைப்புப் போராட்டத்துக்கு அம் பாறை மாவட்ட மக்களும் ஆதரவளித்தனர்.

நீதிக்கான பேரெழுச்சியாக மட்டக்களப்பில் நடந்த மேற்படிப் பேரணியில் அம்பாறை மாவட்டத்திலிருந் தும் பெருந்தொகையானோர் சென்று கலந்து கொண டனர். அத்துடன் கதவைடைப்பு, முடக்கங்களிலும் பங்கு கொண்டனர். திருக்கோவில், தம்பிலுவில் ஆகிய பிரதேசங்களில் அன்றைய தினம் முழுமை யான கதவடைப்பு இடம்பெற்றதுடன் தென்கிழக்கின் முக்கிய வர்த்தக நகரான கல்முனையிலும் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பாடசாலைகள் மூடப்பட்டும் ஆதரவு வழங்கப்பட்டது.

**''நீதி கிடைக்கட்டும்''**



## போதையை ஒழிப்போம் புது யுகம் .படைப்போம்

கிழக்கிலங்கையின் முன் னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் ஞாப கார்த்தமாகக் கல்முனை யில் இயங்கும் 'ஏ.ஆர். மன்சூர் பவுன்டேசன்' போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பிலான நிகழ்ச்சி களை நடத்தவுள்ளது.

'போதையை ஒழிப்போம் புதுயுகம் படைப்போம்' எனும்தலைப்பில்கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி களை குறித்த நிறுவனம் நடத்தவுள்ளது. இந்தப் போட்டிகளுக்குத் தற் போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், வெற்றியாளர்களுக்குப் பணப் பரிசில்களும் அறி விக்கப்பட்டிருக்கின்றன.

## தேய்கிறதா தேசிய காங்கிரஸ்?

முன்னாள் அமைச்சர் எம்.அதாவுல்லாவைத் தலை வராகவும் குதிரைச் சின்னத்தையும் கொண்ட தேசிய காங்கிரஸ் கட்சியை விட்டுப் பல உறுப்பினர்கள், ஆதர வாளர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

கிழக்கிலுள்ள முஸ்லிம் கட்சியான தேசிய காங்கிரசின் முக்கிய தூணாகவும், கட்சியின் பிரதித் தலைவராகவும் இருந்த முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எஸ். உதுமபலெவ்வை அண்மையில் தேசிய காங்கிரசை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்தே மேலும் உறுப் பினர்கள், ஆதரவாளர்கள் வெளியேறும் படலம் ஆரம் பித்துள்ளது.

எதிர்காலத்தில் அரசியல் சூழலுக்கு அமைய எந்த வொரு கட்சியுடனும் இணைவதற்குத் தயார் என முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**''கழுதை (குதிரை) தேய்ந்து கட்டெறும்பு ஆகிறதோ?''**



## சிரார்த்ததினம்

சேவைத் துறவியும் மட்டக்களப்பு - காரைதீவு மண் ணில் பிறந்தவருமான சுவாமி நடராஜானந்த மஹரா ஜின் 52ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் காரைதீவில் சிறப்புற நடந்தன. காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடந்ததுடன் ஆரம் பத்தில் காரைதீவு முதன்மை வீதியில் பிரதேச செயல கம் முன்பாக அமைந்துள்ள சுவாமி நடராஜானந்த மஹாராஜின் சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டுச் சிறப்புப் பூசை வழிபாடுகளும் நடந்தன. ஏழைச் சிறு வர்களின் வாழ்வில் கல்வி எனும் சுடரை ஏற்றி மறு மலர்ச்சியைத் தோற்றுவித்த சுவாமி ஏழைகளின் இல் லங்களில் ஒளியூட்டிய ஞானச் சூரியன் எனவும் புக ழப்படு கிறார்.

**''புனிதப் பணியாளர் அவர்''**

## வனிதா வாசனா!

நிந்தாவூர் மக்கள் வங்கிக் கிளையில் 'வனிதா வாசனா' சிறப்பு மகளிர் கணக்குகளைத் தொடர்ந்து பேணிவரம் வாடிக்கையாளர்களுக்குப் பன்னாட்டு மகளிர் தினத்தை யொட்டிச் சீட்டிழுப்புகளை நடத்திப் பரிசுகள் வழங்கும் நிகழ்வு குறித்த வங்கிக் கிளையில் நடந்தது. கிளை முகா மையாளரின் தலைமையில் நடந்த இந்த் நிகழ்வில் மகளிர்தின முக்கியத்துவம், சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய உரைகளும் இடம்பெற்றன.






## தாகம் தணிப்போம்!



தென் கிழக்குப் பிரதேசத்தில் தற்சமயம் நிலவி வரும் வறட்சியுடன் கூடிய வெப்பநிலையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். கோடை வெயில் அதிகரிப்பால் மக்கள் உடல் உபாதைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். கண் நோய் போன்ற நோய்களும் பரவி வருகின்றன. இதேவேளை இந்த வெப்ப காலத்தில் தாகம் அதிகம் ஏற்படுவதால் இளநீர் மற்றும் வெள்ளரி போன்ற பழங்களை உள்ளெடுப்பதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்ற னர். கல்முனை - அக்கரைப்பற்று முதன்மை வீதியில் இளநீர், பழங்கள் விற்பனை நிலையங்கள் அதிகரித்து வருவதுடன், இந்த வியாபாரம் மெல்ல மெல்லக் களைகட்டவும் தொடங்கியிருக்கிறது.

# விடாமுயற்சி



ஒரு விவசாயி வளர்த்து வந்த வயதான பொதி சுமக்கும் கழுதை ஒன்று தவறி அவன் தோட்டத்தில் உள்ள வறண்ட கிணற்றில் விழுந்து விட்டது. உள்ளே விழுந்த கழுதை அலறிக்கொண்டே இருந்தது. அதை எப்படி கிணற்றிலிருந்து வெளியேற்றி காப்பாற்றுவது என்று அவன் விடிய விடிய யோசித்தும் ஒரு யோசனையும் புலப்படவில்லை.

காப்பாற்ற எடுக்கும் எந்த முயற்சியும் அந்த கழுதையின் விலையை விட அதிகம் செலவு பிடிக்கக்கூடியதாக இருந்தது. அந்தக் கிணறு எப்படியும் மூடப்பட வேண்டிய ஒன்று. தவிர அது மிகவும் வயதான கழுதை என்பதால் அதைக் காப்பாற்றுவது வீண்வேலை என்று முடிவு செய்த அவன், கழுதையுடன் அப்படியே அந்த கிணற்றை மூடிவிடுவது என்று முடிவு செய்தான்.


அக்கம் பக்கத்தினரை உதவிக்கு கூப்பிட அனைவரும் திரண்டனர். சற்று அருகில் இருந்த ஒரு மண் திட்டிலிருந்து மண்ணை மண்வெட்டியில் அள்ளி கொண்டு வந்து அந்த கிணற்றில் அனைவரும் போட ஆரம்பித்தனர். கழுதை நடப்பதை உணர்ந்து தற்போது சாவு பயத்தில் அலறியது. ஆனால் அதன் அலறலை எவரும் சட்டைசெய்யவில்லை. இவர்கள் தொடர்ந்து மண்ணை அள்ளி அள்ளி கொட்ட கொஞ்சம் நேரம் கழித்து அதன் அலறல் சத்தம் அடங்கிவிட்டது.

ஒரு பத்து நிமிடம் மண்ணை அள்ளி கொட்டியவுடன் கிணற்றுக்குள்ளே விவசாயி எட்டிப் பார்க்க, அவன் பார்த்த காட்சி அவனை வியப்பிலாழ்த்தியது. ஒவ்வொரு முறையும் மண்ணை கொட்டும்போது, கழுதை தனது உடலை ஒரு முறை உதறிவிட்டு, மண்ணை கீழே தள்ளி, அந்த மண்ணின் மீதே நின்று வந்தது.

இப்படியே பல அடிகள் அது மேலே வந்திருந்தது. இவர்கள் மேலும் மேலும் மண்ணை போட போட கழுதை தனது முயற்சியை கைவிடாது, உடலைஉதறிஉதறிமண்ணை கீழே தள்ளி தள்ளி அதன் மீது ஏறி நின்று வந்தது.

கழுதையின் இடைவிடாத இந்தமுயற்சியால்அனைவரும் வியக்கும் வண்ணம் ஒரு வழியாக கிணற்றின்விளிம்பிற்கே வந்துவிட்டது.

விளிம்பை எட்டியவுடன் மகிழ்ச்சியில் கனைத்த கழுதை ஒரே ஓட்டமாக ஓடி தோட்டத்துக்குள் சென்று மறைந்தது.



வாழ்க்கை பல சந்தர்ப்பங்களில் இப்படித் தான் நம்மை படுகுழியில் தள்ளிக் குப்பைகளையும், மண்ணையும் நம் மீது கொட்டி நம்மை சமாதி கட்ட பார்க்கும். ஆனால் நாம் தான் இந்த கழுதை போல தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டு, அவற்றை உதறித் தள்ளி மேலே வரவேண்டும்.



எம்மை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு கல்லையும் சாமர்த்தியமாக பிடித்து படிக்கற்களாக்கிக் கொள்ள வேண்டும், எத்தனை பெரிய குழியில் நீங்கள் விழுந்தாலும். "இத்தோடு நம் கதை முடிந்தது" என்று கருதாமல் விடாமுயற்சி என்ற ஒன்றைக் கொண்டு நீங்கள் நிச்சயம் மேலே வரலாம்.

**"நீங்கள் எதுக்குள்ளே விழுந்தா என்ன,**
**உங்க மேல எது விழுந்தா என்ன?**
**எல்லாத்தையும் உதறிட்டு, நம்பிக்கையுடன்**
**செயல்படுங்கள்.**

# நான்தான் பெரியவன்!



காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. தன் வலிமையை நினைத்து அது தற்பெருமை கொண்டிருந்தது. வழக்கம் போல வேட்டையாடிவிட்டுக் குகைக்குத் திரும்பியது. அங்கேயே படுத்து ஓய்வு எடுத்தது. அப்போது கொசு ஒன்று அதன் அருகே பறந்தது. அந்தக் கொசுவையும், தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது அது.

"இறைவா! எதற்கும் அஞ்சி நடுங்கும் சின்னஞ்சிறு கொசுவாக என்னை நீ படைக்கவில்லை. எல்லாரையும் நடுங்க வைக்கும் சிங்கமாகப் படைத்து உள்ளாய். உனக்கு நன்றி!" என்ற உரத்த குரலில் சொன்னது. அப்படி அது பேசியது கொசுவின் காதில் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட கொசு, "சிங்கமே! கொசுக்களாகிய நாங்கள் உன்னைவிட வலிமையானவர்கள். இதை அறிந்து அடக்கமாகப் பேசு!" என்றது. இதைக் கேட்ட சிங்கம், "அற்பக் கொசுவே! யாரிடம் என்ன பேச்சுப் பேசுகிறாய்? நான் ஒரு அறைவிட்டால் உன் கூட்டமே அழிந்து போய்விடும். இங்கிருந்து ஓடினால் உயிர் பிழைப்பாய். இல்லையேல் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!" என்று கண்கள் சிவக்கச் கர்ச்சித்தது.

அதற்குக் கொசு, "சிங்கமே! நம் இருவரில் யார் வலிமையானவர்? சண்டை போட்டு முடிவு செய்வோம்!" என்று வீரம் பேசியது. "நீ என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? வா. உன்னை ஒரு நொடிக்குள் நசுக்கிக் கொன்றுவிடுவேன்!" என்று கர்ச்சித்தது அது. கொசு வேகமாகப் பறந்து வந்து சிங்கத்தின் முகத்தில் கடித்தது. உடனே அது தன் முன்னங்காலால் முகத்தில் வேகமாக அறைந்தது. கவனமாக இருந்த கொசு அதன் அறையில் இருந்து தப்பித்தது. பிறகு பறந்து பறந்து அதன் உடலெங்கும் கடித்தது. இப்படிக் கொசு கடித்த போதெல்லாம் தன்னை அறைந்து கொண்டது சிங்கம். அந்தக் கொசு சிக்கவே இல்லை. திறமையாகத் தப்பித்துக் கொண்டே இருந்தது. இதனால், சிங்கத்தின் உடலெங்கும் காயம் ஏற்பட்டுச் சோர்வு அடைந்தது. கொசுவோ மீண்டும் மீண்டும் பறந்து அதைக் கடித்தபடி இருந்தது. வேறு வழியில்லாத சிங்கம், "கொசுவே! என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்!" என்றது. "இனி யாரையும் எளியவர் என்று கேலி செய்யாதே!" என்ற கொசு அங்கிருந்து பறந்து சென்றது.

# இளநீர்



தென்னை மரத்து
இளநீர் நல்ல
தேன்போல
இனிக்கும் சுவைநீர்
என்றும் எங்கும்
கிடைத்திடுமே தினம்
ஏற்றுக் குடித்தால்
நலம் தருமே!


இயற்கை தந்தது
இளநீரு நல்ல
இன்சுவை தந்திடும்
இளநீர்
உடலின் வெப்பம்
தணித்திடுமே நம்
உள்ளம் தனிலே
நிறைந்திடுமே!

பானத்தில் இளநீர்
அரியவகை எந்த
காலமும் நமக்கு
நல்ல துணை
விலையோ ஒன்றும்
அதிகமில்லை இங்கு
இதுபோல் பானம்
வேறு இல்லை.

கொத்துக் கொத்தாய்
காய்த்திடுமே நம்
அனைவரின் தாகம்
தீர்த்திடுமே!
அனைவரும் நாளும்
குடித்திடலாம் வரும்
ஆனந்தம் தனிலே
திளைத்திடலாம்!

# வர்ணம் தீட்டுவோம்









## 'சிந்துபாத்'தில் நடிக்கின்றனர் விஜய்சேதுபதியும் மகனும்

விஜய் சேதுபதி நடித்த சிந்துபாத் முன்னோட்டக் காணொலி வெளியாகியது. 'பண்ணையாரும் பத்மினியும்', 'சேதுபதி' ஆகிய படங்களை விஜய் சேதுபதியை வைத்து இயக்கிய அருண்குமார் 'சிந்துபாத்' படத்தையும் இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் நடிகை அஞ்சலி விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்துள்ளார். இதுமட்டுமில்லாமல் விஜய் சேதுபதியின் மகனான சூர்யாவும் இந்தப் படத்தில் அறிமுகமாகிறார்.

முன்னோட்டக்காணொலியிலும் விஜய் சேதுபதி, சூர்யாவை கழுத்தில் தூக்கி வைத்திருப்பது போன்ற ஒரு காட்சியும் வரும். ஏற்கனவே நானும் ரௌடிதான் என்ற படத்தில் குட்டி விஜய் சேதுபதியாக கொஞ்ச நொடிகளே வந்திருப்பார். இதை அடுத்து சிந்துபாத் படம் முழுவதுமாக நடித்திருக்கிறார் என்று படக்குழுவே தெரிவித்துள்ளது. இந்த படத்தில் விஜய் சேதுபதியும், அவரது மகன் சூர்யாவும் திருடர்கள் போன்ற கதாபாத்திரத்தில் நடிப்பதாகவும் கூறப்படுகிறது.




நீ ஒருவரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த அறிவோ, அழகோ, பணமோ தேவையில்லை. 'அக்கறை' இருந்தால் போதும்




கூந்தலில்
ஜடை
பின்னத்
தெரியாத
நவநாகரிக
பெண்கள்
பலர்
இருக்கையில்
கல்லில் ஜடை
பின்னினான்
சங்கம்
அமைத்து
தமிழ் வளர்த்த
நம்
பண்டைய
தமிழன்



குழந்தைகளை குளிர்க்க வார்க்கும் போது பயன்படுத்தக் கூடிய வளைய தொப்பிகள் அறிமுகமாகி யுள்ளன. இவை 399 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படு கின்றன.

இது புதுசு

## புகை எமக்கு பகை



## ஆண்களை பற்றி எழுதியது

ஆண் என்பவன்...
கடவுளின் உன்னதமான
படைப்பு.சகோதரிகளுக்காக,
இனிப்புகளை தியாகம்
செய்பவன்..
பெற்றோர்களின்
ஆனந்தத்துக்காக,
தன் கனவுகளை தியாகம்
செய்பவன்.
காதலிக்கு பரிசளிக்க, தன்
பர்ஸை காலி செய்பவன்.
மனைவி குழந்தைகளுக்காக ,
தன் இளமையை அடகு வைத்து
அலட்டிக் கொள்ளாமல்
அயராது உழைப்பவன்.
எதிர்காலத்தை லோன் வாங்கி
கட்டமைத்துவிட்டு, அதனை
அடைக்க வாழ்க்கை முழுதும்
லோ லோ என்று அலைபவன்..
இந்த போராட்டங்களுக்கு
இடையில், மனைவி, தாய்
,முதலாளிகளின் திட்டுகளை
வாங்கி, தாங்கிக்கொண்டே
ஓடுபவன்.
அடுத்தவர்களின்
ஆனந்த்துக்காகவே ஆயுள்
முழுக்க அர்ப்பணிப்பவன்.
அவன் வெளியில் சுற்றினால்,
'உதவாக்கரை' என்போம்.
வீட்டிலேயே இருந்தால்,
'சோம்பேறி' என்போம்.
குழந்தைகளை கண்டித்தால்,
'கோபக்காரன்' என்போம்,
கண்டிக்கவில்லை எனில்,
'பொறுப்பற்றவன்' என்போம்.
மனைவியை வேலைக்குச்
செல்ல, அனுமதிக்காவிடில்
'நம்பிக்கையற்றவன்' என்போம்,
அனுமதித்தால் 'பொண்டாட்டி
சம்பாத்தியத்தில் பொழப்பை
ஓட்டுபவன்' என்போம்.
தாய் சொல்வதை கேட்டால்,
'அம்மாப் பையன்' என்போம்.
மனைவி சொல்வதைக் கேட்டால்,
'பொண்டாட்டி தாசன்' என்போம்.
ஆக மொத்தத்தில் ஆண்களின்
உலகம், தியாகங்களாலும்
வியர்வையாலும்
சூழப்பட்டது.

ஆண்
அழத்
தெரியாதவன்
அல்ல
கண்ணீரை
மறைத்து வைக்கத்
தெரிந்தவன் ..
அன்பில்லாதவன் அல்ல
சொல்லில் வைக்கத்
தெரியாதவன் ..
வேலை தேடுபவன் அல்ல
தன் திறமைக்கான
அங்கீகாரத்தை
தேடுபவன் ..
பணம் தேடுபவன் அல்ல
தன் குடும்பத்தின்
தேவைக்காக ஓடுபவன் ..
சிரிக்கத் தெரியாதவன்
அல்ல
நேசிப்பவர்களின் முன்
குழந்தையாய் மாறுபவன்
..
காதலைத் தேடுபவன்
அல்ல
ஒரு பெண்ணிடம்
தன் வாழ்க்கையை
தேடுபவன் ..
கரடுமுரடானவன் அல்ல
நடிக்கத் தெரியாமல்
கோபத்தை கொட்டிவிட்டு
வருந்துபவன்.



# பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தினது பெருவிழா

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பிரான்ஸ் நாட்டு எமில் வியார் அ.ம.தி அடிகளார் பிரெஞ் மொழியில் எழுதிய பாலைதீவு அல்லைப்பிட்டி மோசசும் பாலைதீவு புனித அந்தோனியாரும் என்ற ஆக்கம் தொம்மையப்பு யேசுதாசன் அடிகளாரால் தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டு கடந்த வாரம் உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரிய காந்தியின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதியில் வழங்கப்பட்டது. அதன் இரண்டாம் பகுதியை இவ்வாரம் நோக்குவோம்.

இந்த ஆக்கத்தை மொழிபெயர்த்து தந்து தொம்மையப்பு யேசுதாசன் அடிகளார் கொழுப்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் மெய்யியல்துறை விரிவுரையாளராக பணியாற்றுகிறார். எமில் வியார் அ.ம.தி அடிகளார் எழுதிய கட்டுரையின் முதற் பகுதியில் எவ்வாறு சுழியான் மோசஸ் குழந்தையாய் இருந்தபோது திருமுழுக்குப்பெற ஊர்காவற்துறைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது காற்றின் வேகத்தால் படகில் இருந்து தூக்கி வீசப்பட்டு அந்தோனியாரிடம் வேண்டி உயிர் பாதுகாக்கப்பட்டமையால் ஒரு சில்வர் நாணயத்தை ஒவ்வொரு ஆண்டும் அந்தோனியாருக்கு காணிக்கையாகத் தருவதாக தயார் நேர்ந்தார் எனக் கண்டோம்.

**உண்டியல் களவாடப்பட்டது**

ஒருமுறை பாலைதீவு அந்தோனியார் தவக்கால கடல் கடந்த யாத்திரைத்தல உண்டியல் களவாடப்பட்டது. இதைப் பார்த்துக் கோபமடைந்த மோசசின் தந்தை புனித அந்தோனியாரை நோக்கி கோபத்துடன் கதறினான். இங்கிருந்து நீர் என்ன செய்கின்றீர்? இங்கு உமது இருப்பின் அர்த்தம்தான் என்ன? உமக்கு கிடைக்கும் காணிக்கைகளைக்கூட உம்மால் காப்பாற்ற முடியவில்லையா? இவ்வாறு தனது கோபத்தையும் கவலையையும் கொட்டித் தீர்;த்த பின்பு இந்தச் சுரூபத்தை படகிலேற்றி அல்லைப்பிட்டி ஆலயத்திற்கு கொண்டுவந்து சேர்ந்தார். பின்பு சுரூபத்திற்குப் பதிலாக இன்னுமோர் சிறிய அந்தோனியார் சுரூபத்தை பாலைதீவுக்கு கொண்டு சென்று வைத்தார். காலப்போக்கில் புதிய சுரூபம் புதுமைகள் செய்யும் சுரூபமாக யாழ்ப்பாண கத்தோலிக்க மக்களையும் ஆயரையும் கவர ஆரம்பித்தது. இதேவேளை பாலைதீவிலிருந்து அல்லைப்பிட்டிக்கு மோசசின் தந்தை கொண்டு வந்த அந்தோனியார் சுரூபத்தின் பாதங்களிலிருந்து செபிக்கும் பழக்கத்தை மோசஸ் வளர்த்துக் கொண்டார். இவர் ஒவ்வொரு முறையும் கடலில் மீன் வேட்டையை முடித்துக்கொண்டு அல்லைப்பிட்டி கிராமத்திற்குத் திரும்பி வரும்போதெல்லாம் இந்தச் சுரூபத்தின் முன் செபிப்பது மோசசின் வழக்கமாக மாறியது. இவ்வாறு இவருக்கும் அல்லைப்பிட்டி ஆலயத்திலிருந்த புனித அந்தோனியாருக்குமிடையில் உறவு ஆழமானது.

உண்டியலைக் காப்பாற்றத்தவறிய சிறிய குற்றத்திற்கு 50 வருட அல்லைப்பிட்டி சிறைவாசகத் தண்டனை அதிகம் என்று எண்ணினார் சுழியான் மோசஸ். இனி நான்தான் முன்னின்று காரியங்களை நடத்த வேண்டும். நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். எனவே புனித அந்தோனியாருக்கு பாலைதீவில் ஓர் அழகான ஆலயம் கட்டி சிறைப்பிடிக்கப்பட்ட அந்தோனியாரை மீண்டும் இத்தீவிற்கு கொண்டுசெல்வேன் என்று உறுதிகொண்டார்.

**ஆலயம் அமைக்க உதவி தேடல்**

நினைத்ததை சாதிக்க உறுதி கொண்ட மோசஸ் தனது வலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு 75ஆவது வயதிலே அந்தோனியாரின் துணையோடு யாழ் மேற்றாசனத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று புனித அந்தோனியாரின் பக்தர்களிடம் பாலைதீவில் ஆலயம் அமைக்க பண உதவியை நாடினார். அந்தோனியாரின் பக்தர்கள் பலர் அள்ளிக்கொடுத்தார்கள். சிலர் அவரை விமர்சித்தார்கள். அவர் சோர்ந்து போகவில்லை. 75 வயதிலும் எடுத்த காரியத்தில் மலைபோல உறுதியாக நின்று 5 வருடங்களில் பாலைதீவில் புனித அந்தோனியாருக்கு ஓர் அழகான ஆலயத்தைக் கட்டிக்கொடுத்தார். 50 வருடங்களாக அல்லைப்பிட்டியில் சிறைபிடிக்கப்பட்டிருந்த அந்தோனியார் சுரூபத்தையும் மீண்டும் பாலைதீவிற்கு கொண்டுசென்று நிறுவினார். இவ்வாறு மோசஸ் தனது உறுதிமொழிகளை நனவாக்கினார்.

1927ஆம் ஆண்டில் திருவிழா நாள்கள் ஆரம்பமாகின. அந்தோனியாரை நோக்கிப் பக்தர்கள் குவிந்தனர். இவ்வேளையில் யாரும் நினையாதவாறு மோசசின் மனைவி கடும் நோயுற்று நோயில்பூசுதல் திருவருட்சாதனமும் அவருக்கு வழங்கப்பட்டதென்ற செய்தி பாலைதீவிற்குப் பறந்து வந்தது. மோசசின் மனைவி அல்லைப்பிட்டியில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்க பாலைதீவில் மோசஸ் திருவிழா ஆயத்தங்களில் மூழ்கியிருந்தார். தன் உயிர்காத்த அந்தோனியாரைக் கைவிட்டு மனைவியிடம் ஓடுவதா? அல்லது தரித்து நின்று அந்தோனியாருக்குப் பணி செய்வதா? என்ற போராட்டத்தில்; தெளிவு பெற்றார். தரித்திருந்து திருவிழா நாள்களில் என் அந்தோனியாருக்காகப் பணி செய்வேன் என்று முடிவெடுத்தார். இவர் அந்தோனியாரைப் பார்த்து வேண்டினார். திருவிழா முடிந்து நான் வீடு திரும்பும்வரை என் மனைவியைக் காப்பாற்றும். நான் உமக்குப் பணி செய்யும்போது என் மனைவி இறந்தால் என் மனைவியை உம்மால் காப்பாற்ற முடியவில்லையே என்று எல்லோரும் உம்மைக் கேலி செய்வார்கள். பாலைதீவில் தரித்து நின்று திருவிழாக்களை முடித்த பின்பு நம்பிக்கையயோடு தன் படகை அல்லைப்பிட்டி நோக்கிச் செலுத்தினார். கரை சேர்ந்ததும் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். நோயுற்றிருந்த தன் மனைவி நோய் நீங்கி வீட்டு வாசலில் அவரை வரவேற்று நிற்பதைப்பார்த்து மோசஸ் மெய்சிலிர்த்து நின்றார் என்று அந்த ஆக்கம் நிறைவுறுகிறது.




எமில் வியார் அ.ம.தி அடிகளார் எழுதிய அல்லைப்பிட்டி மோசசும் பாலைதீவு புனித அந்தோனியாரும் என்ற கட்டுரையை வாசித்து மொழிபெயர்த்த பின்பு நான் அல்லைப்பிட்டியை சேர்ந்த இவரின் 4ஆம் தலைமுறை உறவினரான யேசுதாசன் யூலன் அமலதாசன் என்பவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மோசஸ் பற்றி கேட்டபோது அவர் மோசஸ் புனித அந்தோனியாருடன் நெருக்கமாக வாழ்ந்த ஒரு கிறிஸ்தவன் என்று அல்லைப்பிட்டியின் முதியவர்கள் பலர் பாரம்பரியமாக சொல்லி வந்ததை நான் கேட்டிருக்கிறேன். இவர்தான் இறந்தபின் தன் உடலை பாலைதீவில் அடக்கம் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டிருந்தார். எனவே இவரின்; உடன் பிறந்த சகோதரனான சுழியான் மார்க்கு என்பவர் இவர் இறந்த போது இவரின் உடலை மிக சிரமங்கள் மத்தியில் பாலைதீவிற்கு எடுத்துச்சென்று புனித அந்தோனியாரின் ஆலயத்திற்கு அருகில் புதைத்தார்கள் என்றும் கூறினார். யேசுதாசன் யூலன் அமலதாசன் என்பவருடன் ஏற்படுத்திய இந்த தொலைபேசி அழைப்பின் பின்னர் சுழியான் மோசஸ் பற்றி எமில் வியார் அ.ம.தி அடிகளார் எழுதிய கட்டுரை மிகைப்படுத்தப்பட்டு கூறப்பட வில்லையென நான் அறிந்து கொண்டேன். பாலைதீவில் அமைந்திருக்கும் புனித அந்தோனியாரின் நண்பன் மோசசின் கல்லறை புனித அந்தோனியார் வாழ்ந்த புனிதமான வாழ்வை பின்பற்ற தூண்டும் அழியாச் சின்னமாக இங்கு வரும் யாத்திரிகளுக்கு என்றும் அமைந்திருக்கட்டும் என வேண்டுகிறேன்.



**பாலைதீவில் ஆண்டுதோறும் 20ஆயிரம் யாத்திரிகர்கள்**

அல்லைப்பிட்டி வலைப்பாடு முளங்காவில் இரணைமாநகர் பள்ளிக்குடா பூனகரி - குரநகர் நாவாந்துறை ஆனைக்கோட்டை நவாலி மண்டைதீவு யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை பள்ளிமுனை பேசாலை மன்னார் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 20 ஆயிரம் யாத்திரிகர்கள் ஆண்டு தோறும் பாலைதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழாவில் பொதுவாகக் கலந்து கொள்கின்றனர். தவக்கால மூன்றாம் வாரம் கொண்டாடப்படும் யாத்திரைத்தல பெருவிழாவான பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா யாழ், மன்னார் மறைமாவட்டங்களின் கரையோர கத்தோலிக்க மக்களை இணைக்கும் திருவிழாவாக அமைகிறது.

இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் தவக்காலத்தில் கொண்டாடப்படும் கடல் கடந்த யாத்திரைகளில் முக்கியமானதாக விளங்கும் கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் பாலைதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் அரச வர்த்தமானி அறிவிபு;புச் செய்யப்பட்ட விழாக்களாகும் என்பதாகும். மேலும் இந்த கடல் கடந்த எல்லா தவக்கால யாத்திரைத்தலங்களும் புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலங்களாகும் என்பது சிறப்பு முக்கியத்துவம் பெறுவதாகும்.

பகுதி 2

**பாலைதீவு புனித அந்தோனியார் பெருவிழா**

பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தை உருவாக்க மூலகார்த்தாவாக இருந்தவர் அல்லைபிப்பிட்டி புனித யுவானியார் ஆலய மூப்பர் சுழியான்; மோசஸ் என அறியவருகிறது. பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத்தலத்தை பரிபாலித்து வந்த அல்லைப்பிட்டி மூப்பர்களின் பெயர்ப் பட்டியல் பாலைதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பீடத்தின் அருகில் பொறிக்கப்பட்டுளதைக் காணலாம்.

சுழியான்; மோசஸ் என்பவரே பா்லைதீவில் கடற்தொழில் செய்து வந்த அல்லைப்பிட்டி நாவாந்துறை குருநகர் நவாலி மண்டைதீவு மக்களை இணைத்து 1895ஆம் ஆண்டில் கொட்டில் கோவில் அமைத்து ஊர்காவற்துறையில் இருந்து புனித அந்தோனியார் சுருபத்தை பெற்று வந்து அங்கு வைத்து பாரமரித்து வந்துள்ளார். பின்னர் சுழியான் மோசஸ் என்பவர் பாலைதீவில் கடற்தொழில் புரியும் அனைத்துத் தொழிலாளர்களுடனும் கலந்து பேசி 1918ஆம் ஆண்டில் மேற்படி கோவிலைக் கல்லால் கட்ட ஆரம்பித்தார். இதன் போது தற்போது இருக்கும் பீடத்துடன் சேர்த்து புது கட்டிடம் அமைத்து தற்போது இருக்கும் கோவில் வரை முருகைக் கல்லினால் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர் 1936ஆம் ஆண்டில் அறைவீடு கட்டப்பட்டது. 1947ஆம் ஆண்டில் பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தை உருவாக்க மூலகர்த்தாவாக இருந்த அல்லைபிப்பிட்டி புனித யுவானியார் ஆலய மூப்பர் சுழியான் மோசஸ் அல்லைப்பட்டியில் காலமானபோது அவரின் இறுதி ஆசைப்படி அவரது புதவுடல் பாலைதீவில் அவரின் சகோதரர் சுழியான் மார்க்குவின் தலைமையில் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலைத்தை உருவாக்கியவரான சுழியான்; மோசஸின் கல்லறை இன்றும் அல்லைப்பிட்டி மக்களால் பாலதீவில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்களைத் தந்தவர் (சுழியான் மார்க்குவின் பேரன்) நாவாந்துறையில் வசித்து 2016ஆம் ஆண்டு தை மாதம் இறந்து போன அல்லைப்பிட்டி வாசியான் சூசைப்பிள்ளை ஆனந்த செல்வம் என்பவராவார்.

சுழியான் மோசஸ்க்குப் பின்னர் அவரின் சகோதரர் சுழியான் மார்க்கு ஆலயப் பணிகளை மேற்கொண்டார். அவரும் 1950ஆம் ஆண்டில் இறந்த போது மோஸின் மற்றொரு சகோதரரான அந்தோனி என்பவரின் மகன் பேதுருப்பிள்ளை ஆலயப்பணிகளை மேற்கொண்டார். இவர் சுழியான் என்றே அறியப்பபட்டார் எனத் தெரிய வருகிறது. இவருக்குப்பின் பேதுறுப்பிள்ளையின் சகோதரரான அருளப்புவின் மகன் இயேசுதாசன் 1973ஆம் ஆண்டு முதல் ஆலயப்பணிகளை மேற்கொண்;டு வருகிறார். இவர் தற்போது இயலாமல் இருப்பதால் பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தின் மூப்பர் பணிகளை இவரின் மகன்; இயேசுதாசன் யூலன் என்பவர் மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நித்திய சுகம் 416

உடலே கோயில்



# தண்ணீர் ஓர் அருமருந்து!

ச.சுதாகரன்

இயற்கை எமக்கு வழங்கியுள்ள சிறந்த மருத்துவக் குணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மாமருந்து தண்ணீர் ஆகும். இது எளிமையானது. முறை அறிந்து பயன்படுத்தினால் தவறாமல் பயன்தரும். பக்கவிளைவுகள் இல்லாதது. உடல் இயக்கம் இயல்பாக நடைபெற போதுமான தண்ணீர் இன்றியமையாததாகும். சிறுநீர், மலம் என்பவற்றின் மூலமும் எமது உடலின் மிகப் பெரிய கழிவுகள் நீக்கியான தோலின் மூலம் வியர்வை, மூச்சு, சளி ஆகியவற்றின் வழியாக ஒவ்வொரு விநாடியும் ஏற்படும் நீர் இழப்பை ஈடுகட்டி உடலின் இயல்பான நீரின் அளவு சீராகப் பராமரிககப்படுவதற்குத்தேவைப்படும்அளவில் தண்ணீர்பருகுவது மிக இன்றியமையாதது ஆகும்.

### அலட்சியம் வேண்டாம்

நாம் உண்ணும் உணவானது எமது உடலில் உள்ள இயற்கையான சுரப்பிகளாலும் செரிமான அமிலங்களாலும் செரிமான உறுப்புக்களாலும் மிக நுண்ணிய துணிக்கைகளாகப் பிரிக்கப்ப டும்போது உடலில் ஏற்படும் அதிகப்படியான வெப்பத்தை சீராகப் பேணுவதற்கும், எமது உடல் உயிர் ஆற்றல் எமக்கு உணர்த்தும் அறிவிப்புதான் நீர்த்தாகம் ஆகும்.

இந்தநீர்த்தாகத்தைநாம்அலட்சியப்படுத்தினால் செரிமானக் குறைபாடுக்ள், மலச்சிக்கல், சிறுநீரகச் சிக்கல்கள், சிறுநீரக்கல் போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு அடித்தளம் அமைக்கப்பட்டதாகிவிடும். எனவே சுத்தமான பாதுகாப்பான குடிதண்ணீரைப் பருகுதல் எமது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். நல்ல தண்ணீர் என்பது உப்புக்களும் வேறு திண்மப் பொருள்களும் குறைந்த அளவில் கரைந்துள்ள தண்ணீர் ஆகும். சுத்தமான குடிதண்ணீருக்குப் பதிலாகக் குளிர் பானங்களை தேநீர் மற்றும் பானங்கள் பருகுவது பெருத்தமாக இருக்காது. இது எமது நாளாந்த சமிபாட்டு ஓட்டத்தில் மாறுதல்களும் சிக்கல்களும் ஏற்பட வாய்ப்பாகிறது. உதாரணம் பசியின்மை செரிமானக் குறைபாடுகள், வயிற்றுப் போக்கு. எனினும் நீரின் தேவையை முறை அறிந்து பயன்படுத்துதல் நலம் தரும்.

### தண்ணீரை எப்போதெல்லாம் எடுத்துகொள்ளல் வேண்டும்

காலையில் எழுந்து பல் தேய்த்த பின்பு தாகம் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்போதுமானஅளவுகுடிதண்ணீரை எமது உமிழ் உடலின் நீர்த் தேவையை ஈடுகட்டவும் சமிபாடாகிய உணவுக் கழிவுகளை அகற்றும் செயலுக்காகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உணவு உண்ட பின்பு ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக்குள் ஏற்படும் தாகத்தின்போது போதுமான அளவு குடிதண்ணீர் பருகுதல் எமது செரிமானம் மேம்பட உதவுகின்றது.

பகலில் ஒருவேளை உணவுக்கும் மறுவேளைஉணவுக்கும்இடைப்பட்டநேரத்தில் அதாவது தாகம் மறைந்து திருப்தி நிலை ஏற்படும் அளவுக்குப் பருகுதல் நல்லது.

சூடான பானங்கள், தேனீர், கோப்பி போன்றவற்றைப் பருகுவதற்கு முன்பு தேவைப்படுமாயின் தண்ணீர் அருந்தலாம். சூடான பானங்கள் அருந்திய பின்பு 30 நிமிடங்களுள் குளிர்ச்சியான பானங்கள் அருந்துவதைத் தவிர்த்தல் நலம்.


காய்ச்சல்நேரங்களில்உணவைத் தவிர்த்து கூடிய அளவு போதுமான அளவுநீர்அல்லதுவெந்நீர், கோப்பி, தேநீர், இளநீர்மற்றும்நீராகாரங்கள் அருந்துதல்நல்லது. உணவுஉண்டவுடன் அரைக் குவளை வெந்நீர் பருகுதல்அவசியம். அதுசெரிமான உறுப்புகளுக்குக் குருதி விநியோகத்தை அதிகரித்துச் செரிமானம் மேம்பட உதவும்.

உடற்பயிற்சி, கடினஉழைப்புக்குப் பின்பு அல்லது வெயிலில் சென்று வந்த உடன் குழந்தைகள் ஓடியாடி விளையாடிய பின்பு உடலில் குருதி ஓட்டம் தீவிர நிலையில் இருக்கும். பெருமூச்சு, வியர்வை, அதிக அளவில் நீர்த்தாகம் இருப்பினும் உடலின் குருதி ஓட்டம் இயல்பு நிலைக்கு வந்தபின்பு போதுமான நீர் அருந்துங்கள். தீவிர நிலையில்தேவைப்படின்சூடானபானங்கள் அல்லது வெந்நீர் போன்றன அருந்துதல் நலம் தரும். இது மேலும் குருதி ஓட்டத்தை அதிகரித்து உடற்கழிவுகளை நீக்கும் வாய்ப்பை அதிகரிக்கிறது. இந்த நிலையில்குளிரானபானங்களைஉடன் அருந்தினால் உடலின் குருதி ஓட்டத்தில் திடீர் மாறுதலை ஏற்படுத்தி தடிமன், தும்மல், மந்தநிலை, உடல்வலி, தலைப்பாரம், தலைவலி, காய்ச்சல் போன்றன ஏற்படலாம்.

உணவு உண்ணும்போது அதிகளவு தண்ணீர் அருந்துதல் உணவு உண்பதற்கு முன் அல்லது பின் ஒரு மணிநேரத்துக்குள் அதிகப்படியான தண்ணீர் பருகுதல் போன்றவற்றால் எமது சமிபாட்டு அமிலங்கள் நீர்த்து அவைகளின் தீவிரத்தன்மை வெகுவாகக் குறைந்து முறைகேடான சமிபாடு ஏற்படுகின்றது.

பாலருந்தும் நிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் பசி வேறு, நீர்த்தாகம் வேறு. குழந்தை அழும்போது ஒரு தேக்கரண்டி தண்ணீரைக் குழந்தையின் வாயருகே கொண்டு சென்றால் பசி என்றால் தண்ணீரை மறுத்துவிடும். அப்போது பால் அருந்தக்கொடுக்கலாம். எனவே குழந்தை அழுதபோது தாகமா? பசியா என்பதையும் பிரிந்துணர்நது தேவைப்படும் அளவில் குழந்தைக்குக் குடிதண்ணீரை ஊட்டுவதன் மூலம் செரிமானக்குறைபாடுகளை ஆரம்பநிலையிலேயே சீராக்கப்படுவதால் மலச்சிக்கல், வாந்தி, வயிற்றுப் பொருமல் போன்றன தவிர்க்கப்பட்டுக் குழந்தையின் சீரான வளர்ச்சிக்கு உதவுகின்றது. உணவு உண்ணும்போது இடையில் குளிர்பானங்களைப் பருகுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

குடிதண்ணீர் எவ்வளவு தூய்மையானதாக இருப்பினும் அது தேக்கி வைக்கப்படும் பாத்திரம் அதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். காரணம் தேக்கி வைத்திருக்கும் பாத்திரங்களின் தன்மையும் நீரில் நுண்ணியதாகக் கலந்து விடுகின்றது.



இரும்பு அல்லது பிளாஸ்ரிக் குழாய்களில் தேங்கிநிற்கும் நீரில் துரு, பிளாஸ்ரிக்கின் இரசாயனக் கலவை குடிதண்ணீரை நஞ்சாக மாற்றுகின்றன. அலுமினியம், பிளாஸ்ரிக், ஈயம் பூசப்பட்ட பித்தளை, செப்பு போன்ற பாத்திரங்களில் தண்ணீர் தேக்கிப் பயன்படுத்துவதன் மூலம் நீரில் நச்சுத்தன்மை ஏற்பட்டு விடுகின்றது. கண்ணாடி, எவர்சில்வர்போன்றவற்றில் சேமிக்கப்படும் நீரில் நச்சுக் கலப்பு ஏற்படுவதில்லை.

தற்போது சுற்றுச்சூழல் மாசடைவதால் நீரில் கலந்துவிட்ட மாசுக்களை அகற்றுவதற்கு நீரைக் கொதிக்கும் வரை நன்றாகக் காய்ச்சி ஆறவைத்துப் பழைய மண் பானையில் 10 மணி நேரம் வரை அசைவில்லாமல் ஆறவைத்துப் பின்பு வடித்து அடியில் உள்ள வண்டல்களை அகற்றிய பின் பானையைக் கழவி நீரை அதனுள் ஊற்றி மூன்று நாள்களுக்குக் குடிதண்ணீராகப் பாவிக்கலாம்.

புதிய பானை ஒன்றினுள் நீரைவிட்டு இரண்டுமூன்றுதடவைசூடாக்கியபின்பு பாவிக்கவும். இம்முறை மூலம் நீரின் நச்சுக்களையும் அதில் கலந்துள்ள வண்டல்களையும் ஐம்பூதங்களின் ஒன்றான மண்ணால் செய்யப்பட்ட பானை ஈர்த்து அடியில் தங்க வைத்துவிடும். அத்துடன் கொதி நிலையில் நிரில் இருந்து வெளியேற்றப்படும் ஒட்சிசன் மற்றும் இதரசத்துக்களை மண்பானையானது காற்றில் இருந்துமீண்டும்ஈர்த்துஅந்தநீரின்தரத்தை மீண்டும் உயர்த்தி விடுவது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய பாத்திரங்களுக்குஇப்படியானஆற்றல்இல்லை. மனிதன் இந்த உலகில் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு உணவால் கிடைக்கப்பெறும் ஆற்றல்கள் மட்டும் போதாது. தண்ணீர் மற்றும் காற்றுப் போன்றவற்றால் கிடைக்கப்பெறும் ஆற்றல்களும் அண்டவெளியில் சூரியன், சந்திரன் இதரகோள்களில் இருந்துபெறப்படும் வெப்ப ஒளி, ஒலி, வாயு அலைகள் ஓசோன் படலத்தின் ஊடாக வடிகட்டி மனிதனுக்குச்சரியானவிகிதத்தில்பெறப்படும்போதே அவன் தொடர்ந்து உடல், உளஇயல்புஆரோக்கியநிலையில்வாழ முடியும் என்பதை அறிவியலாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் ஒருவரின் மொத்த எடையில் 65 வீதம் தண்ணீர் என நவீன விஞ்ஞானம் கூறுகின்றது. விஞ்ஞான முறைப்படி சுத்தமாக்கப்படும் குடிதண்ணீரின் சிறப்புத் தன்மையில் மாற்றம் ஏற்படுகின்றதையும் இயற்கை நிலையில் இருக்கும் நீரின் மூலம்தான் மனிதன் அளவற்ற நன்மைகளைப்பெறுகின்றான் என்பதையும் சுற்றுச் சூழல் மாசடைவதால் மனிதன் விஞ்ஞான முறைப்படி சுத்தமாக்கப்பட்ட குடி தண்ணீர் அருந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான் என்பதையும் ஆய்வின் மூலம் அறிகிறோம்.

*கட்டுரையாளர்*
*தாதிய உத்தியோகத்தர்,*
*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்*

## காணி தேவை

ஒரு பரப்பிலோ அல்லது ¾பரப்பிலோ அமைந்த வீடோ அல்லது வெற்றுக் காணியோ யாழ் நகரில் விலைக்குத் தேவை. (தரகர் தேவையில்லை) (CS 28115) (14.17)

**076 993 5031**

## மணமகள் தேவை

1989 ஆம் ஆண்டு. யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 23801)(11.17)

**078 191 7368**

## பணிப்பெண் தேவை

வயதான பெண்ணைப் பார்ப்பதற்குப் பணிப்பெண் தேவை.

**077 627 7332** (CS 24216) (11.17)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1¼ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (CS 23586) (14.17)

**077 614 6434**

## மணமகள்கள் தேவை

- யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1977 பூரம் 8இல் செவ்வாய். பிரான்ஸ் PR 30 பாவம்
- 1986. சதயம் 7இல் செவ்வாய். அமெரிக்காவில் என்ஜினியர்.45 பாவம்.
- 1991 ரேவதி. 2 செவ்வாய்.UK PR 13 பாவம்.
- 1985 விஷாகம். 8இல் செவ்வாய் UK PR 39 பாவம்

**077 078 3832** (ANE/759) (11.17)

## வேலையாள்கள் தேவை

நன்கு அனுபவமுள்ள பேக்கரி பாஸ் மற்றும் ஆட்டோ சாரதிகள் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம்**
கலைவாணி வீதி.பொற்பதி றோட்.கொக்குவில் யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

யாழ்.அராலி அம்மன் வீதி. பிள்ளையார் கோயிலடியில் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. (CS 24095) (14.17)

**011 208 1687/076 721 8968/ 077 301 7723**
இல.48-3/4,W.A.சில்வா மாவத்தை, கொழும்பு - 06

## வேலையாள் தேவை

**நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள சுவி என்டப்பிறைசஸ் நிறுவனத்துக்குப் பணவசூலிப்பாளர் தேவை.**
வயது எல்லை 20 - 40 வயதுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும். (CS24162)(11.17)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
**077 739 5010, 076 652 0074**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம். 12.07.1985 பரணி நட்சத்திரம். கி.பா 22. சூரி. செ.6 இல் குற்றமில்லை. சொந்த நிறுவனம் நடத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**குறிப்பு:-** சூரி.செ. உள்ள ஜாதகம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**077 316 4769, 077 197 1667**




நான் என்றும் அருகில் இருக்க வேண்டும் என்று எனது மகள் விரும்புவதை நான் அறிவேன். என்னால் இயலுமான வரையில் அவளை நான் நன்றாக பராமரிக்க வேண்டும். அதனாலேயே எனது குடும்பத்துடன் ஆரோக்கியமான நீண்ட மற்றும் சிறந்த வாழ்விற்கு AIA இன்ஷுவரன்ஸ் உதவி செய்யும் என்று நம்புகிறேன்.

AIA இன்ஷுவரன்ஸ்

CELEBRATING 100 YEARS

AIA HEALTHIER, LONGER, BETTER LIVES

ஓய்வூதியம், ஆரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி
அழையுங்கள் 0112 310310



ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்


யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.108,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS 375

# மரண அறிவித்தல்



# சிவலிங்கம் வேதாரணியம் (பெரியண்ணா)

## (உரிமையாளர் - Yogas Transport)

யாழ். கைலாசபிள்ளையார்கோயிலடியைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்டசிவலிங்கம்வேதாரணியம் அவர்கள் 21.03.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் (லிங்கம் மில்) பொன்மணி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், சிவதக்சினி (லண்டன்), சுவேந்திரணி (சூட்டி - கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் ,பிரபாகரன், ஶ்ரீராஜயோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுந்தரலிங்கம், சண்முகலிங்கம் (லிங்கம் Bake House), நாகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலைவாணி, வசந்தி, சரவணபவன், சிவபாதநாதன், காலஞ்சென்றவர்களான புஸ்பவதி, திலகவதி மற்றும் குகனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வாமதேவன், நாகராசா மற்றும் சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகலனும், அமித்ரா, அனித்ரா, கஜனி, ஹரினி, ஹம்சினி, ஹரிஜன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சுந்தரலிங்கம்** (சகோதரன் - சின்ன அண்ணா - +94 21 222 7411)

## மரண அறிவித்தல்கள்

# பாக்கிய நேசர் ஜெகசுகன்

(யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்- மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஆசிரியர் - அக்குரணை ஸாஹிரா தேசிய பாடசாலை)



வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநேசர் ஜெகசுகன் 20.03.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநேசர் (கமநலசேவை தலைவர் - கிளிநொச்சி) பகவதி (பிரதம தாதி உத்தியோகத்தர் - கிளிநொச்சி) தம்பதியரின் அன்பு மகனும், ஜெகந்தினி (ஆஸ்திரேலியா - முன்னாள் சைவ மங்கையர் கழகம் - கொழும்பு), சுகந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா, சாமுவேல் முத்துக் கந்தையா, மார்க்கிரட் பாக்கியம் ஆகியோரின் பேரனும், முருகதாஸின் (ஆஸ்திரே லியா) அன்பு மைத்துனரும், பராசக்தி புண்ணிய மூர்த்தி (கனடா), பரமேஸ்வரி (கனடா), பத்மாவதி பாலசுந்தரமூர்த்தி, பரிமளம், காலஞ்சென்ற பாக்கிய ஜீவர் மற்றும் பாக்கியராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், பரமகுருநாதன், பிறேமா (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள்- கனடா) காலஞ்சென்றவர்களான பாக்கியரஞ்சிதம், பாக்கியஜெயம் மற்றும் புஸ்பதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11, உடையார் லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 869 4060**



# திருமதி மாணிக்கம் கந்தையா

**தோற்றம்** 06.10.1935 **மறைவு** 20.03.2019

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், 33, பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் கந்தையா 20.03.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மாரிமுத்து மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், குணேஸ்வரி (திருகோணமலை), சியமளா (ஜேர்மனி), றோகினி (கனடா), சிறீறஞ்சினி (பிரான்ஸ்), பாஸ்கரன் (ஜேர்மனி), மாலினி (ஜேர்மனி), பாலினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசோதிராஜா (திருகோண மலை), லோகநாதன் (ஜேர்மனி), செல்வஞானம் (கனடா), சிறீகிரிதரன் (பிரான்ஸ்), சதீஸ் குமாரி (சசி - ஜேர்மனி), விபுலானந்தன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (வெள்ளை - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லக் ஷிக்கா, தர்ஷிக்கா, பிரசாந்தன், வினோத், யகீரன், அனோஜன், சோபிக்கா, நிரோஷிக்கா, செந்தூரன், செலின், சரன், பிறிஸ்ரிஜா, பிறிஸ்ரிஜன், விஜய், பிரியங்கா, நிவேதா, சரண்ஜீவ், நஸ்மிக்கா, நிசானிக்கா ஆகியோரின் பேர்த்தியும், சியோரா, சிசிக்கா, ஆரியன் ஆகியோரின் பூட்டியும், கந்தையா (திருகோணமலை), காலஞ்சென்றவர்களான செல்லையா, மாரிமுத்து, வள்ளி ஆச்சி, நாகமணி, அப்புகுட்டி, மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னுத்துரை, அப்புத்துரை, அன்னம், சரஸ்வதி, நவரெட்ணம், நடராசா, ஐயாத்துரை மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**33, பேக்கரி ஒழுங்கை,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/24196)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



# திருமதி தங்கம்மா (அன்ரா) விசாகநாதன்

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா விசாகநாதன் 22.03.2019 வெள்ளிக்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசர் - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆ.க.வல்லிபுரம் - தையல்நாயகி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற விசாகநாதனின் மனைவியும், காலஞ்சென்றவர்களான நற்குணராசம்மா, நவரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ப.கேதீஸ்வரநாதன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), வ.தில்லைநாதன் (கணக்காளர்), சண்முகசோதி சேதாம்பிகை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மைத்துனியும், சிவபாலன், சிவகுமார், சிவமலர் ஆகியோரின் சிறிய தாயாரும், கருணாகரன், கஜதீபன், கேதீஸ்வரன், கஜேந்திரன், தவரூபன் ஆகியோரின் மாமியாரும், திவாகரன், கீதாஞ்சலி, நீராஞ்சலி, ஆதீஷன், அதுசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பத்தகலட்டி (சிறுப்பிட்டி மேற்கு) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி மேற்கு,**
**நீர்வேலி.**

(CS/24225)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கு.கஜேந்திரன் -077 714 8161, செ.சிவபாலன்-076 214 5347**



**தோற்றம்** 28.04.1950 **மறைவு** 19.03.2019

# தாமோதரம்பிள்ளை சிவலிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் உடுவில் மற்றும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவலிங்கம் 19.03.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், தேவமனோகரியின் அன்புக் கணவரும், செல்வராணி, கமலாதேவி, விமலாதேவி, சோதிராணி, பஞ்சலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கீதாஞ்சலி, கோணேஸ்வரன், கிருசாந்தினி, தேவகி, சிவகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன், ஞாணலிங்கம், மயூரன், குபறஜனி, மதுஜா ஆகியோரின் மாமனும், தரங்கிதா, கவிராம், சர்பவி, தர்ஷன், தர்ஷிகா, சாம்பவி, ரிஷாந், ஹரிஷன், கார்நிகா, தஷ்வீன், பிரகவீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (26.03.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொட்டடி, உடுவில்,**
**சுன்னாகம்.**

(cs.24209) (13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த 5' 6" உயரமான திருமணமாகாத விஞ்ஞானப் பட்டதாரி அரச உத்தியோக தீய பழக்கங்கள் எதுவுமற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு 1980 இற்கும் 1988 இற்கும் இடையில் பிறந்த A/L படித்த அல்லது அதற்கு மேல் கல்வித்தகைமையுடைய திருமணமாகாத செந்தளிப்பான, அழகான, நற்குணமுள்ள குடும்பப்பாங்கான மணமகள் தேவை. ஓரளவு பருமன் எனினும் ஏற்கப்படும். (CS 24223) (4,17)

**076 667 8996**

## வைத்தியர்கள் தேவை

**வவுனியாவில் ஆரம்பிக்கப்படவுள்ள பிரபல வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர்.**

- MBBS வைத்தியர்கள்
- RMP's வைத்தியர்கள்
- AMP's வைத்தியர்கள்
- வேலை அனுபவமுள்ள சான்றிதழ்கள் பெற்ற வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள்.

**சிறந்த வேதனம் வழங்கப்படும்.(நேரில் பேசி தீர்மானிக்கலாம்)**

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
முகாமைத்துவப் பணிப்பாளர்,
ஆர்கழி தனியார் வைத்தியசாலை, வவுனியா.

தொடர்பு: **076 665 8562**

(IN 9717) (4,17)

Bergen Hindu Sabha — Bergen Hindu Sabha




## சிவாச்சாரியார் (குருக்கள்) தேவை

நோர்வே ( Norway ) பேர்கன் ( Bergen ) இல் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலய குருக்களாகப் பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்**

- சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- சிவாகம முறைப்படி சகல அபிஷேகங்கள், பூஜைகள் மற்றும் அனைத்துக் கிரியைகள் தனித்துச் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சாத்துப்படி மற்றும் மடப்பள்ளி வேலைகள் தனித்துச் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- 35 வயதுக்கு மேற்பட்டவராகவும் திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
- சமய சொற்பொழிவாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்காலம் ஆகக் கூடியது இரண்டு வருடங்கள்.
- தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
- ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடைபெறுகின்றது.
- தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 05.05.2019 இற்கு முதல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
- மேலதிக விவரங்களுக்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம்**

**குணம் - 0047 922 23396, சதா - 0047 941 46069**

**Bergen Hindu Sabha**
**Storetveit Veien 05, 5067 Bergen,Norway.**

(CS/24164)(11,17)

## யாழ்நகரில் பெறுமதிமிக்க இரண்டு சொத்துகள் ஏல விற்பனைக்கு

DFCC BANK Keep Growing

**01. ஈச்சமுடை வீதி வார்டு 06**

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் மற்றும் பேஸ்டியன் சந்தியிலிருந்து 1.5 மைல் தொலைவில் அமைந்துள்ள நீள்சதுர அமைப்புடைய வதிவிட காணி - 49.06 பேர்ச்சஸ்.
மற்றும்

**02. தாவடி சந்தியிலிருந்து 950 மீற்றர் தொலைவில் வன்னியசிங்கம் வீதியில்**

மூன்று படுக்கையறைகள், காரியாலய அறை, திறந்த சாலை மற்றும் வேறு வசதிகளுடன் கூடிய வீடு.
(காணி - 38 பேர்ச்சஸ், கட்டிடம் - 2020 சதுர அடிகள்)

உங்கள் ஏல விலையை மூடப்பட்ட தபால் உறையிலிட்டு 29.03.2019 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்பாக பின்வரும் DFCC வங்கிக் கிளைகளில் சமர்ப்பிக்கவும்.

கடித உறையில் சொத்து இலக்கத்தைக் குறிப்பிட்டு மனுக்களை விண்ணப்பிக்கவும்.
- இல. 141, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
- இல. 30, தங்கஸ்தான் பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
- இல. 73, W.A.D. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு - 02.

உங்களுடைய விலைகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ DFCC வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

மேலதிக தகவல்களுக்கு:
DFCC வங்கி தலைமைச் செயலகம், கொழும்பு -02.
0112371371, 0112371448 (பிரதீப்)/ 0112371449 (அபராஜிதன்)

## உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

# நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

12 MONTHS WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty






**நீங்கள் அருந்தும் நீர் Yarl Smart Water Filter நீர் ஆக இருந்தால் நீங்களும் SMART**

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில் வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருக்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

# Yarl Smart Water Solution (Pvt) Ltd

**Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410**

**No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.**

## உற்பத்தி மேற்பார்வையாளர் (ஆண்)
## PRODUCTION SUPERVISOR (MALE)

யாழ் நகரில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற அலுமினியத் தொழிற்சாலைக்கு உற்பத்தி மேற்பார்வையாளர் ஒருவர் உடனடியாக தேவை.


- வயது எல்லை 20-40 ஆண்டுகள்
- கணினியறிவு அவசியம்
- ஆகக் குறைந்தது ஒரு வருட முன்னனுபவம்.

சம்பளம் மற்றும் சலுகைகள் அனுபவத்திற்கும் தகைமைக்கும் ஏற்ப பேசி தீர்மானிக்கப்படும்.

**உங்கள் சுயவிபரக்கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு 14 நாள்களுக்குள் அனுப்பவும்.**

**jayakanth.dollar@gmail.com**

## மணமகள் தேவை




பிறப்பு - 1985.07.07
நட்சத்திரம் - சதயம்
உயரம் - 5' 6"
கிரகபாவம் - 42
தகைமை - பொறியியலாளர் அரச தொழில்
எதிர்பார்ப்பு - தகுந்த மணமகள் தேவை

**077 025 5934/077 348 6008**

## CARDS CORNER

100க்கு மேற்பட்ட
**திருமண அழைப்பிதழ்கள்**
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்
**10%**
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் வீதி சந்தி)
077 662 2981 021 222 8882

### விற்பனைக்கு

3 DOOR BOTTLE COOLER
(சிறந்த பராமரிப்பில் உள்ளது)
(CS 24211) (14.07)
**077 078 0240/071 904 1277**

### வீடு வாடகைக்கு


மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலைக்கு அருகில் புத்தூர் வீதி. மீசாலை வடக்கில் வீடு வாடகைக்குண்டு.
(CS 24213) (14.07)
**077 078 0240/071 904 1277**

# மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்

**"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தப்பை கல், சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."**



மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கும் உயர்தர தீர்வினை வழங்கி வருகின்றது.



**இலகு தவணை கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்**
மாதம் 3642/=லிருந்து
(நிபந்தனைக்கு உட்பட்டது)

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna.
HOTLINE: 075 331 3310
Tel: 021 222 6888


# StarRest திருமண மண்டபம்

Star Rest GRAND WEDDING HALL & LUXURY APARTMENT ROOMS

கிளிநொச்சி நகரில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் அதிநவீன நுட்பத்துடன்முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமணமண்டபம் luxury apartment Rooms மற்றும் ரெஸ்ரோறன்ற் உதயமாகியுள்ளது நிகழ்வுகளுக்கான
**முற்கூட்டிய பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள் ஒருமுறை விஜயம் செய்து பார்வையிடுங்கள்**



- **திருமண மண்டபம்**
- **Familyரெஸ்ரோறன்ற்**
- **சமைப்பதற்கான வசதிகள் கொண்ட Rooms**
- **எழில் மிகு கிளிநொச்சியின் மாலைக்காட்சியை ரசிப்பதற்கான மேடைத்தளத்திலுள்ள BBQ Roof Top ரெஸ்ரோறன்ற்**
- **இலவச Wifi வசதிகள் D/J Dmx தொழில்நுட்பம்**
- விஸ்தரிக்கப்பட்ட வாகன தரிப்பிடம்
- **மணமகள் அலங்காரம்**
- **இந்தியன். வெஸ்டன் சைனிஸ் உணவுகளுடன் கூடிய திருமணம் மற்றும் சகல நிகழ்வுகளுக்கும் அலுவலக கலைந்துரையாடல் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.**



160th Mile Post
5th Canal Lane
A9 Road, Paranthan.
0212280555
0772315521
www.starresthotel.com
Star Rest Hotel

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா? ▾ ஊளைச் சதையா?
- உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- வயிற்று கோளாறா? ▾ வயிறு,மார்பு குறைக்க வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்ற கவலையா?

(பால்மா, குளிசை, கிறீம்)

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் குளிசை என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாள்களில் அற்புதமான அழகை காண்பீர்கள்.**

**221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
**077 210 6155**

(CS 23792/15/17)

## பணியாளர்கள் தேவை

**யாழ்.நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.**

- கணக்கு சம்பந்தமான வேலை செய்வதற்கு (ஆண் / பெண்)
- கணக்கு உதவியாளர்கள் ( ஆண் / பெண்)
- நகை விற்பனையாளர்கள் / உதவியாளர்கள் ( ஆண் / பெண்)

**தங்கி நின்று வேலை செய்பவர்கள் (ஆண்கள் மட்டும்) விரும்பத்தக்கது.**
**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

ஆர்வம் உள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் கிழமை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 10 மணிக்குள் நேரில் வரவும்.

**நியூ மைதிலி ஜ்வலறிஸ்**
**38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(IN/9718)(11,17)

## யா/இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

**காலம்** - 04.04.2019 - வியாழக்கிழமை
**நேரம்** - காலை 8.00 மணி
**இடம்** - சைவ மகாஜன மண்டபம் - சரஸ்வதி கலையரங்கம்.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/இணுவில் மத்திய கல்லூரி.**

(IN/9716)(11,17)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் திருமதி சாருலதா சிறீஸ்குமார் அவர்களின் மாமியார்

**மண்டலேஸ்வரி கதிர்காமத்தம்பி**

20.03.2019 அன்று காலமானார். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம்.**

(CS 24190) (4,17)

## கண்ணீர்க் காணிக்கை



முன்னாள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஊழியரும் தற்போதைய ஆசிரியருமாகிய

**பாக்கியநேசர் ஜெகசுகன்**

அவர்கள் கடந்த 20.03.2019 புதன்கிழமை சிவபதமடைந்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பிரதி ஆணையாளரும், ஊழியர்களும்.**
**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(CS/24207)(11,17)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் புதிய நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி (Hesence) விற்பனைக்கு உண்டு. முற்கூட்டி தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு-077 978 9752**

## Distributors Wanted for Wear-Well Garments

We are looking for business partners to distribute our textile products in Northern and Eastern Provinces.

- Stocks are delivered with attractive commission, credit facilities, target incentives and special cash discounts
- A trained Sales Rep is provided by the Company
- Need a Bank Guarantee for minimum Rs. 2 Million, ware house facilities, a delivery vehicle and driver/cash collector

If you are interested to become the Agent/Distributor for a prestigious textile brand, please send your application to the following address.

The Managing Director, Wijeweera Garments Private Limited, No.346, Galle Road, Matara.

For any further information, please contact Thejan on 070-2035940.

wear-well 60 Years of Excellence

## Invitation to Bid

The Alumni, Faculty of Medicine, Jaffna, invites sealed bids from eligible bidders for development of application software for the E- administration of the Faculty of Medicine, University of Jaffna.

**Deadline for application:**
08th April 2019, 4 pm

**Further details can be obtained at:**
*http: www.med.jfn.ac.lk/index.php/calling-quotations-for-mis-system/*

## நிர்வாக இயக்குனர்

கல்வித் திறமையும் சமூகசேவை மனப்பான்மையும் உள்ள இந்து மதத்தை சார்ந்த பெண்மணி தேவை.

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மஹாகாளி அம்மா ஆலயத்தின் முக்கால பூஜைகளையும் உற்சவங்களை ஆகம முறைப்படி நிர்வகிப்பதோடு, ஆலயத்தினை மையமாகக் கொண்டு ஆலயத்தின் அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்குரிய பணியாகும்.

இயக்கச்சியில் இருந்து 20 கி.மீ. சுற்று வட்டாரத்தில் இருந்து விண்ணப்பிப்பது விரும்பத்தக்கது.

தகுந்த ஊதியத்துடன் முகாமைத்துவ சபையின் அங்கத்துவமும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

பெயர் : Mr.N.Sivakumaran
மின் அஞ்சல் : md@isfindustries.com
தொலைபேசி : 0772078455 / 077 207 8451
அல்லது தபாலில்: 3/4, Rockwood Place, Colombo-07.

## விற்பனைக்கு

301 xxxx கார், 40 xxxx லெறி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 077 005 0344

## வேலைவாய்ப்பு

**Technical Officer** (Civil) (HND, NCT - Or Equivalent with Building Experience)
**Quantity Surveyor** (HND (QS), NCT (QS) - Or Equivalent with Minimum 1 Year experience)

**தொடர்பு- 077 712 0945**
**Fax - 0212213663**
**Email: vacancynsc@gmail.com**

## தேவை

இந்து 1985 பூரட்டாதி நட்சத்திரம் ஆஸ்திரேலிய வதிவுரிமை பெற்றுத் ( Australian PR) தொழில் புரியும் Electrical & Electronic Engineerமணமகனுக்கு மணமகள் தேவை.

**075 882 4998 / 077 506 3076**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை நாவலடியில் முன்பு Army Camp இருந்த இடத்தில் பின்புறமாக 5 1/2 பரப்பு (நெற்பரப்பு) காணி விற்பனைக்கு. பரப்பு 3 இலட்சம்

**தொடர்பு:-075 544 0503**

## சாரதி தேவை

நிறுவனம் ஒன்றிற்கு A தர அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி ஒருவர் தேவை. வயது 30 - 45

**தொடர்பு-075 227 7770**

## வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களிற்கு ஏற்ற வீடு குறுகிய கால வாடகைக்குண்டு.

**077 788 7360**

(ACO 400) (14,17)

## விற்பனைக்குண்டு

பழைய தீராந்திகள், பனைமரங்கள், வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

**076 725 7280**

(CS 24236) (4,17)

## காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறையில் உலகுடைய பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் ஒரு காணித்துண்டு விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-011 2364203**

## கடை குத்தகைக்கு

கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள சாப்பாட்டுக் ஹெட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.

**தொடர்பு-077 457 9055**

## வான் குத்தகைக்கு


Sales வாகனம் குத்தகைக்கு தரப்படும்

**தொடர்பு- 077 514 9822**



# மணிவிழா நாயகனை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations



Congratulations

## திரு.சண்.தயாளன்

(யாழ் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்)

விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்து பல மாணவர்களை சாதனையாளர்களாக்கிய பெருமைக்குச் சொந்தக்காரரான யாழ் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சண். தயாளன் அவர்கள் கடந்த 04.03.2019ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார். இவரைக் கௌரவிக்கும் மணிவிழா நிகழ்வு இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஞான வைரவர் ஆலயத்தில் இருந்து இலங்கை வேந்தன் கலைக் கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மணிவிழா நாயகனை பாராட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

**இந்நிகழ்வில் கல்விச் சமூகத்தினர், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் கலந்து மணிவிழா நாயகனை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**மணிவிழா குழு**

Congratulations




இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச ஊழியத்தின் வெற்றிகரமான

41வது சுவிசேஷ மாநாடு!

மார்ச் 29 30 31 மாலை 05:30

**மத்திய கல்லூரி மைதானம்**

## கிளிநொச்சி

பிரியமானவர்களே !

நோய், கண்ணீர், வேதனை, பிசாசின்பிடி, சூனியம் மாந்திரீக கட்டுகள், பரம்பரை சாபங்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று, மெய்யான சந்தோஷம், சமாதானம், நிம்மதியுள்ள வாழ்வை பெற, இது ஓர் அரிய சந்தர்ப்பம்... இன்று மனிதன் நிலையற்ற வாழ்விலே, உலக செல்வம், உயர் நிலையை அடைய, இரவு பகலாக பிரயாசப்பட்டு, பாடுகளினால் மூடப்பட்டு, நிம்மதியை, சுகத்தை இழந்து, சகலவற்றிற்கும் மேலாக, தன் ஆத்துமாவை இழந்து காணப்படுகிறான்... இதிலிருந்து விடுதலை, மெய்யான சந்தோஷம், சமாதானம், ஆசீர்வாதமான வாழ்வை தர, சகல இன, மத, பாஷை ஜனங்களுக்கும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, மனுரூபமாய் மனிதனை தேடி வந்தார். பாவ, சாபத்திலிருந்து விடுதலை பெற்று, பரலோக வாழ்வை அடைய பூமிக்கு கொடுக்கப்பட்ட இரட்சகராகிய இயேசுவின் நாமத்தினால், தெய்வத்தின் திருப்பாதத்தில் குடும்ப சகிதம் கலந்து நன்மைகளையும், ஆசிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்

கலாநிதி. M.R. இராஜேந்திரம் / கலாநிதி. C.V. இராஜேந்திரம்

**41வது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு !**

**மார்ச் மாதம் 25 ம் திகதி முதல் 30ம் திகதி வரை தினமும் காலை 9.00 முதல் பகல் 2.00 மணி வரை, ... மண்டபம், கிளிநொச்சி.**

... இலவசம்

## பயிற்சியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான

(TRAINEE ENGLISH TEACHER) **வேலைவாய்ப்பு**

- பயிற்சியின் பின் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தும் முகமாக ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.
- வயது 18 - 28க்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*தூர பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

நேர்முகப்பரீட்சைக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS ஊடாக அனுப்பவும்.

**0785 880 680**

INTERNATIONAL TEACHER TRAINING ACADEMY

K & K Ads

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=


357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472

esprintersjaffna@gmail.com

## நீங்காத நினைவுகளுடன் சிவதர்ம அஞ்சலி

21ஆம் ஆண்டு | 26ஆம் ஆண்டு





**அமரர் மயில்வாகனம் சிவநாதன் (JP)**
(கொல்லங்கலட்டி)
(நாடாளுமன்ற உரைபெயர்ப்பாளர்)

மண் மகிழ 05.10.1938
மண் நெகிழ 10.10.1997

**அமரர் சிவநாதன் தர்மவாணி (அமுதா)**
(கொல்லங்கலட்டி)
(யாழ்.பல்கலைக்கழகம்)

மண் மகிழ 27.05.1969
மண் நெகிழ 18.03.1992

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்குகளே!
சிவநாதன் எனப்பெயர் கொண்டு சிறப்புடன் வாழ்ந்தவரே!
தர்மவாணி எனப் பெயர்கொண்டு தர்மத்துடன் வாழ்ந்த செல்வமே
நல்லவர்கள் நாட்டில் நெடுங்காலம் இருப்பதில்லை
மாண்டவர்கள் சிலபேரை மறக்கவும் முடியவில்லை
நீங்கள் உதிர்த்த வார்த்தைகள் மறையவும் இல்லை
உங்கள் துயரமும் எங்களை விட்டு அகலவுமில்லை
முடியாதெல்லாம் அந்த முருகனுக்கே சமர்ப்பணம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.C.லேன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

குடும்பத்தினர், சிவநாதன் கண்மலர்

(வாழ்வகத்தில் மதிய உணவு வழங்கப்படும்)

## மரண அறிவித்தல்

## திருமதி வர்ணலக்சுமி சின்னத்துரை



யாழ். ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி வர்ணலக்சுமி சின்னத்துரை 23.03.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - பூரணம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்துரையின் பாசமிகு மனைவியும் சிவனேஸ்வரன்(நோர்வே), காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் சிவகாந்தரூபி(இந்தியா), சுலோசனாதேவி (நந்தா - நோர்வே), சியாமளா (இலங்கை), சிறிறஞ்சன் (மலேசியா), சிறிகந்தராசா(இலங்கை), சிவமலர் (பிரித்தானியா), காலஞ்சென்ற கண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான ஞானமணி, விஜயலட்சுமி, கிருஸ்ணபிள்ளை, சிற்றம்பலம், சிவக்கொழுந்து மற்றும் செல்வநாயகம்(இலங்கை), குணலட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி(நோர்வே), சிவதாஸ்(இலங்கை), விஜயராசா (இந்தியா), ஜெயதேவன் (நோர்வே), குலதேவன் (இலங்கை), சத்தியபிறேமா (இலங்கை), மதியழகி (மதி - இலங்கை), அருள்மாறன்(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிறிறஞ்சன், சியாமளா, சிவதீபன், சாரங்கி, கிருசாந், துலஸ்திகன்(நோர்வே), நிலானி(பிரான்ஸ்), லக்சினி, சுகந்தன், பிரியனி(இலங்கை), Dr. சுகடாஸ், சுரேக்கா(இந்தியா), யோகின், யோகிதா, ஜெனகன், சினேகா, சுமிதா, சுபிதா(இலங்கை), நிர்மலன், நிறோசன்(பிரித்தானியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூஜா, தருன், நிதுன், கார்த்திக், சாந்தி(நோர்வே), தனுஸ்கா(இலங்கை), சாதனா, அச்சு, சாய்வர்சன்(இந்தியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 03:00 மணியளவில் அரசடிவீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 04.00 மணியளவில் பொக்கணை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

சிவனேஸ்வரன் - மகன் : +4746514945 / நந்தா - மகள் : +4798447172
தேவன் - மருமகன் : +4796655555/ சியாமளா - மகள் : +94761737364
மலர்(வவா) - மகள் : +447588214951/ ராசன் - மகன் : +94767471003
வீடு : +94212054714

**S.K.Broking**
Re Ds/NAL/1442

### காணிகள் விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலி ஆடியபாதம் றோட், இராமசுவாமி பரியாரியார் சந்திக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணியும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் 2 1/2 பரப்புக்காணியும் றோட்டுடன். நல்லூர் முன்வீதியில் முருகேசர் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணியும், கல்வியங்காடு 3 ம் கட்டையடியில் 6 பரப்புக்காணியும் றோட்டுடனும் மற்றும் கல்வியங்காடு 3 ம் கட்டையடியில் 2 பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு-077 193 3490, 077 4613884**

உதயன்
விளம்பரதொடர்புகளுக்கு
advt@uthayan.com

## மரண அறிவித்தல்கள்

# நவரட்ணம் செல்வராசா

**(ஓய்வு பெற்ற சுகாதார உத்தியோகத்தர்)**



பிறப்பு 08.09.1949 இறப்பு 23.03.2019

கட்டுவன் தெற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் சேனாதிராஜா வீதி தம்பாலை அச்சுவேலியை வசிப்பிட மாகவும் கொண்ட நவரட்ணம் செல் வராசா நேற்று (23.3.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் நாகபூரணத்தின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதமலர், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பேரின்பமலர், பேரின்பமூர்த்தி ஆகி யோரின் பாசமிகு சகோதரரும். இரகுநாத், சங்கீதா, ஜசிந்தா, ஹரிஷ் நாத் (ஹரிஷ் ஹெட்டல் புறாப்பொறுக்கி இமையாணன்) ஆகியோரின் அன்பு தந்தையும், சாந்தகுமாரின் அன்பு மாமனாரும், ஜஸ்மிகா, யதுஸ்கா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை10மணியளவில்அன்னாரின்இல்லத்தில்நடைபெற்றுதகனகிரியைக்காக தம்பாலைஇந்துமயானத்திற்குஎடுத்துசெல்லப்படும்என்பதைஉற்றார்உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 152 8340**



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

# கந்தையா செல்வராசா

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா கடந்த(22.03.2019)வெள்ளிக்கிழமைஇறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் தவயோகராணியின்பாசமிகுகணவரும்கிருபானந்தன் (பொறியியலாளர்), நாகராஜன் (பொறியி யலாளர்), சதானந்தன் (பொறியியலாளர்), பாலச்சந்திரன் (பொறியியலாளர்), ஜெயானந்தன் (விரிவுரையாளர் தொழிநுட்பவியல்கல்லூரி - யாழ்ப்பாணம்) , செல்வச்சந்திரன் (பொறியியலாளர்), செல்வரஞ்சன் (பொறியியலாளர்), அருட்குமரன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜொவிற்றாமேசி சசிரேகா, திலகவதனி, யாழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், காரைநகர்), சபிதா, தனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஞ்ஜனன், அகல்யன், அஞ்ஜயன், பிரவீன், சர்வீன், சாண்டில்யன், நிறஞ்சனா, ஆகித்யன், ஆரபி, அஞ்ஜிதன், அபினா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரிகைகள்இன்று(24.03.2019)ஞாயிற்றுக்கிழமைநண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி, வடலியடைப்பு**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்குடும்பத்தினர்.**
**077 9516245**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி தவமணி இராசரத்தினம்



*திதி : 24.03.2019*

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை எமது சோகம்
உங்கள் நீங்கா நினைவுகளுடன்
என்றும் வாழ்கின்றோம்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (24.03.2019) முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**101, கச்சேரி நல்லூர் வீதி,**
**மூத்த விநாயகர் கோயிலடி, நல்லூர்.**

(CS 23783)(14,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

# துரைராஜசிங்கம் யோகலிங்கம்

**(ஓய்வுபெற்ற கல்வித் திணைக்கள உதவியாளர்)**



நல்லூரைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாக வும் கொண்ட துரைராஜசிங்கம் யோக லிங்கம் (ஓய்வுபெற்ற கல்வித் திணைக் கள உதவியாளர்) நேற்று (23.03.2019) சனிக்கிழமை யாழ்ப்பாண்த்தில் இறை பதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - நாகம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான சிவப்பிரகாசம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற வசந்தகுமாரி யின் (ஓய்வுபெற்ற உப அதிபர்) அன்புக் கணவரும், தர்மிலாவின் (நோர்வே) அன்புத் தந்தையும், சரவணாவின் அன்பு மாமனாரும், அகரனின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம், யோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமாரி, திருஞானகுமார், இராச குமாரி, ஜெயக்குமார், சந்திரகுமாரி, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாயில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி,**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

(CS/24230)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தயாளன் - 077 977 3290**

# சின்னத்துரை ராஜரத்தினம்



பிறப்பு 02.08.1938 இறப்பு 20.03.2019

யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாக வும், வண்ணார்பண்ணை, கொழும்பு, ஓமான், கனடா Markham ஆகிய இடங் களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை ராஜரத்தினம் கடந்த 20.03.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் . காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கமுத்து தம்பதிகளின் கனிஸ்ட புத்திரரும், காலஞ்சென்றவர் களானமுத்துகுமார் - பொன்னம்மா தம்பதி களின் அன்பு மருமகனும், சிவசக்தியின் (பபா) அன்புக் கணவரும், அகல்யா (கனடா), வத்சல்யா (பிரித்தானியா), சதீசன் (Engineer - பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்க ளான நாகராசா, வீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபால் (கனடா), சிறீகாந்தன் (பிரித்தானியா), இந்துமதி (பிரித்தானியா) ஆகியோரின் அருமை மாம னாரும், தயாளகுமாரின் (சுவிஸ்) அன்பு மைத்துனரும், Dr.சகிஷ்னன் (MD), நிதுஷா (கனடா), Dr.சிந்தியா (M.B.B.S) ஹரிசன் (கோபி - பிரித்தானியா), அபிதா (பிரித்தா னியா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி றோட்,**
**மானிப்பாய்.**

(C/9352)(11,17)

**தகவல்: வீரசிங்கம்**
**குடும்பத்தினர்**

**சதீசன் - +4420 854 02091**

# விபத்தில் இளைஞன் சாவு

மருதங்கேணி,மார்ச் 24

விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனையைச் சேர்ந்த 21 வயதுடைய முருகுப்பிள்ளை அஜந்தன் என்ற இளைஞனே உயிரிழந்தார்.

பருத்தித்துறை பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் இவர் படுகாயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைச் பெற்று வந்தார். இந்நிலையிலேயே அவர் உயிரிழந்தார். (ஜ-160)

## யார்...

அதேவேளை, அரசையோ அல்லது எமது இராணுவத்தையோ பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் கொண்டுபோய் எவராலும் நிறுத்தவும் முடியாது. இவ்வாறு அடித்துக் கூறினார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றினார். அவரது உரையில், இலங்கை அரசு மூன்றாவது தடவையாகவும் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு இணங்கியுள்ளது. அவர்கள் அதனை மறுக்க முடியாது. பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். நிறைவேற்றத் தவறினால் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையைக் கொண்டு செல்வோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

பன்னாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அரசமைப்பை மதித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடக்க வேண்டும். எமது இராணுவத்தை பன்னாட்டு விசாரணை ஊடாக அல்லது பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடகத் தண்டிக்க எமது நாட்டின் அரசமைப்பில் இடமில்லை.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நாம் தீர்த்துவைப்போம். அவர்களுக்கு அரசியல் தீர்வையும் நாம் வழங்குவோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீடுகளையும் வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

போரின்போது இரு தரப்பினரும் தவறிழைத்துள்ளார்கள். அதற்காக நடந்து முடிந்த சம்பவங்களை நாம் திரும்பவும் கிளறினால் மீண்டும் வன்முறைக்கே வழிவகுக்கும்.

நாட்டின் நல்லிணக்கம் கருதி அனைவரும் ஓரணியில் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். இன ஒற்றுமையைப் பாதிக்கும் நடவடிக்கைளுக்கு இங்கு இனி இடமில்லை.

ஐ.நா. தீர்மானத்தின் அனைத்துப் பரிந்துரைகளையும் எம்மால் நடைமுறைப்படுத்த முடியாது. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு இலங்கையில் இடமில்லை. இதனை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அயலுறவுத் துறை அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்- என்றார். (ஒ.5,22)

## இலங்கையை...

தொடர்பான வாக்குறுதியை இலங்கை புதுப்பித்துக் கொண்டுள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரிவு வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

'நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான வாக்குறுதியை இலங்கை புதுப்பித்துக் கொண்டுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான, செழிப்பான எதிர்காலத்தையும் பெற முடியும்' என்று அந்த கீச்சகப் பதிவில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

## சாவு...

கிலி, தோடு மற்றும் உந்துருளி ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அல்லைப்பிட்டிக்கு அண்மையாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் அளவெட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் குடும்பத் தலைவரான நாகராசா நிதர்சன் உயிரிழந்திருந்தார்.

அளவெட்டியிலுள்ள அவரது வீட்டில் உறவினர்கள் நின்றிருந்தனர். நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 1 மணியளவில் இரண்டு உந்துருளிகளில் 4பேர் முகங்களை மூடிக் கட்டியவாறு வந்துள்ளனர். அவர்கள் வாள் மற்றும் கைக் கோடாரியுடன் வீட்டுக்குள் நுழைந்தனர்.

வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி ஒன்றரைப் பவுண் சங்கிலி, அங்கிருந்த பெண்கள் காதுகளில் அணிந்திருந்த தோடுகளைப் பறித்தெடுத்தனர். அங்கிருந்த ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர். அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது வீட்டின் வெளியே நின்றிருந்த உந்துருளியின் திறப்பைத் தருமாறு கொள்ளையர்கள் கேட்டுள்ளனர். திறப்பைக் காணவில்லை என்று வீட்டார் கூறியதும், அவர்களில் ஒருவரது கழுத்தில் வாளை வைத்து கொள்ளையர்கள் அச்சுறுத்தினர். வீட்டார் அச்சத்தில் திறப்பை எடுத்துக் கொடுத்தனர். உந்துருளியையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றனர்.

கொள்ளையர்கள் வந்ததும் வீட்டிலிருந்தவர்கள் அபயக் குரல் எழுப்பினர். அயலில் உள்ளவர்கள், இறப்பு வீடு காரணமாக அபயக் குரல் எழுப்புகின்றார்கள் என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் முழு மூச்சாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.5,26,36,105)

## மணல்...

டித்தனர். இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ஒருவர் இந்த விடயத்தில் தலையிட்டு அவர்களை விடுவித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

வெளிப்படுத்தல் உறுதி மூலம் 10 ஏக்கர் நிலத்தை பொற்பதிப் பிரதேசத்தில் ஒருவர் உரிமை கோரியுள்ளார். அந்த உறுதி பதிவுக்காக பதிவாளர் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டபோது, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு விவரங்கள் கோரி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகம் அது அரச காணி என்று பதில் வழங்கியுள்ளது.

இருப்பினும் அந்தப் பகுதியில் மணல் அகழ்வுக்கான முயற்சி கடந்தவாரம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பிரதேச மக்கள் தடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

வெளிப்படுத்தல் உறுதியை முடிக்க முயன்ற நபர், வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய முன்னாள் அமைச்சரின் அரசியல் கட்சியைச் சேர்ந்தோரின் உதவியுடன் நேற்றுச் சனிக்கிழமை அங்கு சென்றுள்ளார். காணியில் அளவீட்டுப் பணிகளை ஜி.பி.எஸ். கருவியின் உதவியுடன் முன்னெடுத்துள்ளனர். மக்களுக்கு இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றதும், அந்தப் பகுதியில் திரண்டனர். காணி அளவீட்டுப் பணியில் ஈடுபட்டவர்களை, அவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்தக் கோரியுள்ளனர். தாங்கள் அதிகாரிகள் என்று கூறியபோதும், அடையாள அட்டையையோ ஆவணங்களையோ காண்பிக்கவில்லை. சந்தேகமடைந்த மக்கள் அவர்களின் அளவீட்டுக் கருவிகளைப் பிடுங்கி எறிந்துள்ளனர். அவர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது அதிகாரிகள் என்று கூறியோர் ஓட்டம் பிடித்துள்ளனர். அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளும் தப்பிச் சென்றுள்ளனர். இருப்பினும் மக்களால் இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பில் கிராம அலுவலருக்கு தகவல் வழங்கப்பட்டது.

கிராம அலுவலரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததாக மக்கள் தெரிவித்தனர். இதன்போது முன்னாள் அமைச்சர் அலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு, மக்கள் பிடித்து வைத்துள்ள இருவரையும் விடுவிக்குமாறு கூறியுள்ளார். இதன் பின்னர் அங்கு திரண்டிருந்த மக்களுடனும் அலைபேசியில் உரையாடியுள்ளார். மக்களால் பிடிக்கப்பட்ட இருவரும் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் இடம்பெற்றமையை அரச அதிகாரிகள் உதயனுக்கு உறுதிப்படுத்திய போதும், தமது பெயர் விவரங்களை அவர்கள் வெளியிட விரும்பவில்லை. (ஒ.5,26,105)

## அழுகிய...

அழுகி உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள் ளது. மூன்று தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாகக் கூறப்படும் 80 வயதான, புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த விசாலாட்சி சோமஸ்கந்தன் என்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ஒ.5,160)

## படையினரின்...

வித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

வெள்ளைக்கொடிச் சம்பவத்துடன் தொடர்புடைய குரல் பதிவுகள் என்னிடம் இருக்கின்றன. தேவையான நேரத்தில் அவற்றை முன்வைக்கத் தயாராக உள்ளேன். மேலும் இராணுவ அதிகாரிகள் மேற்கொண்ட சட்ட விரோதமான நடவடிக்கைகள் சம்பந்தமான காணொலிகளும் என்னிடம் இருக்கின்றன. அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.5)

## வெளிநாட்டு...

தில்லை. அதற்கு இங்கு இடமில்லை. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. சுதந்திரக்கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகரவும் பங்கேற்றிருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒருபக்கத்தில் நிலத்துக்கான பிரச்சினை, அடுத்தது காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் எமது தாய்மாரின் பிரச்சினை, மூன்றாவது ஜெனிவாவை இழுத்துக் கொண்டு பலத்தைப் பிரிப்பதற்கான பிரச்சினை. எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை பிரிக்கப்பட்ட பலத்தை எப்படிப் பாவிப்பது என்பது.

மக்களுக்காக ஜெனிவாவில் போய் கதைத்து தீர்வை எடுப்போம் என்று அன்று உங்களுக்குக் கூறிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், நாடாளுமன்றிலே நேற்றுக் என்ன கூறினார்கள். ஜெனிவாவில் அந்தத் தீர்வை எட்டமுடியாது என்று கூறியுள்ளனர். நாட்டில் ஜனநாயக ரீதியிலே யாராவது காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் இந்த நாட்டினுடைய நீதிக்கு முன்னால் அவர்களைக் கொண்டுவந்து நீதியின் அடிப்படையிலே அவர்களுக்கு நீதியை வழங்கவேண்டும். அதற்காக வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு வந்து இங்குள்ள பிரச்சினைக்கான நீதியைத்தேட வேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு காசுக்காக ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடைய நிலை இப்படித்தான் இருக்கும். வடக்கு மாகாண மக்களுக்கு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவருவதற்கு விருப்பம் இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். எங்களுடைய நீதிமுறைமையின் கீழ் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வழிவகைகள் உள்ளன. அதற்காக வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை.

ஜெனிவாவின் 6ஆவது தீர்மானத்திலே இலங்கையில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்து வெளிநாட்டு நீதிபதிகளை வைத்து விசாரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ள போதும், அந்தத் தீர்மானத்தில் அந்தச் சொற்பதம் இருக்கிறது. இப்படிப்பட்ட நீதிமன்றம் ஒன்று அமைத்து விசாரணை செய்யப்படாது விட்டால் இலங்கையை பன்னாட்டு நீதிமன்றுக்கு அழைத்துச் செல்வோம் என்று சுமந்திரன் கூறுகின்றார். ஜெனிவாவைக் காட்டி தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. நாங்கள் இந்த நாட்டுக்குள்ளே பிரச்சினை களைத் தீர்ப்போம் - என்றார். (ஒ.5,21)

## கழிவறைகளில்...

யாழ்ப்பாண மாநகரசபையில் உள்ள தலைவர்கள் இலங்கையில் இல்லை. யாழ்ப்பாணத்தில் இல்லை அவர்கள் வெளிநாட்டில் தான் இருக்கின்றார்கள்' என்றார் தயாசிறி. (ஒ.5,21)

## தமிழர்களைக்...

தீங்கை தமிழ் மக்களுக்கு இழைக்கவில்லை. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனவாதக் கட்சி அல்ல. நாங்களும், நீங்களும் சேர்ந்துதான் சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குப் பெட்டியைத் திருடியவர்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர். தமிழ் மக்களின் இதயம்போன்று இருந்த யாழ்ப்பாணம் பொது நூலகத்தை எரித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். அதனால்தான் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தினார்கள். தமிழ் மக்களின் உயிரிழப்புக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு போதும் காரணமாக இருந்ததில்லை - என்றார்.

இறுதிப் போரின்போது கொழும்பு அரசின் அரச தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களே இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,21)

## வவுனியாவில்...

யுள்ளனர். அங்கிருந்து சில பொருள்களை மீட்டுள்ளனர். அவற்றுக்ள தொன்மையான புத்தர் சிலை, கல்வெட்டு, கலசம், விளக்கு மற்றும் மலையாள மாந்திரீக புத்தகங்கள் போன்றவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்றனர். இது தொடர்பில் எமக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. புளியங்குளம் பகுதியில் முச்சக்கர வண்டியை மடக்கிச் சோதனை செய்தபோது மேற்படிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தலவாக்கல, திருகோணமலை, மட்டக்களப்பு, நெடுங்கேணிப் பகுதியைச் சேர்ந்தவர்களை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)





# கிண்ணம் வென்றது மட்டுவில் வளர்மதி!

தென்மராட்சி, மார்ச் 24

தென்மராட்சி பிரதேச சம்பியனாக மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் கைதடி சரஸ்வதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சின் கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன் மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்திக் கழக கல்வி மேம்பாட்டுக் குழு பொறுப்பாளர் அ.கைலாயபிள்ளை யாழ்ப்பாண மாவட்ட கபடி பயிற்றுநர் பா.முகுந்தன், ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-9)

## அளவெட்டி ஞானவைரவர் கழகம் தெல்லிப்பழை பிரதேச சம்பியன்!

தெல்லிப்பழை. மார்ச் 24

தெல்லிப்பழை பிரதேச சம்பியனாக அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி தெரிவு செய்யப்பட்டது.

பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கழகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் முடிவடைந்த நிலையில் தடகளப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் காட்சி கயிறிழுத்தல் போட்டியும் இடம்பெற்றன.

போட்டிகளின் அடிப்படையில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி 58 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழக அணி 47 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்து கொண்டார்.. (ம-9)

## றேஞ்சர்ஸ் அணி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 24

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏழாலை பைஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

**யாழ். மாவட்ட கரப்பந்தாட்டம்**

வல்வை சனசமூக சேவா நிலையத்தின் பவள விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை உள்ளக விளையாட்ட ரங்கில் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து கலையரசி அணி மேபதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது.

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது.

**வளர்மதி ச.ச.நி தாச்சித் தொடர்**

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.சி.எவ். அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குமரநகர் அணியை எதிர்த்து காந்தி அணி மோதவுள்ளது.

(ம-23)

## யங்ஹென்றிஸ் அணி போராடிச் சாதித்தது!

யாழ்ப்பாணம், மார்ச் 24

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)







# வெற்றியுடன் ஆரம்பித்த சென்னை சுப்பர் கிங்ஸ்

நேற்றுஇடம்பெற்ற 12 ஆவதுஐ.பி.எல். போட்டியின் முதலாவது போட்டியில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. இதில் சென்னை அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில்வெற்றி பெற்ற சென்னைசுப்பர் கிங்ஸ் அணி முதலில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கோக்லி . பட்டேல் களமிறங்கினர். அணி 16 ஓட்டங்களைப் பெற்றபோது கோக்லி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அதிகபட்சமாக பட்டேல் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஏனைய வீரர்கள் எவரும் 10 ஓட்டங்களைத் தாண்ட வில்லை. அணி 17 .1பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களுக்குள் சுருண்டது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங், இம்ரான் தஹிர் தலா 3 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், பிராவோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

71 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நோக்கிக் களமிறங்கிய சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வற்சன் ,அம்பதிராயுடு களமிறங்கினர். அணி 8 ஓட்டங்களைப்பெற்ற போது வற்சன் ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திரும்பினார். இணைந்தார் ரெய்னா. இருவரும் இணைந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போது ரெய்னா ஓங்கி அடித்த பந்து எல்லைக் கோட்டுக்கு அருகில் பிடியெடுப்பாக மாறியது. அவர் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதிக பட்சமாக அம்பதி ராயுடு 28 ஓட்டங்களைப் பெற்றார். சென்னை அணி துடுப்பாட்ட வீரர்களும் ஓட்டங்களை குவிப்பதற்கு தடுமாறி இருந்தனர். பந்து வீச்சாளர்களின் ஆதிக்கமே இந்தப் போட்டியில் காணப்பட்டது. சென்னைஅணி 17. 4 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகள் கைவசமிருக்க தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது.



# ஐ.பி.எல். போட்டியை ஒளிபரப்ப பாகிஸ்தானில் தடை

இந்தியாவில் இடம்பெறுகின்ற ஐ.பி.எல். தொடரை பாகிஸ்தானில் ஒளிபரப்புவதற்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது. புல்வாமாவில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இந்திய இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதைக் கண்டித்து பாகிஸ்தான் அணிக்கு தடை விதிக்கக் கோரியும், அந்த அணியுடன் எந்தவொரு போட்டியிலும் பங்குபற்ற இந்திய அணி இணங்கவில்லை.

அத்தோடு பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரில் எங்கள் அணி வீரர்கள் விளையாடிய போட்டிகளை ஒளிபரப்ப இந்தியாவை சேர்ந்த பிரபல ஒளிபரப்பு நிறுவனம் மறுத்து விட்டது.

இதை எல்லாம் சகித்துகொண்டு இருக்க முடியாது என்பதால் ஐ.பி.எல். போட்டியை பாகிஸ்தானில் ஒளிபரப்புவதற்கு பாகிஸ்தான் அரசு அதிரடியாகத் தடை விதித்துள்ளது.


# பாக். – ஆஸி. ஒருநாள் இன்று

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று இடம்பெறுகின்றது.

## இசுரு உதானவின் ஆட்டம் வீணானது

# ரி-20 தொடரையும் இழந்தது இலங்கை




இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது. இலங்கை அணியின் வீரர் இசுரு உதான அபாரமாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களைப் பெற்றபோதிலும் இலங்கை அணி வெற்றியைத் தவற விட்டிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் தென்னாபிரிக்கா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மார்கரம், ஹன்றிக்ஸ் களமிறங்கினர். அணி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மார்கரம் 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இணைந்தார் டுசன். இருவருக்குமான இணைப்பாட்டமாக 116 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதிகபட்சமாக ஹன்றிக்ஸ் 65 ஓட்டங்களையும், டுசன் 64 ஓட்டங்களையும் பெற்றனர். டுமினி ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப் பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் மலிங்க, உதானே, தனஞ்செய தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டிக்வெல, பெர்னாண்டோ களமிறங்கினர். அணி ஓர் ஓட்டத்தைப் பெற்ற போதே முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. பெர்னாண்டோ ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 7 இலக்குகளை இழந்து பரிதவித்தது. இசுரு உதான அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 48 பந்துகளில் 6 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது அதிகபட்சமாக 84 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 16 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது.

பந்து வீச்சில் மோரிஸ் 3 இலக்குகளையும், ஸ்ரெயின், சம்சி தலா இரண்டு இலக்குகளையும், பிறிற்றோறிஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா அணியின் டுசன் தெரிவு செய்யப்பட்டார்.

# இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் அசத்தும் வீரர்கள்

2019ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் நேற்று ஆரம்பமானது. ஐ.பி.எல். போட்டிகளில் இறுதிப் பந்துப்பரிமாற்றங்களை வீசி ஆட்டத்தின் வெற்றையைத் தீர்மானிக்கும் பந்து வீச்சாளர்களாக ஆன்ட்ரூ டை, புவனேஷ்வர்குமார், பும்ரா, சுனில் நரேன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

**ஆன்ட்ரூ டை**

இதில் ஆன்ட்ரூ டை கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியில் இடம்பெற்றுள்ள ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளராகக் காணப்படுகின்றார். இவர் கவனிக்கப்படக் கூடிய பந்துவீச்சாளர். கடந்த தொடரில் ஆரம்ப மற்றும் இறுதிக் கட்ட பந்துப்பரிமாற்றங்களில் பந்து வீச்சில் சிறந்த பங்களிப்பை செய்திருந்தார்.

**புவனேஷ்வர் குமார்**

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் பிரதான வேகப்பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமார் காணப்படுகின்றார். இவர் பந்து வீச்சை மாற்றி மாற்றி வீசும் திறமை கொண்டவர். இறுதிக்கட்ட பந்துப்பரிமாற்றத்தில் எதிரணியின் ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்துவதில் சிறந்தவர்.

**பும்ரா**

பன்னாட்டு ரீதியில் குறிப்பிடத்தக்க சிறப்பான பந்து வீச்சாளர்களில் ஒருவராக பும்ரா விளங்குகின்றார். இவர் வித்தியாசமான கை அசைவுகளுடன் பந்து வீசினாலும், துல்லியமான யார்கர்களை வீசுவதில் சிறந்தவர். மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு முக்கியத் துருப்புச் சீட்டாக பும்ரா இருப்பார்.

**சுனில் நரேன்**

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் முக்கிய வீரராக இருப்பவர் சுனில் நரேன். மேற்கிந்தியத்தீவுகளை சேர்ந்த அவர், கடந்த 2012, 2014ஆம் ஆண்டுகளில் கொல்கத்தா அணி சம்பியன் வென்றதில் முக்கிய பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் மூன்று துண்டுக்காணிகள் விற்பனைக்குண்டு. இரண்டு பரப்பு ஒன்றேமுக்கால் பரப்புக் கொண்டவை.
துண்டுகளின் விலை
59 00.000/= - 5400.000/= பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ளது. (CS 24212)(14.17)

**076 863 7930/077 790 5438**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**24.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
காலை **9.00** மணிமுதல் நண்பகல் **12.00** மணிவரை
நேரில் சமுகம் தரவும்.



**ES பிறிண்ரர்ஸ்**
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## YOGIS BEAUTY & HOME SCIENCE ACADEMY

**CAKE கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல்**

என்னிடம் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை 30.03.2019 ஆம் திகதி பி.ப 2.00 மணியளவில் நடைபெற இருப்பதால் தயவு செய்து பயிற்சி பெற்ற மாணவிகள் என்னுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (IN 9702) (14.17)

ஆசிரியை
திருமதி.யோகினி சண்முகநாதன்

**Contact no: 077 716 4923**

HONDA

விசேடசலுகைகளுடன் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு:(வரை. ஸ்டபர்ட் மோட்டார்
(தனியார்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்.

**RATNAM BROTHERS**
A9 வீதி, கிளிநொச்சி, (கந்தசுவாமி கோயில் முன்பாக)
**021 228 3485, 077 734 0056**

**N.S. RATNAM BROTHERS**
வவுனியா - 077 039 7725, 077 178 1151
மன்னார் - 077 672 2084
மல்லாவி - 077 257 1938


# காதலியை கரம் பிடித்தார் மெஹதி ஹசன்



பங்களாதேஷ் வீரர் மெஹதி ஹசன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.. அண்மையில் பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வந்தது. இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் நியூசிலாந்து மசூதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இருந்து பங்களாதேஷ் அணி வீரர்கள் உயிர் தப்பியிருந்தனர். அவர்களுள் ஒருவருக்கே திருமணம் நடைபெற்றது.

மெஹதி ஹசன் இவர் தன் காதலி ரபேயா அக்தர் ப்ரீத்தியை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின்னர் அவர் தெரிவிக்கையில், 'எனது வாழ்க்கையின் புதிய பகுதியை நான் ஆரம்பிக்கின்றேன். என்னை அனைவரும் வாழ்த்துங்கள்' - என்றார்.


## விற்பனைக்கு

Toyata axio G grade 2006 வெள்ளை நிற கார் விற்பனைக்கு அல்லது Toyata CHR 2019 உடன் மாற்றுவதற்கும் முடியும். Full option, Automatic மிகச் சிக்கனமான எரிபொருள் பாவனை, தனி நபரின் மிகக் கவன்மான பாவனையில்.

**தொடர்பு - 070 490 3481**

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகர் பகுதியில் (யாழ் - கொட்டடி, லைடன் சந்தி அருகில்) 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**076 963 4939** (CS/23384) (11,17)

## விற்பனைக்கு

பழைய மொடல் சிங்கர் தையல் மெசின் விற்பனைக்கு. (IN/9714) (11,17)

**021 205 5150**

## அறை வாடகைக்கு

யாழ் மாவட்ட செயலகத்துக்கு 150 மீற்றர் தூரத்தில் கண்டி வீதியில் பென்றி கொஸ்ரல் ஒழுங்கையில் நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் ஒரு அறையும், சமையலறையும் வாடகைக்கு உண்டு. நிரந்தர உத்தியோகத்தில் உள்ள தனி நபருக்கு கொடுக்கப்படும். (CS 24277) (14.17)

**076 902 3732**




தமிழில் தொடர்புகொள்ள **077 3918870**
WINRICH INTERNATIONAL (PVT) LTD
Colombo 03.

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் பவர் ஸ்ரேசன் றோட்டில் 22 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 298 6612**

## தேவை

**Grade 3**
மாணவனுக்கு சகல பாடங்களும் கற்பிக்கப் பயிற்றப்பட்ட ஆசிரியர் தேவை. (IN/9713)(11,17)

**021 205 5150**

## வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு நிறுவன உதவியாளர் ( ஆண் ) தேவை.

**தகைமைகள்**
1. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. **A.L** சித்தி
3. வயது எல்லை 18 - 35 (IN/9715)(11,17)

**077 427 5311, 076 690 8986**


# மலிங்க ஓய்வு

இலங்கை கிரிக்கெட் அணியின் ரி-20 போட்டிகளுக்கான அணித் தலைவர் லசித் மலிங்க பன்னாட்டு கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்கா அணியுடனான இரண்டாவது ரி-20 போட்டியில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த போட்டியை அடுத்து கருத்து வெளியிடும் போதே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுடன் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றேன். மேலும் 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணப் போட்டியுடன் ரி-20 அரங்கில் இருந்து ஓய்வு பெறுகின்றேன்- என்றார்.


## மருந்தாளர் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் மருந்தகம் ஒன்றுக்குப் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவையாக உள்ளது. (CS/24166)(11,17)

**021 224 3565, 077 105 6256, 076 625 2796**


# மரண அறிவித்தல்

## திருமதி விசாலாட்சி சோமஸ்கந்தர்



தோற்றம் 08.06.1932 — மறைவு 23.03.2019

களையாவோடை, புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி சோமஸ்கந்தர் கடந்த (20.03.2019) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி சோமஸ்கந்தரின் மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் விநாசித்தம்பி கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் விஜயகுமார், காலஞ்சென்ற ரவீந்திரகுமார் மற்றும் மஞ்சுளா (அவுஸ்திரேலியா), விஜயகல்யாணி (கனடா), சரவணகுமார் (கல்யாணி ஸ்ரோர்ஸ், கண்டி), சிறீதேவி (ஆசிரியர், வடஇந்துமகளிர்கல்லூரி, பருத்தித்துறை), பர்வதவர்த்தினி (கனடா) ஆகியோரின் தாயாரும் சிவனேஸ்வரி, அம்பிகை (கனடா), தனேந்திரராஜா (அவுஸ்திரேலியா), சிவனேந்திரராஜா (கனடா), வினோராணி, ரவீந்திரன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற முரளீகரன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நாகரட்ணம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் அபிராமி, அபிராம், அபிரஞ்சனி, டிலானி, டினேஸ், நீர்த்திகா, நிரூபிகா, சாருஜன், சாரஜன், விதுஷன், றெனோஷன், விவேகா, சுசேத்தனன், தாரணி, கௌசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் அன்னாரது இல்லத்தில் நேற்றையதினம் (23.03.2019) சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கோரியடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.